Registered as a News Paper
பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 14 வெள்ளி - 33 10 - 16 - அக்டோபர் - 2003



## வவுனியாவை பிடித்துலுப்பும் ...

## படையினரின் மனோபாவம்



## தற்கொலை ...





## அயர்லாந்தின் டப்பிளினில்

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 10.10.2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# வெல்லப்படவேண்டிய கருத்தியல்

**ஒக்ரோபர் பத்து** தமிழீழப்பெண்கள் எழுச்சிநாளாக வடக்குக் கிழக்கெங்கும் கொண்டாடப்படுகின்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முதல் களப்பலியாகிய பெண்போராளியான மாலதியின் நினைவு தினத்தையே இதற்கான நாளாகத் தெரிந்தெடுத்திருக்கின்றனர் என்பது தெரிந்ததே.

வடக்குக் கிழக்கில் பெண் விடுதலைக்கு தலைமைதாங்குபவர்களாக விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பே இயங்கிவருகிறது. பெண்கள் சார்ந்த வேலைத்திட்டங்கள் பலவும் இவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

பெண்விடுதலை பற்றிய கருத்துருவாக்கத்தை நிகழ்த்துபவர்களாகவும், அதனை வழிப்படுத்துபவர்களாகவும், அதற்கான செயற்திட்டங்களை வகுப்பவர்களாகவும் இவர்களே இருக்கின்றனர்.

பெண்விடுதலை என்பது உலகில் இன்னமும் எட்டப்படாத கருத்தியலாகத்தான் இன்றுவரை இருந்துவருகின்றது.

பெண்விடுதலைக் கொள்கைக்கான கோட்பாடுகளும், சித்தாந்தங்களும் இடத்திற்கிடம் வேறுபட்டும், செயல்முறைகள் வேறுபட்டும் இருந்தும் கூட எங்கும் பெண்விடுதலை வெல்லப்பட்ட கருத்தியலாக இன்னும் மாறவில்லை.

மேற்குலகில் பெண்விடுதலைக் கருத்தியல் முளைவிட்டு நூற்றாண்டுகள் கடந்து விட்டன. வீடு என்ற கூட்டிலிருந்தும் குடும்பம் என்ற அமைப்பிலிருந்தும் பெண்ணை விடுவிக்காமல் பெண்ணுக்கான விடுதலை சாத்தியமில்லை என்றும் மேற்கில்தான் மொழியப்பட்டது.

குருட்டுத்தனமான சிந்தனையோடு இத்தகைய மேற்கத்தேய கோட்பாடுகளை வலிந்திழுத்து விரித்துக்கொண்டு களத்தில் இறங்கிய கீழைத்தேயப் பெண்ணிய அமைப்புக்கள் ஏராளம்.

வீட்டிலிருந்தும் ஓரளவு குடும்ப அமைப்பிலிருந்தும் வெளியேறத்தூண்டியும் விடுவித்தும் கொண்ட மேற்குலகை முதலாளித்துவம் பெண்ணை சந்தைப் பொருளாக்குவதிலும் நுகர்ச்சிப் பண்டமாக்குவதிலும் வெற்றிகண்டுவருகிறது.

பெண்மையின் பெருமையை அழகில் அர்த்தப்படுத்தியும், அழகின் மகத்துவத்தை கவர்ச்சியில் அர்த்தப்படுத்தியும் கவர்ச்சியை விற்பனைப் பொருளாக்கி பெண்ணின் வாழ்க்கையையே வர்த்தகமயப்படுத்தியிருக்கிறது மேற்குலகம்.

மிகவும் கவர்ச்சிமிக்கதாகத் தெரியும் மேற்குலகப் பெண்விடுதலைக் கருத்தியல் இன்று பிற்போக்கான முதலாளித்துவ பெண்டுக்குமுறையால் தம் தேவையின்வசம் சுவீகரிக்கப்பட்ட கருத்தியலாகவே நடைமுறையில் இருந்து வருகிறது.

பெண் தன் இளமையின் கவர்ச்சியையும் அழகையும் இழந்துபோகும் வயதின் தருணத்தில் அதிகம் தனிமைப்படுத்தப்பட்டவளாகவும் ஆதரவற்றவளாகவும் ஆகிவிடுகின்ற துர்ப்பாக்கியத்திற்கு இன்று மேற்குலகப் பெண்கள் முகங்கொடுக்க வேண்டியதாயிருக்கிறது.

மூன்றாம் உலகநாடுகளை அதிகம் கொண்ட கீழைத்தேசங்களிலோ மதமும், மரபும், சாதி, வர்க்கவேறுபாடுகளும் அரசியற்சக்திகளாக ஆகிவிட்டிருக்கும் நிலையில் பெண் விடுதலைக் கருத்தியல் தலையெடுக்கமுடியாதவாறு நசிந்துபோய்க்கிடக்கிறது.

இப்படியிருக்கையில் ஒரு தேசவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழர்கள் இந்த இருவேறு மோசமான அனுபவங்களுக்குள்ளால் பெண்விடுதலைக்கருத்தியலை முன்னெடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

தேசவிடுதலைக்கான புரட்சி மனோபாவத்திற்கு மக்கள் தயாராகிவிட்டபோது சமூக புரட்சிகளை நோக்கியும் அவர்களை இட்டுவருவது அதிகம் சாத்தியமானதாயும், ஒப்பீட்டளவில் பொருத்தமானதாயும் இருக்கும்.

விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பிடம் உலகின் பெண்ணியச் சிந்தனைகளின் வெற்றிகளையும், தோல்விகளையும் உள்வாங்கி பொருத்தமான பயன்விளைவுள்ள செயற்திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டிய பாரியபொறுப்பு உண்டு. பெண்ணியச்சிந்தனை இங்கு வெல்லப்பட்டுவரும் கருத்தியலாக வளர்வதற்கு விஞ்ஞானபூர்வமான சிந்தனையும் செயற்திட்டமுமே அவசியமானது. அதற்கு ஒரு அதிகார ஆட்சி அலகு துணைநிற்கவல்லதாக அமையலாம்.

# எமது இன்னொரு மூலவளத்துக்கு ஆபத்து



கடந்த 28.09.2003 அன்று வெளிவந்த சண்டேரைம்ஸ் - இன் பகுதியாக வந்துள்ள பினானஸ்ஸல் ரைம்சின் 04வது பக்கத்திலே ஒரு செய்திக்குறிப்பு வெளியாகியுள்ளது. வடமராட்சிப்பகுதியில் காணப்படும் மணல் குன்றுகள் எதிர்காலத்தில் ஏற்படப்போகின்ற மீள் நிர்மாணத்தேவைகளுக்கென அகழப்படவிருப்பதாகவும், அத்தோடு கண்ணாடி தொழிற்றுறைக்கும் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கும் மண்வள ஆய்வு மற்றும் சுரங்கத்தொழில் சபையின் தலைவரான ஜனப்பிரிய டிசில்வா மீள் நிர்மாணத்துக்கு அகழ்வதற்கான முதலாவது அனு மதிப்பத்திரம் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



**தமிழீழத்தின** கிழக்குக்கரையோரத்தில் காணப்படும் இல்மனைற் கனிய மணலும் அதனோடு கூடிய ஏனைய ஸேர்க்கோண் றூட்ரைல் முதலியவையும் கடந்த 04 தசாப்தங்களுக்கு மேலாக சிங்கள அரசுகளால் தொடர்ந்து சுரண்டப்படுகின்றன. ஏனைய தொழிற்றுறைகளோடு ஒப்பிடும்பொழுது கிட்டத்தட்ட இலவசமாக கிடைப்பதுபோல் அரசுக்கு இவை கிடைத்துக்கொண்டிருக்கிறன. இந்த கனிமங்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு பெரும் வெளிநாட்டு செலாவணி ஈட்டப்படுகிறது. புல்மோட்டையிலிருந்து இந்த கனியமணல் இறக்குமதியாளர் கைக்கு கிடைப்பதற்கிடையில் மில்லியன் கணக்கான பணம் எவரெவரோ பைகளுக்கு போய் சேருகிறது என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. ஆனால் இந்த கனியங்களினால் கிடைக்கும் வருமானத்தில் எத்தனை விழுக்காடானவை இக்கனியங்களை தரும் தமிழீழ பரப்புக்களுக்கு எந்த விதத்திலாவது செலவிடப்படுகின்றதா என்றால் எதுவுமே இல்லை என்று சந்தேகமில்லாமல் கூறிவிடலாம். இந்த தொழிற்சாலையின் வேலை வாய்ப்புக்கூட 100 வீதம் கிழக்கு மக்களுக்கு கிடைக்கவில்லை.

விடுதலைப்புலிகள் 'கோடியாலிற்றி' கப்பலை மூழ்கடிக்கும் வரை கப்பல்களில் இல்மனைறனை சொரியலாக ஏற்றுமதிசெய்தார்கள். தொழிற்சாலையும் இராணுவக்கிராமம் போல் இயங்கியது.தற்போது கப்பலில் ஏற்றும் சாத்தியம் அற்றுப்போய்விட்டதால் 40கிலோ பைகளில் அடைத்து வீதி வழியாக கொழும்புக்கு கொண்டுபோய் கப்பலில்ஏற்றுமதி செய்கிறார்கள்.

அமெரிக்கா தனது பெற்றோலிய வளத்தை இப்போதைக்கு பத்திரமாக வைத்துக்கொண்டு ஏனைய நாடுகளின் பெற்றோல் வளங்களை நுகர்வதுபோல் தமிழீழத்தின் வளங்களை 'கரைகாண' அரசாங்கங்கள் தொடர்ச்சியாக முனைந்து வருகின்றன.

ஜயசிக்குறு காலப்பகுதியில் எங்கள் உயர்பெறுமதி வாய்ந்த காட்டுமரங்களை இராணுவ அதிகாரிகள் திட்டமிட்ட ரீதியாக அரிந்து தங்கள் சொத்தாக்கிக்கொண்டார்கள்.

எமது கடலிலே எமது மீனவரை மீன் பிடிக்க விடாது சீனர்கள், இந்தியர்கள் என வெளிநாட்டு மீனவர்களுக்கு தமிழீழ கடற்பகுதிகளை "அடியொட்ட வறுகிக்கொண்டு" போவதற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கினார்கள். அவர்கள் எமது கடல் வளங்களை அடியோடு வறுகுவது மட்டுமல்லாமல்எங்கள் மீனவரிடம் எஞ்சியிருந்த அற்பசொற்ப உபகரண வசதிகளையும் நாசமாக்கி வருகிறார்கள். இப்படி எத்தனையோ சொல்லிக்கொண்டுபோகலாம்.

இந்த வரிசையிலே கடைசியாக இணைந்திருப்பது வடமராட்சியின் மணல். வடமராட்சி என்று பரவலாக்கி உருமறைத்தாலும் குறிப்பாக குடத்தனை பகுதி மணலையே இது குறிக்கிறது. இப்பகுதி மணல் கண்ணாடி உற்பத்திக்கு சிறந்ததென. ஆய்வுகள் தெரிவித்திருக்கின்றன. அதையும் விடமேலாக கணினி தொழில் நுட்பத்தில் பரவலாகப்பயன்படுத்தப் படுகின்ற சிலிக்கன் என்ற பொருள் இம்மணலில் இருக்கின்றது. எனவே எதிர்கால தமிழீழத்தின் கணினி தொழிற்றுறையில் இந்த மணல் பெரும் பங்கை வகிக்கமுடியும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இந்தமணலுக்கு ஆபத்து உருவாகியிருக்கின்றது.

கடந்த 28.09.2003 அன்று வெளிவந்த சண்டேரைம்ஸ் - இன் பகுதியாக வந்துள்ள பினானஸ்ஸல் ரைம்சின் 04வது பக்கத்திலே ஒரு செய்திக்குறிப்பு வெளியாகியுள்ளது. வடமராட்சிப்பகுதியில் காணப்படும் மணல் குன்றுகள் எதிர்காலத்தில் ஏற்படப்போகின்ற மீள் நிர்மாணத் தேவைகளுக்கென அகழப்படவிருப்பதாகவும், அத்தோடு கண்ணாடி தொழிற்றுறைக்கும் வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கும் மண்வள ஆய்வு மற்றும் சுரங்கத்தொழில் சபையின் தலைவரான ஜனப்பிரிய டிசில்வா மீள் நிர்மாணத்துக்கு அகழ்வதற்கான முதலாவது அனுமதிப்பத்திரம் யாழ்.அரசாங்க அதிபர் ஊடாக வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு அதிக அளவில் மணல் தேவை. குறிப்பாக எதிர்பார்க்கப்படும் மீள் நிர்மாண முயற்சிகள் ஆரம்பிக்கும் பொழுது இத்தேவை எழும் என்றும் அவர் ஆதரவாகத் தெரிவித்துள்ளார்.

நல்லது.

இங்கே ஒரு கேள்வி எழுகிறது. மீள் நிர்மாணத்துக்கு மண்தேவை என்றால் வடமராட்சிதான் கிடைத்ததா?

கண்ணாடி தொழிற்றுறையிலும் சிலிக்கன் உற்பத்தித் துறையிலும் பயன்படுத்தப்படும் பொழுது பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாக (VALUE ADDED MATERIAL) மாறக்கூடிய ஒரு பொருளை, வெறுமனே சீமெந்துடன் குழைத்து கட்டடக்காட்டுக்குள் புதைத்து விடுவதில் இந்த பெறுமதி சேருமா? இதில் உள்நோக்கம் ஏதாவது இருக்குமா?

நிச்சயமாக இருக்கிறது.

தமிழீழமோ, இடைக்கால நிர்வாக சபையோ, சமஷ்டியோ அல்லது வேறு ஏதோ ஒரு வடிவத்தில் தமிழர்கைக்கு ஏதோ ஒரு அளவு அதிகாரங்கள் கிடைக்கும் பொழுது அவர்கள் பயன்படுத்தக்கூடியதாக எந்த வளமும் மீதம் வைக்கப்படக்கூடாது என்ற உள்நோக்கம் அப்பட்டமாக தெரிகிறது.

அல்லது அந்த மணல்களில் பெரும் பாலானவற்றை கண்ணாடி உற்பத்திக்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருந்தாலும் மனம் ஆறிப்போயிருக்கும். தொழிற்சாலைகள்... வேலை வாய்ப்புகள்.... பொருண்மிய மேம்பாடு என்று கல்கலராக கனவுகள் கண்டிருக்கலாம்.

ஆனால் எமது கனவுகள் ஆழப் புதைக்கப்படப்போகின்றன.

தமிழீழத்தில் வேறு இடங்களில் மணலே இல்லையா? வடமராட்சிக்கு ஓடோடிச்சென்ற மண்வள ஆய்வுச்சபை ஏன் அந்த இடங்களை தேடவில்லை.

மண் ஒரே இடத்தில் அகழப்படுவதால் ஏற்படக்கூடிய கடல் அரிப்பு மற்றும் தாக்கங்களுக்கு மண்வள ஆய்வுச்சபை என்ன மாற்று ஏற்பாடுகள் வைத்திருக்கிறது?

ஊருக்குள் இளைத்தவன் ஆண்டி தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற நிலை வருவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது.

இந்த வடமராட்சி மணல் தொழிற்றுறைக் குரியது. பிளாஸ்ரிக் தடைசெய்யப்பட்டுக் கொண்டு போகும் போக்கைப்பார்த்தால் கண்ணாடித்தொழிற்றுறைக்கு பிரகாசமான வாய்ப்பு ஏற்படும். அகன்று விரிந்துசெல்லும் கணினித் தொழிற்றுறையைப்பார்க்கும்போது அது தெரிகிறது.

எமது தலையில் நாமே மண்ணை அள்ளிப்போட்டுக்கொள்ளவேண்டாம்.

உரியவர்கள் கவனிப்பார்களா?

**வின்சென்ற் புளோரன்ஸ்**

# புலிகளின் மாற்று யோசனைகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சி?

அமெரிக்கா புலிகளின் மீதான தடையை புதுப்பித்திருக்கிறது. இது ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்ட ஒரு முடிவுதான். இலங்கைத்தீவில் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை சர்வதேச அரங்கில் தற்சமயம் நிலவும் வலு[illegible]மநிலையை இது ஓரளவுக்கு பாதிக்கக்கூடிய ஒன்றுதான். அதாவது புலிகளின் பேரம்பேசும் சக்தியை ஒப்பீட்டளவில் பாதிக்கக்கூடிய ஒரு விசயம்தான், அதுவும் குறிப்பாக புலிகளின் டப்ளின் மாநாட்டின் பின்னணியில் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது. புலிகளின் மாற்றுயோசனைகள் விரைவில் வெளியரங்கமாகலாம் என்ற எதிர்பார்ப்பின் பின்னணியில்



இது வந்திருக்கிறது.

இதன்மூலம் அமெரிக்கா புலிகளின் மாற்றுயோசனைகளின் இறுதிவடிவத்தின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க நினைக்கிறதா?

சிலவாரங்களுக்கு முன்பு கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் புலிகளின் மாற்று யோசனைகள் "நியாயமானவைகளாயும் நடைமுறைச் சாத்தியமானவைகளாயும்" இருக்க வேண்டும் என்று கேட்டிருந்தது.

இதில் நியாயமான, நடைமுறைச்சாத்தியமான யோசனைகள் என்று அமெரிக்கா கருதுவது, பேச்சுவார்த்தைகளை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச்செல்லும் விதத்தில் அதிகம் முட்டுக்கட்டைகளைப்போடாத, அதிகம் விட்டுக்கொடுப்புக்களைச் செய்கின்ற, நெகிழ்ச்சியான மாற்று யோசனைகளைத்தான்.

இந்த யோசனைகளை வடிவமைப்பதற்கான சந்திப்புக்கள் அமெரிக்கச்சார்பு நாடுகளிலேயே நடந்து வருகின்றன. ஒருபுறம் இதை ஊக்குவித்துவரும் அமெரிக்கா இன்னொரு புறம் புலிகளின்மீதான தடையை நீடித்திருப்பதன் மூலம் காட்டவிரும்பும் சமிக்ஞை என்ன?

புலிகளின் மாற்றுயோசனைகள் தன்னுடைய கையைமீறி போய்விடாதிருக்கும் பொருட்டு, அதாவது அவர்கள் கூறுவதுபோல நடைமுறைச் சாத்தியமற்றவைகளாக அவை வந்துவிடாமல் இருக்கும் பொருட்டு இந்தத்தடைமூலம் புலிகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க அமெரிக்கா விரும்புகிறது.

அமெரிக்காவின் இந்த முடிவு வெளிவர சற்று முன்பின்னாக இதுதொடர்பாக சிலமுக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன. இதில் அமெரிக்காவினதும் மேற்குநாடுகளினதும் ரணில்விக்கிரமசிங்க அரசாங்கத்தினதும் புதிய காய்நகர்த்தல்கள் ஓரளவுக்குத் தெரியவந்தன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவதாக, ஐரோப்பிய யூனியனின் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் புலிகள் சேர்க்கப்படவில்லை என்பது. இதன் மூலம் பிரிட்டன் நீங்கலாக ஐரோப்பா முழுவதும் புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக திறந்து விடப்பட்டுள்ளது. இது புலிகளை அணைக்கும் ஒரு தந்திரம்.

இரண்டாவதாக, ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் 58வது கூட்டத்தொடரில் உரை நிகழ்த்தியபோது, அமெரிக்காவுக்கான தனது நிபந்தனையற்ற விசுவாசத்தை நிரூபிக்கும் விதத்தில் சில கருத்துக்களைக் கூறியது. அதாவது ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தலையிட்டது தவிர்க்க முடியாதது என்று அவர் அந்த உரையில் கூறியிருந்தார்.

இந்தப்பிராந்தியத்தில் இப்படி அமெரிக்காவை பகிரங்கமாக நியாயப்படுத்திய ஒரு நாட்டின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கதான் துருத்திக்கொண்டு தெரிகிறார்.

இதன்மூலம் முஸ்லிம் நாடுகளைப் பகைக்கநேரிடும் என்பது பற்றியோ, குறிப்பாக இலங்கைத் தேயிலையை அதிகம் நுகரும் அரபு நாடுகளைப் பகைப்பது பற்றியோ, அல்லது இலங்கைப்பெண்களைப் பணிப்பெண்களாக விரும்பி ஏற்று வரும் அரபு நாடுகளை பகைக்க வேண்டிவரும் என்பது பற்றியோ, இவை எல்லாவற்றையும் விடமுக்கியமாக கொழும்பில் தனது முஸ்லிம் கூட்டாளிகளை பகைக்கவேண்டி வரும் என்பதெல்லாம் பற்றியோ ரணில் பயப்பட்டதாகத்தெரியவில்லை.

மாறாக அமெரிக்காவைச் சந்தோசப்படுத்துவதும், இதன்மூலம்

**நிலாந்தன்**

புலிகள் பற்றி அமெரிக்கா எடுக்கும் முடிவு சர்வதேச அரங்கில் புலிகளின் பேரம் பேசும் சக்தியை அதிகரித்து விடாதபடி பார்த்துக்கொள்வதும்தான் அவருடைய உள்நோக்கமாய் இருந்திருக்கலாம்.

இது விசயத்தில், 1982இல் அவருடைய மாமனார் ஜெயவர்த்தன போக்லண்ட் விவகாரத்தில் பிரிட்டனை ஆதரித்த ஒரு மரபின் தொடர்ச்சியாகவே ரணிலும் காணப்படுகிறார்.

மூன்றாவது, ரணில் விக்கிரமசிங்காவின் அமைச்சர் ரவிகருணாநாயக்க, கைகூனில் நடந்த உலக வர்த்தக நிறுவனத்தின் மாநாட்டில் தாராள பொருளாதாரத்தை ஆதரித்து உரையாற்றியது மேற்கு நாடுகளுக்கு சாதகமானதாகக் காணப்பட்டது. அந்த மாநாட்டில் கலந்துகொண்ட ஏனைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பணக்கார நாடுகளின் நிகழ்ச்சிநிரலுக்கு உட்படமறுத்த ஒரு நிலையில், இலங்கைத்தீவு இது விசயத்தில் பட்டும் படாமலும் நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்த மாநாட்டையும் விக்கிரமசிங்க அரசாங்கம் அமெரிக்காவின் மீதான தனது விசுவாசத்தை நிரூபிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தியதன் மூலம் இந்தப்பிராந்தியத்திலேயே தன்னையொரு தீவிர அமெரிக்க விசுவாசியாக வெளிக்காட்டியிருக்கிறது.


நாலாவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் கிளிநொச்சிக்கு வந்து புலிகளைச் சந்திக்கக்கூடாது என்பதில் எதிர்க்கட்சிகளைப்போலவே அரசாங்கமும் புலிகளுக்கு பாதகமான ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக கொழும்பில் நம்பப்படுகிறது.

ஏற்கனவே, ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அலுவலகம் ஒன்றினை கிளிநொச்சியில் திறப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கும் அரசாங்கம் முட்டுக் கட்டைகளைப் போட்டதாக ஒருதகவல் உண்டு.

கொபிஅனான் புலிகளை கிளிநொச்சியில் வைத்து சந்திப்பதும் ஐ.நா.வின்கிளை அலுவலகம் கிளிநொச்சியில் அமைவதும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு ஒரு வித தனிநாட்டு அந்தஸ்த்தை கொடுக்கக்கூடும் என்று அரசதரப்பு அஞ்சுகிறதாம்.

இவையெல்லாம் ஒன்றைக் காட்டுகின்றது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் புலிகள் தனக்கு சமதையாக உயர்ந்து விடக்கூடாது என்பதில் எப்பொழுதும் கவனமாயும், விழிப்பாயும் இருக்கிறது.

தன்னை ஒருதீவிர அமெ



ரிக்க விசுவாசியாககாட்டுவதன் மூலம் புலிகள் தொடர்பான அமெரிக்காவின் முடிவுகள் புலிகளுக்கு முழுவதும் சாதகமாக வந்து விடாதபடி அரசாங்கம் பார்த்துக்கொள்கின்றது.

குறிப்பாக சர்வதேச அரங்கில் புலிகள் பெற்றுவரும் அங்கீகாரம் ஒருகட்டத்துக்கும் மேல் போய் விடக்கூடாது என்ற கவலை எதிர்க்கட்சிகளுக்கு மட்டுமல்ல அரசாங்கத்துக்கும் உண்டுதான்.

எனவே அமெரிக்காவின் முடிவு எதிர்க்கட்சிகளுக்கு மட்டுமல்ல ரணிலுக்கும் மகிழ்ச்சியூட்டுவதுதான். ஒரு விமர்சகர் கூறுவதுபோல புலிகளின் மீதான தடையை நீடித்ததன் மூலம் அமெரிக்கா எதிர்க்கட்சிகளிடமிருந்து விக்கிரமசிங்கவை பாதுகாத்திருக்கிறது.

குறிப்பாக இடைக்கால நிர்வாக சபைவிஷயத்தில், விட்டுக்கொடுப்புகள் செய்யுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்குப் பதிலாக புலிகளை நிர்ப்பந்திப்பது போலவே அமெரிக்காவின் முடிவு காணப்படுகிறது.

புலிகளின் பேரம்பேசும் சக்தி ஒரு கட்டத்துக்கும் மேல் உயரக்கூடாது என்பதில் எதிர்க்கட்சிகளும் அரசாங்கமும் அமெரிக்காவும் ஒரே கோட்டில் தான் நிற்கின்றன.

ஐரோப்பிய யூனியனை புலிகளுக்குத் திறந்துவிடும் அதே சமயம் அமெரிக்காவையும், பிரிட்டனையும் புலிகளுக்கு தொடர்ந்தும் மூடிவைத்திருக்கும் இரட்டை அணுகு முறையும் (இது ஏற்கனவே இப்பத்தியில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது) புலிகளின் பேரம்பேசும் சக்தியை ஒரு கட்டத்துக்கு மேல் உயரவிடாது தடுக்கும் நோக்கிலானது தான்.

மிரட்டி அணைக்கும் இந்த அணுகுமுறை ஏற்கனவே பலஸ்தீனத்தில் பிசகத்தொடங்கிவிட்டது.

சமாதானத்தில் ஈடுபடும் ஒருதரப்பினரின் பேரம்பேசும் சக்தியை மட்டுப்படுத்த முயல்வது என்பது சமாதானத்தின் உள்நோக்கங்கள் குறித்த சந்தேகங்களை அதிகரிப்பதற்கே உதவும்.

இந்நிலையில் புலிகளின் பேரம் பேசும் சக்தியை ஒரு கட்டத்துக்குமேல் உயரவிடாது தடுக்கும் நிலைமைகள் உள்ளவரை, இடைக்கால நிர்வாகசபை விவகாரத்தில் ஏதாவது பிரகாசமான திருப்பங்கள் ஏற்படுவதென்றால், இனி ஏதும் அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்ந்தால் தான் உண்டு.

பேரரசுகளின் சேவகனாய் இருப்பதில் பெருமைப்படும் ஒரு அரசாங்கம் சுயமரியாதையுள்ள ஒரு அரசாங்கமாய் இருக்கமுடியாது.

சுயமரியாதை குறைந்த ஒருஅரசாங்கம் இன்னொரு சிறுபான்மை இனத்தின் சுயமரியாதையை ஏற்றுக்கொள்ளும் அல்லது மதித்து நடக்கும் என்று நம்புவது கடினம்.

ஐ.நா.வில் உலக அபிப்பிராயத்தைப் புறக்கணித்துவிட்டு அமெரிக்காவை நியாயப்படுத்திய ஒருஅரசாங்கம், கைகூனில் மூன்றாம் உலக நாடுகளை மறைமுகமாகக் காட்டிக்கொடுத்த ஒரு அரசாங்கம், உள்நாட்டில் தமிழர்களின் சுயமரியாதையை ஓரளவுக்கேனும் பேணமுயலும் ஒரு இடைக்கால ஏற்பாட்டிற்கு இணங்கி வரும் என்று எதிர்பார்ப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவே.

மாறாக, புலிகளின் மாற்று யோசனைகளின்மீது பேரரசுகளின் அழுத்தங்களைப் பிரயோகிக்கவைப்பதன்மூலம் தனக்குச்சாதகமான ஒரு திருப்பத்தை நோக்கி நிலமைகளை நகர்த்த ரணில் விக்கிரமசிங்க முயன்று வருகிறார் என்பதேசரி.

## ஓகோ! அப்படியா!



திலக்கருணாரட்ன பிரதமருக்கு கடிதம்.

ஒருவார காலத்தினுள் குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றாதுவிட்டால் தெற்கில் இருந்து மக்களைக்கொண்டு வந்து அகற்றுவோம்.

### ஓகோ !அப்படியா!



அமெரிக்க தூதுவர். கெப்ரி லங்ஸ்ரீட்.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதை விரும்பும் அமெரிக்கா இந்த நாட்டு நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

### ஓகோ !அப்படியா!



புஷ் பிளேயர். தனித்தனியாக வானொலி உரையில்.

சதாம் இல்லாத உலகே பாதுகாப்பானது.

### ஓகோ !அப்படியா!



சந்திரிகா. களுத்துறைக் கூட்டத்தில்.

ரணில் 65 தடவை வெளிநாடு சென்றுள்ளார். நான் எனது ஆட்சிக்காலத்தில் 2 அல்லது 3 தடவை மட்டும் சென்றேன்.

### ஓகோ !அப்படியா!



ஜயலத் ஜயவர்த்தன. செய்தியாளர்களிடம்.

இவ்வருடம் வடபகுதியில் எனது அமைச்சு 634 மில்லியன் பெறுமதியான அரிசியினை கொள்வனவு செய்துள்ளது. வடமாகாணத்தில் தமிழ் அமைச்சர் என வாய்ச்சவாடல் விடும் மகேஸ்வரன் என்ன செய்திருக்கிறார்.

### ஓகோ !அப்படியா!



G.L.பீரிஸ். செய்தியாளர் மாநாட்டில்.

இ.நி. திட்டத்தினை ஐ.தே.க. மட்டுமல்ல ஏனைய எதிர்க்கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இடைக்கால நிர்வாகம் எவ்வாறு வழங்கப்படவேண்டும் என்பதில் தான் கருத்து வேற்றுமை உள்ளது.

### ஓகோ !அப்படியா!



பா.ஜ.க. செயலர். இல.கணேசன்.

வாஜ்பாயின் தேசபக்தி பற்றிப் பேசுவதற்கு சோனியா தகுதி அற்றவர்.

சாதுரியத்தின் முன்பு, சங்கடங்கள் கரைந்து விடும். —பெஞ்சமின் டிஸ்ரேலி

# நறுக்கென...

## முன்னணிகளும் பின்னணிகளும்...



'அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கக்கூடாது. அப்படி ஒப்படைத்தால் அது நாட்டின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்' என்பது பிக்குமார் சங்கத்தின் தீர்மானமாகியுள்ளது.

இதேபோன்ற வார்த்தைகளையே இதற்கு முன்னர் சிகல உறுமயக்காரர்களும் பின்னர் ஜே.வி.பியினரும் கடந்த சில மாதங்களாக பொழுதுவிடிந்தது முதல் பொழுதுசாயும் வரை புலம்பிக்கொண்டு வந்துள்ளார்கள்.

இடைக்கால நிர்வாகம் என்பது ஒரு தற்காலிக கட்டமைப்பாகும். அது போரினால் பாதிக்கப்பட்ட மக்களினதும், வடக்கு-கிழக்கு பகுதிகளினதும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை சர்வதேசசமூகமும், அமைப்புகளும் வழங்கும் நிதியைப்பயன்படுத்தி மேற்கொள்வதற்கென உருவாக்கப்படும் அமைப்பேயன்றி வேறெதுமில்லை.

இந்தக்கட்டமைப்பினை ஒரு தனிநாட்டை உருவாக்குவதற்கான முதல்படி என்றும், ரணில் அரசாங்கம் புலிகளுக்கு அவர்கள் கேட்கும் அனைத்தையும் வழங்குகின்றதென்றும் பிக்குகளும், பேரினவாதிகளும் ஒரேதொனியில் கூறத்தொடங்கியுள்ளமைதான் வியப்புக்குரியதாகும்.

மகாசங்கத்தினர்தான் அரசுக்கும் - எதிர்க்கட்சிக்கும் ஆசிவழங்குபவர்கள் எனில், இருவருக்கும் எதிரெதிர் பணிகளுக்காகவா ஆசிவழங்குகின்றார்கள் என்ற கேள்வியும் எழவேசெய்கிறது.

இப்போது பிக்குமாரே சமாதான எதிர்ப்பு பேரணிகளுக்கு அதிகம் தலைமை தாங்குகின் றார்கள்.

பிக்குமார் முன்னணிக்கு பேரினவாதிகள் பின்னணி. பேரினவாதிகள் முன்னணிக்கு பிக்குமார் பின்னணி......

எப்படியோ சிறிலங்காவை ஐக்கிய முன்னணி, கூட்டு முன்னணி,பிக்குமார் முன்னணி, தேசிய முன்னணி, தேசபக்தர்கள் முன்னணி, விடுதலை முன்னணி... என எல்லா முன்னணிகளும் சேர்ந்து, பொருளாதாரத்திலும், அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும் முன்னணி வகிக்கும் நிலைக்குகொண்டுவரப்போவதேயில்லை....

பேரினவாத நோயால் பீடித்த நாடு முன்னணிக்கு வந்ததாக வரலாறே இல்லை.

எல்லாவகையிலும் சிறிலங்காவின் அரசபீடங்களும், மதபீடங்களும் இணைந்து சிறிலங்கா மாதாவை பலிபீடத்திற்கு அழைத்துச்செல்ல தயாராகிவருகின்றன என்பது மட்டும் உறுதி.

## சந்திப்புக்களும் அறிக்கைகளும்...



மக்களின அடிப்படைப்பிரச்சினைகள் குறித்து சமாதானத்திற்கும், நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகளும், யாழ்.மாவட்டத்தில் உள்ள இராணுவ மற்றும் கடற்படை உயர் அதிகாரிகளும் அண்மையில் சந்தித்து பேசினார்கள் என்று கூறப்படுகின்றது.

இது ஒரு முக்கியமான செய்தியல்ல..... வழமையான சம்பிரதாயபூர்வமான சந்திப்பே.... இவர்கள் அடிக்கடி சந்திப்பார்கள், கைகுலுக்கி புன்னகைப்பார்கள், மக்களின் அடிப்படைப்பிரச்சினைகள் பற்றி பேசுவார்கள், பேசுவார்கள்.... பேசுவார்கள்....

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள உல்லாசவிடுதியான சுபாஷ் ஹோட்டலில் கூடி இவர்கள் பேசும் பேச்சுக்களின் அடிப்படை நோக்கம் என்னவென்பது அவர் களுக்கே தெரியுமோ என்னவோ....?

ஆக்கபூர்வமான - தீர்க்கமான முடிவுகளை முழுமையாக இவர்கள் எடுத்துள்ளார்களா என்பது சந்தேகமே.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான மக்கள் பிரச்சினைகள் அப்படியே தான் இன்னமும் உள்ளன. இராணுவத் தரப்பு மக்கள் பிரச்சினைகளைவிட தமது தரப்பு நலன்களையே முக்கியத்துவப்படுத்துகின்றன.

மீனவர்கள் பிரச்சினைகள் நாளுக்கொரு புதுவடிவம்கொள்கின்றன.

புதிய சட்டங்களும், கட்டுப்பாடுகளும்,மிரட்டல்களும், மீனவமக்களை நோக்கி கடற்படையால் விதிக்கப்பட்டும், விடுக்கப்பட்டும் வருகின்றன.

மீனவர்கள் வாழ்வியலின் அத்தியாவசியமான தொழிலியல் உரிமைகளை கடற்படை புரிந்துகொள்வதாகவுமில்லை, அங்கீகரிப்பதாகவுமில்லை.

அரசின் புரிந்துணர்வு உடன்பாட்டையே மதித்து நடக்கும் புரிந்துணர்வு அற்றவர்கள் மக்களை புரிந்துணர்வுடன் அணுகி அவர்கள் பிரச்சினைகளை மனித நேயத்துடன் பரிசீலிப்பார்கள் என நம்புவது முட்டாள்தனம்தான்.

ஆனால், சந்திப்புக்களின் பின்னர் ஆர்ப்பாட்டமாக அறிக்கை மாத்திரம் வெளியிடுவார்கள்.

ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படுமா என்பதே கேள்வி......!

ஆனாலும் அவர்கள் சந்திப்பார்கள், பேசுவார்கள், அறிக்கை விடுவார்கள் கைகுலுக்கிப் புன்முறுவலுடன் பிரியும் போது அடுத்த சந்திப்பு பற்றியும் கூறுவார்கள்..... நகர்வார்கள்.

மக்களின் பிரச்சினைகளுடன் மக்கள் தொடர்ந்தும் மல்லாடிக்கொண்டே இருக்கிறார்கள்.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது.... இதுதான் இன்றைய நிலை.

## மாற்றங்களும் எதிரொலிகளும்...



அமைச்சா எஸ்.பி திஸநாயக்காவை அறியாதோர் அரசியல் தெரியாதோரே..... அவர் முன்னர் சந்திரிகா அரசில் ஆணவமும் அதிகாரமும் மிக்க அமைச்சராக இருந்தபோது ஆடிய ஆட்டம் என்ன, பேசியவார்த்தை என்ன, தேடியசெல்வம் என்ன..... திரண்டதோர் சுற்றமென்ன.....

இப்படிச்சொல்லிக்கொண்டே போகலாம்.

அந்த தங்க மங்கை, ஒலிம்பிக் வீராங்கனை சுசந்திகா விவகாரத்தில் அவர்நாறிய நாற்றமென்ன என்பதை நாடே அறியும்.

சந்திரிகா சமாதானத்திற்கான யுத்தப்பரணியை பாட ஆரம்பித்த காலத்தில் 'ஆமா..... அம்மா' என 'ஜால்ரா' போட்டவர்களில் இவர் முக்கியமானவர்.

'முதலில் பயங்கர வாதத்தை முற்றாக இராணுவ ரீதியில் ஒழிக்கவேண்டும். பிறகு இனப்பிரச்சினை ஏதும் இருந்தால் அது பற்றிப்பேசவேண்டும்.'

'பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டால் இனப்பிரச்சினை இல்லாது போய் விடும்.

'சனாதிபதியின் தலைமையில் புலிகளை எதிர்த்துப்போராட சிங்கள பௌத்த மக்கள் அணிதிரள வேண்டும்......!'

என்றெல்லாம் ஒரு காலத்தில் பேசியவரும் இவர்தான்.

சந்திரிகா இவரை உள்ளக நிதியமைச்சராக நியமித்ததுமுண்டு, ஊழல் பேர்வழி என்று புகழாரம் சூட்டியதுமுண்டு.

ஒருகாலத்தில் சந்திரிகா புராணம் பாடிய இவர், ரணில் புகழ் பாடுபவராக இப்போது மாறியுள்ளமை சுத்த அரசியல் தனத்திற்கு சிறந்த உதாரணம்.

அப்போது அம்மணியுடன் சேர்ந்து யுத்தராகம் இசைத்தவர் இப்போது 'ஐயா' வின் பின்னால் சமாதான பஜனை பாடுகிறார்.

'சந்திரிகா தான்தோன்றித்தனமாக நடந்து தமிழர்களை ஏமாற்றிவிட்டார்.' என்கிறார். 'வடக்கு- கிழக்கு பிரச்சினையின் தீர்விலேயே நாட்டின் அபிவிருந்தி தங்கியுள்ளது என்கிறார்.

'அதிகார பரவலாக்கலே தீர்வுக்கு வழி' என்று கூறும் அவர்-


'இந்த நாட்டில் இருக்கின்ற இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து அதிகாரப்பரவலாக்கல் செய்யமுன்வரவேண்டும். காணி, நிதி, காவல்துறை அதிகாரமுடைய இடைக்கால நிர்வாகத்திற்கான அதிகாரப்பரவலாக்கலை ஏற்படுத்த வேண்டும் என்றே உலக நாடுகள் ஆர்வமாக உள்ளன....' என்றும் கூறியுள்ளார்.

எஸ்.பி திஸநாயக்காவை பார்த்து நீங்கள் மாறிய மாற்றமென்ன.....

திருந்திய திருத்த மென்ன..... என்று பாடவேண்டும் போலுள்ளதல்லவா?

**செங்குட்டுவன்**

## மதவடி மயிலர்



**செய்தி:-** *அமெரிக்கா தனது பயங்கரவாதப் பட்டியலில் புலிகளை மீண்டும் சேர்த்துக்கொண்டது.*

**மயிலர்:-** இது கடைசியில புலிகளின்ர பட்டியலில அமெரிக்கா தன்னையும் சேர்த்துக் கொள்ளுற விளையாட்டாபோய் சேரப்போகுது.

**செய்தி:-** *படையிலிருந்து தப்பி ஓடியோர் 49 ஆயிரம் பேர் என பேராதனை 'பல்கலைக் கழக ஆய்வில் முடிவு.*

**மயிலர்:-** அப்ப பாதாள உலக உறுப்பினர்கள் தொகை 49 ஆயிரத்திற்கு மேல். இவய ஒருத்தரும் ஒரு பட்டியலுக்கையும் சேர்க்க மாட்டினமாமே. அது சரி சமாதான நீதவான்கள் பட்டியலுக்க சேர்க்காததே பெரும் காரியம் பாருங்கோ.

**செய்தி:-** *புலிகளை பேச்சுக்கு இணங்க வைக்குக, கனடாவிடம் சிறிலங்கா கோரிக்கை.*

**மயிலர்:-** "அரசை இடைக்கால நிர்வாக சபைக்கு இணங்க வைக்குக" அமெரிக்காவிடம் மதவடி மயிலர் கோரிக்கை என்று ஒரு மண்ணாங்கட்டியும் செய்திபோட மாட்டானாமே.

**செய்தி:-** *கிளிநொச்சியில் மனித எலும்புக்கூடுகள் அகழ்வின் போது கண்டுபிடிப்பு.*

**மயிலர்:-** பின்ன ஆமியிருந்த இடத்தில அகழ்வுவேலை செய்தால் இரத்தினக் கல்லோவரும்.

**செய்தி:-** *பேச்சில் முஸ்லிம்களுக்கு சமபங்கு புதியஅமெரிக்கத்தூதுவரிடம் ஹக்கீம் வலியுறுத்து.*

**மயிலர்:-** கார்த்திகேசு
முதலொருக்கா புதுவை எழுதினான்.
சும்மா இருக்க சுதந்திரம் என்றால் எனக்கும் அதில 1/2கிலோ என்று, இப்ப அது சரியாப்போச்சு. இவன் 1/2 பங்கு கேக்கிறான்.

**செய்தி:-** *குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றாவிட்டால் ஒரு வாரத்திற்குள் தெற்கிலிருந்து படையெடுப்பு, சிகல உறுமய எச்சரிக்கை.*

**மயிலர்:-** பலாலியிருந்து படையை அகற்றாவிட்டால் ஒரு வாரத்திற்குள் வன்னியிலிருந்து படையெடுப்போம். மதவடி மயிலர் எச்சரிக்கை. ஏன் சிரிக்கிறியள். சிகல உறுமய எச்சரிக்கை விடுக்கலாமெண்டா, இந்த மயிலர் விடுக்கக் கூடாதோ.

**செய்தி:-** *வரவு செலவுத்திட்டத்தை தோற்கடித்து ஐ.தே.கட்சியை கவிழ்க்க பொ.ஐ.முன்னணி இரகசியத்திட்டம்.*

**மயிலர்:-** இந்தச் செய்தி மட்டும் பரகசியம் பாருங்கோ.

**செய்தி:-** *வாழ்க்கைச்செலவு அதிகரிப்பை எதிர்த்து சுதந்திரக் கட்சிநேற்று மறியல் போராட்டம்.*

**மயிலர்:-** அப்படியெண்டால் மறியல் போராட்டத் திணைக்களம் ஒன்றைத் தொடங்கி அதற்கு வேலைக்கு ஆட்கள் எடுக்கலாம். இந்த நாட்டுக்கு அது தொடர்ந்து அத்தியாவசியத் தேவையாயிருக்கும் தானே.



சீர்திருத்தம் என்பது, தவறுகளைத் திருத்துவது. புரட்சி என்பது, அதிகார மாற்றம் செய்வது. -புல்வர்லிட்டன்

*"அடேல் பாலசிங்கம் அவர்கள் எழுதிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உள்ளிருந்து நோக்கும் சுதந்திர வேட்கை எனும் நூலிலிருந்து 'பெண்களும் புரட்சியும்' என்ற தலைப்பில் வரைந்திருக்கும் பகுதி இது"*



# பெண்களும் புரட்சியும்

**காலம்** கட்டவிழ்ந்து செல்கிறது. உலக ஒழுங்கை உலுப்பிவிடும் மாற்றங்களையும் திருப்பங்களையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. மண்வீடுகள் போல ஆட்சியமைப்புக்கள் கவிழ்கின்றன. அறிவியற் கோட்பாடுகளும் அரசியல் சித்தாந்தங்களும் அர்த்தம் இழந்து செத்துவிடுகின்றன: சில,வரலாற்று குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுகின்றன. தேசிய விடுதலையும், சமூகப்புரட்சியும் நிகழ்ந்த நாடுகளிச் பெண்களின் நிலையில் மாற்றம் ஏற்படவில்லை என விரக்தியும் ஏமாற்றமும் தெரிவித்து பெண்ணியவாதிகளிடமிருந்து கண்டன விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன.

உலகத்தின் ஆட்சியதிகாரம் ஆண்களின் கையில் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆண்வர்க்கம்,தனது ஆணாதிக்க சிந்தனைப் போக்கை கைவிட்டு,அதிகாரத்தை பெண்களுக்கு பகிர்ந்து அளித்து விடும் எனக்



கனவு காணும் கற்பனாவாதி அல்ல நான். பெண்விடுதலை என்பது, நீண்டதும், சிக்கலானதுமான ஒரு செல்நெறி. பெண்கள் விடுதலை பெறும் ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தி,ஒரு உன்னதமான உலக ஒழுங்கை கட்டியெழுப்புவதாயின், பெண்கள் அரசியல் விழிப்புணர்வோடு, தாம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் மீளாய்வு செய்து வரவேண்டும். தேசிய விடுதலைப்போராட்டத்தில் பங்குகொள்ளும் பெண்களுக்கு தேசப் பற்றுணர்வோடு பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வும் இருப்பது அவசியம். இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நான் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கிறேன். 1983 ல் 'பெண்களும் புரட்சியும்' என்ற தலைப்பில் நான் எழுதிய சிறு நூலில், ஒரு தேசம் சுதந்திரம் அடைவதற்கும், அந்தத்தேசத்தில் சமூக மாற்றம் நிகழ்வதற்கும் பெண்கள் தேசிய விடுதலைப்போராட்டத்தில் நேரடியாகப்பங்குகொள்வதோடு, பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வுடனும் செயற்படவேண்டும் என வலியுறுத்தினேன். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொள்ளும் பெண்கள், தமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவங்களை இனம்கண்டு, அவை பற்றி விவாதித்து,அவற்றை அகற்றிவிடப் போராடவேண்டும். அப்படியான போராட்டங்களே தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்ப்பதுடன், புரட்சிகரமான சமூக விடுதலைக்கும் வழிகோலும். இக்கருத்துக்களை நான் எனது நூலில் வலியுறுத்தியிருக்கின்றேன்.

தமக்கு விடுதலை கிட்டும் என்ற நம்பிக்கையோடு, பெண்கள் பங்குகொள்ளும் ஒரு தேசிய போராட்டத்துடன் நானும் நெருக்கமாக இணைந்து நிற்பதால், மேற்குறிப்பிட்ட கருத்துக்களை நான் எனது எழுத்துகளிலும் வற்புறுத்தி வந்திருக்கின்றேன். 1991 ல் நான் எழுதிய கட்டுரை ஒன்றில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றிபெற்ற சமூகங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும், பெண்களுக்கு அதிகாரமளிக்கும் விடயம் சம்பந்தமாகவும் நான் விவாதித்துள்ளேன். 'ஒரு பெண்ணியப்பார்வை' என்ற எனது ஆங்கிலக்கட்டுரை, '**சோசலிசமும் பெண்கள் ஒடுக்குமுறையும்**' என்ற தலைப்பில, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு 'சுதந்திரப் பறவைகள்' என்ற பெண் புலிகளின் அதிகாரப்பூர்வமான ஏட்டில் பிரசுரமாகியது. புரட்சிக்கு பிந்திய சோசலிச நாடுகளில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கலான பிரச்சினைகள் பற்றி எழுதியிருந்தேன். இக்கட்டுரை நீளமான ஆழமான ஆவணமாக அமையாதபோதும், இச்சமூகங்களில் பெண்கள் பல முரண்பாடுகளை சந்தித்து நிற்கிறார்கள் என்பதையும் சிக்கலான சமூக அரசியற் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்பதையும் விளக்கியிருந்தேன். தமிழரின் விடுதலைப் போராட்டத்திலும் இது போன்ற தவறுகள் நிகழாதிருக்கவேண்டும் எனக் கூறி, கட்டுரையின் முகவுரையில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தேன்.

"ஒரு பலம்வாய்ந்த அரசியல் சக்தியாக பெண்கள் உருவாக்கம் பெறவேண்டும். அவ்விதம் இருந்தால்தான், ஒரு கட்சியினது அல்லது அரசாங்கத்தினது முழுமையான வேலைத்திட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முக்கிய அம்சமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். பொருளாதாரத்திட்டமிடல் அதற்கான நிதி ஒதுக்கீடுபோன்றவிடயங்களில் முக்கியமான தீர்மானங்களை எடுக்க ஏதுவாக இருக்கும். ஆண்கள் முக்கியத்துவம் கொடுக்கும் விடயங்களுக்காக பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பலியாகாது இருக்கவேண்டும். இது சாத்தியம் ஆவதென்றால், அடிமட்டத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட்ட மகளிர் அமைப்பு 'அரசியல் அதிகாரமுடையாதாக மாற்றியமைக்கப்படவேண்டும். ஆண்களுடன் சமத்துவம் பெறுவது என்ற கோட்பாடுகளுக்கு அப்பால் பெண் உரிமைப்போராட்டத்தின் இலக்கு அமையப்பெறவேண்டும். ஆணாதிக்கப் பார்வையில் தான் இந்த உலகம் நெறிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆண்களின் சிந்தனை, வாழ்க்கை முறை, செயற்பாடுகள், அதிகார உறவுகள் ஆகியன பெண்களின் தலைவிதியை தீர்மானிக் கும் அளவு கோல்கள் ஆகக்கூடாது. ஆணாதிக்கத்தால் வரையறுக்கப்பட்ட இவ்வுலகில், பெண்களின் உரிமைப்போராட்டம் உண்மையான பெண் விடுதலையை இலக்காகக் கொண்டிருக்கவேண்டும். பெண்விடுதலை எனும் பொழுது அது ஆண் விடுதலையோடும் தொடர்புடையது. ஆண்களும் தமது பழமைவாத உலகப்பார்வையிலிருந்து விடுபடவேண்டும். பெண் விடுதலை என்பது முற்றிலும் புரட்சிகரமான ஒரு அரசியல் இலட்சியத்தை குறித்து நிற்கிறது. பெண்கள் முழுமையான விடுதலை பெற்று வாழும் ஒரு புதுமையான சமுதாயத்தையும் புதிய உலக தரிசனத்தையும் அது குறிக்கிறது. இப்புதுமையான சமுதாயத்தைக்கட்டியெழுப்புவதாயின், தேசிய அரசியலை நிர்ணயிக்கவல்ல அரசியல் அதிகாரம் பெண்களுக்கு தேவை. பெண்களின் மேம்பாட்டையும் சமூகத்தின் உயர்ச்சியையும் இலக்காகக்கொண்ட இப்புதிய பார்வையை 'பெண்ணிய நோக்கு' எனக் கூறலாம்."

மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் சர்வதேச பெண்ணியவாதிகள் எழுப்பும் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டது. ஆயுதபோராட்டத்தில் பங்குபற்றுவதால் மட்டும் அவர்களது எதிர்கால விடுதலையை உறுதிப்படுத்த முடியாது. சமூகத்தின் இரும்புப் பிடியை உடைத்தெறிந்து, முழுமையான விடுதலை பெறுவதாயின் பெண் உரிமைப்போராட்டம் தொடர்ச்சியானதாக வளர்ச்சி உடையதாக அமையவேண்டும். ஆணாதிக்க சிந்தனையால் வனையப்பட்ட உலக ஒழுங்கை ஏற்றுக் கொள்வதாலும் பெண் விடுதலைக்கு அது வழி கோலப போவது இல்லை. ஆண்களின் கருத்துலகிலும், பார்வையிலும் அடிப்படையான மாற்றம் அவசியம். எல்லாவற்றிக்கும் முக்கியமாக, அடிமட்டத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட்ட ஒரு மகளிர் அமைப்பு தேசிய உயர் மட்ட அரசியலில் பங்குகொள்வது அவசியம்.

இனி பெண் புலிகள் பற்றிய ராதிகா குமாரசுவாமியின் கண்டன விமர்சனத்திற்கு வருவோம். விடு தலைப்புலிகளின் பெண் போராளிகள் 'அதிகாரமற்றவர்களாக' இருக்கிறார்கள் என்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் இயக்கத்தின் உயர்மட்டத்தில் அவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை என்றும் ஒரு தவறான வாதத்தை முன்வைக்கிறார் ராதிகா. நீண்ட காலமாகவே ஆயுத போராட்டத்தில் பங்குகொண்டுவிடுதலை இலட்சியத்திற்கு பெண் போராளிகள் ஆற்றியமகத்தான பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இரு பெண் தளபதிகளுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டு இயக்கத்தின் உயர் பீடமான மத்திய குழுவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தலைமைப்பீடம் எடுக்கும் முடிவுகளில் பங்குகொள்வதோடு பொதுவாகவே பெண்களின் நலனுக்காக உயர்பீடத்தில் குரல் எழுப்பி வருகிறார்கள். பெண்களின் இராணுவப் பிரிவின் பல்வேறு படையணிகளையும் அரசியல் மற்றும் பிரிவுகளையும் சேர்ந்த மூத்த பெண் போராளிகள் கூட்டமாக எடுக்கும் முடிவுகளை கேணல் தரத்திலுள்ள இவ்விரு பெண்தளபதிகளும் இயக்க தலைமைக்கு சமர்ப்பிப்பார்கள். விடுதலைப் புலிகளின் இயக்கக் கட்டமைப்பில் உள்ள பல்வேறு, அலகுகளிலும், பெண்போராளிகள் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து வருகின்றார்கள் இவர்கள், எடுக்கும் முக்கிய தீர்மானங்கள் சமுதாய இயக்கம் மீது தாக்கத்தை விளைவிக்கிறது. உதாரணமாக, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ள நீதிநிர்வாக சேவையில் நீதிபதிகளாகவும், உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவும் பெண்கள் பணிபுரிகின்றார்கள். இவர்கள் எடுக்கும் முக்கிய தீர்ப்புகளும், தீர்மானங்களும் சமூகத்திலும், சாதாரண மக்களின் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்கிறது. அத்தோடு பெண் சட்டத்தரணிகள் பெண்கள் சம்பந்தப்பட்ட பல சிக்கலான பிரச்சினைகளுக்கு நீதிவேண்டி வாதாடிவருகிறார்கள். விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவை எடுத்துக்கொண்டால், அப்பிரிவில் முதலாவது மருத்துவராக இணைந்தவர் ஒரு பெண். இப்பெண் மருத்துவரின் கடும் உழைப்பால் நூற்றுக்கணக்கான மருத்துவ தாதிகள் உருவாக்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் நிதியைக்கையாளுவதிலும் பெண்கள் முக்கிய பங்களிக்கிறார்கள். தத்தம் பிரிவுகளது நிர்வாகத்தையும்,நிர்வாகச்செலவுகளையும் பெண்களே பொறுப்பேற்றுநடத்துகிறார்கள். விடுதலைப் புலிகளின் ஊடகம், கருத்துருவாக்கம், மற்றும் பரப்புரைத்துறைகளில் பெண்களின் பங்கு முக்கியமானது. பெண்கள் கூட்டாக சேர்ந்த படங்கள் , குறும்படங்கள்,விவரணப்படங்கள், செய்தித் தொகுப்புகள் என்ற வகையில் கருத்துருவாக்கப்படைப்புகளைத்தயாரித்து வருகிறார்கள்.இது ஒரு புறமிருக்க, மகளிர் பிரிவின் அதிகாரபூர்வ ஏடாக ஒரு மாதாந்த இதழை பெண் போராளிகளே எழுதியும் பிரசுரித்தும் வருகிறார்கள். பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தில் பணிபுரியும் பெண் போராளிகள், போரினால் பாதிக்கப்பட்ட பெண்களினதும், இடம் பெயர்ந்த பெண்களினதும் புனர்வாழ்வுக்கும், மேம்பாட்டிற்குமாக சமூக- பொருளாதார வேலைத் திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தியும் வருகிறார்கள். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நிலவும் நிர்வாகக்கட்டமைப்பிலும் பெண் போராளிகள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். சில பகுதிகளின் அரசியல் நிர்வாகப் பணிகளை பெண்களே பொறுப்பேற்று நடத்துகின்றார்கள். இந்த நிர்வாகஅமைப்புகளின் பெண் பொறுப்பாளர்களுக்குக் கீழ் ஆண் போராளிகளும் பணிபுரிகின்றார்கள். அரசியல் நிர்வாகதுறைகளில், கௌரவத்துடனும், தன்னம்பிக்கையுடனும்,முக்கிய பொறுப்புக்களைத் தாங்கி பணிபுரிந்து வரும் பெண்புலிகள், இயக்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அதிகாரம் உடையவர்களாகவே மாறிவருகிறார்கள். பெண்களுக்கு அதிகாரமளிப்பது என்பது, சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்து படிப்படியாக மேல் நோக்கிய வளர்ச்சியையும் உயர்ச்சியையும் கொண்டதாக அமையவேண்டும். எந்தெந்த மட்டத்தில்,எந்தெந்தவகையில் பெண் போராளிகள் அதிகாரமுடையவர்களாக செயற்படுகிறார்கள் என்பது ராதிகா குமாரசுவாமிக்கு அறவே தெரியாது. அதே போலவே, ஆயிரமாயிரம் தமிழீழப் பெண்கள்,தமது சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குநிவாரணமும்,உதவியும் ஆலோசனையும் தேடி பெண்புலிகளின் அரசியல், நிர்வாக செயலகங்களுக்கு படையெடுக்கிறார்கள் என்பதும் ராதிகாவுக்குத் தெரியாது.

விடுதலைப் புலிகளிகளின் அதிகார பீடத்தில், தற்போது பதவியும் பொறுப்பும் வகிக்கும் பெண் போராளிகளின் எண்ணிக்கை குறித்த சில நாற்காலி விமர்சகர்களுக்கு திருப்தி இல்லாமல் இருக்கலாம். ஆயினும் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் நடுத்தர மட்டத்தில், பெருமளவு பெண் புலிகள் பணியாற்றிவருகிறார்கள் என்பது உண்மை. இவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் அதிகாரமும் பொறுப்பும் உள்ள உயர்மட்ட பதவிகளுக்கு உயர்த்தப்படுவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. பெண் போராளிகளுக்கு கிட்டும் புதிய வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்களின் பரப்பை பார்க்கும் போதும், இளம் புலிப் பெண்களின் அபாரமான தன்னம்பிக்கையையும் தன்மதிப்பையும் பார்க்கும் போதும், பெண்களுக்குப் படிப்படியாக அதிகாரமளிக்கப்பட்டு வருகின்றன என்று திடமாகச் சொல்லலாம். பெண்புலிகள் மட்டுமன்றி, தமிழீழ பெண் சமூகமும் உரிமைகளும் அரசியல் அதிகாரமும் பெற்ற சக்தியாக வளர்ச்சிப்பெற்று வருகிறது எனலாம்.



நேர்நோக்கு

# படையினரின் ஆக்கிரமிப்பு மனோபாவம்

யாழ். நகரின் பிரதான வீதியில் கடந்த சனியன்று இடம்பெற்ற கோரவிபத்து குடாநாடு முழுவதிலும் பதற்ற நிலையையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளதுடன் பெரும் சோகத்தையும் உண்டாக்கியுள்ளது. சிறிலங்கா இராணுவத்தின் கனரகவாகனம் மோதி இரு பொதுமக்கள் பலியான சம்பவமே இத்தகையதொரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

விபத்துக்கள் பல்வேறு காரணங்களால் நடைபெறுகின்றபோதும் - அதில் எத்தரப்பில் தவறு உள்ளது? என்கின்றகேள்வி எழுகின்றபோதும் திட்டமிட்டே விபத்துக்களை ஏற்படுத்துவதாக எவரும் கருதுவதில்லை. அவை தற்செயலானவை என்றே எவரும் கருதுவர். இதில் பாதிப்புகள் அதிலும் உயிரிழப்புகள் ஏற்படும்போது கோப உணர்வும் சோக உணர்வும் ஏற்படுவது சகஜமே. ஆனால் அதற்காக எவரும் பாரதூரமான நடவடிக்கையில் இறங்கிவிடுவதில்லை.



ஆனால் விபத்தில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பு பாதிக்கப்பட்ட தரப்புக்குச்செய்யவேண்டிய உடனடி உதவிகளை மேற்கொள்ளாதோ அதாவது அடித்துவீழ்த்திவிட்டு தப்பி ஓடினாலோ அல்லது தடயங்களை மறைக்க முற்பட்டாலோ அவ்விபத்தைப்பார்க்கின்றவர்களுக்கு கோப உணர்வு அதிகரிப்பது வழமையானதே. விபத்தில் சிக்கியுள்ளவரின் உயிரை பாதுகாக்க அப்போது அச்சூழலில் உள்ளவர்கள் எவராவது நடவடிக்கை எடுக்காவிட்டால் கூட அது பாரதூரமான தவறான விடயமாகும்.

இவ்வாறானதொரு நிலையில் சட்டம் ஒழுங்கையும் அமைதியையும் பேணுவதாக கூறிக்கொண்டு யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் தமது தரப்பை சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாப்பதற்காக தடயங்கள் அனைத்தையுமே மூடி மறைத்துவிட முயன்றமையானது எத்தகைய கோப உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும்? என்பதற்கு யாழ். நகரச்சம்பவம் எடுத்துக்காட்டாகும்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் 51 விபத்துக்கள் இராணுவ வாகனங்களால் ஏற்பட்டிருக்கின்றன எனவும் இவற்றில் 10 பேர் பலியானதாகவும் பலர் காயமடைந்திருப்பதா கவும் தகவல் ஒன்று கூறுகின்றது. இவை பதிவு செய்யப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கையென்றே கொள்ளவேண்டும்.

இங்கு ஏனைய விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களுக்கும் இராணுவவாகனங்களுடன் ஏற்படும் விபத்துக்களுக்கான காரணங்களுக்கும் பல வேறுபாடுகள் உள்ளன.

அதாவது யாழ். குடாநாட்டில் குவிக்கப்பட்டுள்ள 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரின் போக்குவரவு, விநியோகம், பாதுகாப்புக்கென ஆயிரக்கணக்கான வாகனங்கள் யாழ்.குடாநாட்டில் பாவனையில் உள்ளன. இவ்வாகனங்களை ஓட்டுவோர் மக்கள் குறித்து எவ்வாறான மனநிலையைக் கொண்டுள்ளார்கள் என்பதைப்பார்க்க வேண்டும். இவர்கள் யாழ் குடாநாட்டு மக்கள் மீது விரோதமும், குரோதமும் கொண்டவர்களாக அவர்களை அடிமைகளிலும் கேவலமாகவே பார்க்கிறார்கள் என்பது வெளிப்படையாகும்.

இவ்விபத்தையடுத்து குறிப்பிட்ட இடத்திலுள்ள இராணுவக்காவலரணை அகற்றுமாறு பொதுமக்கள் போராட்டம் நடத்தியதற்காக அங்கிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் "புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாவிட்டால் அனைவரையும் சுட்டு வீழ்த்தியிருப்போம்'' எனக்கூறியிருப்பது இவர்களின் மனநிலையை புரியவைக்கப்போதுமானது. இவர் அப்படி கூறியது மட்டுமல்ல, போராட்டம் நடத்திய மக்கள் மீது அவர்கள் அன்று நடத்திய தாக்குதல்களும் மிரட்டல்களும் உண்மையிலேயே அவர்கள் செய்யக்கூடியவர்கள் என்பதை உணர்த்தியிருக்கின்றன. இரண்டாவதாக இவ்வாறு இராணுவ வாகனங்கள் சம்பந்தப்படும் விபத்துகளின் போது இராணுவச் சாரதிகளை காப்பாற்ற இராணுவ உயரதிகாரிகளும் பொலிசாரும் முயல்வது. புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையிலுள்ள அமைதியான சூழலில் நடைபெற்ற விபத்தின் போதே தடயங்களை மறைக்க இவர்கள் எடுத்த முயற்சியானது போர்க்காலத்தில் இவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. மிக அண்மைக்காலங்களில் கூட மக்கள் நடமாட்டம் குறைந்த சாலைகளிலும் நடமாட்டம் குறைந்த வேளைகளிலும் இராணுவ வாகனங்களால் மோதி விட்டு ஓடிச்சென்ற பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

எனவே தமிழ்மக்கள் தொடர்பில் விபத்தில் சம்பந்தப்பட்ட இராணுவச்சாரதிகளை சட்டத்தை நிலைநாட்டுவோரே பாதுகாப்பது அவர்கள் மத்தியில் இது குறித்து அசட்டை நிலையைத் தோற்றுவிக்கிறது.

இவ்வாறு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாதது மட்டுமல்ல, முறைப்பாடு செய்யச்சென்றால் பாதிக்கப்படும் மக்களுக்கே மேலும் அவலங்கள் ஏற்படுவது இராணுவச் சாரதிகளுக்கு மேலும் உற்சாக மூட்டும் விடயமாகும்.

இவை ஒரு புறமிருக்க சிறிலங்கா இராணுவத்தினர் யாழ் குடாநாட்டில் அமைத்திருக்கும் பல இராணுவக்காவலரண்கள் விபத்துகள் ஏற்படகாரணங்களாய் அமைந்துள்ளன. யாழ். இலுள்ள ஒடுங்கிய வீதிகள், வாகன அதிகரிப்பு என்பன அங்கு விபத்துக்கள் ஏற்படக்காரணங்களாயிருக்கின்றன. இந்நிலையில் வீதியின் பெரும்பகுதி - ஏறத்தாழ அரைவாசி வரை ஆக்கிரமித்து நிற்கின்ற இராணுவக்காவலரண்கள் போக்குவரத்துக்குப்பெரும் இடையூறாகவிருக்கின்றன. பல முக்கிய வீதிகள், போக்குவரத்து நெருக்கடிமிக்க சந்திகளிலெல்லாம் இவ்வாறு தான் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. போர்க்காலத்தில் அமைக்கப்பட்ட காவலரண்கள் பல இன்னமும் சிறிதும மாற்றியமைக்கப்படாது மக்களின் போக்குவரவுக்கு இடையூறாகவே இருக்கின்றன. இந்நிலையில் இவ்வாறான காவலரண்களைக்கூட வீதிப்போக்குவரவுக்கு இடையூறாக இல்லாது மாற்றியமைக்கச் சிறிலங்காப்படையினர் முன்வரப்போவதில்லை. "இதுவரை இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்ட 51 விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. அதற்காக 51இராணுவ காலரண்களை அகற்ற முடியுமா?" என்ற இராணுவ அதிகாரி ஒருவரின் கேள்வி இதனையே புலப்படுத்துகிறது.

ஆக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வீதிவிபத்தும் அதனைத்தொடர்ந்த சம்பவங்களும் சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு மனோபாவத்தையும் அதற்கு எதிராக மக்கள் கொண்டுள்ள போராட்ட உணர்வையுமே வெளிப்படுத்துகின்றன.

**வேலவன்**

# வவுனியாவைப் பிடித்துலுப்பும் நோய்க்கூறு

**வவுனியாவில்** இந்த வாரம் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்ட இருசிறுமிகளை அவ்வாறு ஈடுபடுத்தியவர்களிடமிருந்து மீட்டு விடுதலைப்புலிகள் கண்காணிப்புக்குழு மூலம் பெற்றோர்களிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

இதற்கு முதற்கிழமை வவுனியாவின் விடுதலைப்புலிகள் அரசியற்துறைப்பொறுப்பாளர் திரு.எழிலன் பாலியல் துர்நடத்தையில் ஈடுபடுவோர், ஈடுபடுத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்திருந்தார்.



வவுனியாவில் இரு சிறுமிகள் விவகாரம் ஒரு அசாதாரண சம்பவம் இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

வவுனியாவின் கலாச்சாரக் கட்டுக்கோப்பு ஒழுங்கு வழமையிலிருந்து சிதைக்கப்பட்டுவிட்டது. வாழ்வு பற்றிய ஒழுக்கக்கோட்பாடும் வடக்கிற்குரிய தனத்திலிருந்து மாற்றமடைந்து வருவதை இங்கு காணமுடியும்.

வவுனியா தன்னியல்பில் வளர்ச்சியடைந்து வந்த ஒரு நகரமல்ல. அது ஒரு மிகச்சிறு பட்டணமாகவே இருந்தது. புலிகளின் கட்டுப்பாட்டு நிலப்பரப்பில் பொருளாதாரத்தடை ஏற்பட்டபோது அது ஒரு கொள்வனவு மையமாக மாறிய சந்தர்ப்பத்தில்தான் வியாபார நிலையங்களால் நகரமயமாவதற்குரிய முதல் எத்தனத்தை இது பெற்றது.

பின்னர் 'றிவிரச'வின் போது லட்சக்கணக்கில் வன்னிக்கு இடம்பெயர்ந்த குடாநாட்டு மக்களும் பின்னர் சத்ஜெயவால் இடம்பெயர்ந்த கிளிநொச்சி மக்களும் வன்னியில் ஏற்பட்ட பொருளாதார, சுகாதார, வாழ்வியல் நெருக்கடிகளால் வெளியேறிய போது வவுனியாவில் "நலன்புரிநிலையங்களை" இராணுவம் அமைத்து அதில் இவர்களை தங்க நிர்ப் பந்தித்தது. பிறபிரதேசங்களுக்குச் செல்வதற் கான சுதந்திரத்தை மறுத்து அனுமதி வழங்கல் என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து "நலன்புரி நிலையங்கள்" என்று சொல்லப் பட்ட அந்த கலாச்சார சீரழிவுக்கூட்டுக்குள் தங்க வற்புறுத்தியது.

ஆயிரக்கணக்கிலான குடும்பங்கள் இந்த "நலன்புரி நிலைய" வாழ்வுக்கு உட்படுத்தப் பட்டன. அந்த நிலையங்களில் தங்கும் மக்களுக்கு கவர்ச்சியான நிவாரணத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் மூலம் அரசு வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருக்கும் மக்களை வெளியேற்றுவதில் வெற்றியீட்ட முயற்சி எடுத்தது. அவ்வாறு வெளியேறி வரும் மக்களை இந்த நலன்புரி நிலையங்களில் அடிக்கணக்கேயான மிகக்குறுகிய இடப்பரப்பில் குடும்பங்களை தங்க வைத்து ஒழுக்கக்கோப்பற்ற ஒரு வாழ் நிலைக்கு குடும்பங்களை தள்ளிவிட்டது.

தாம்பத்திய உறவின் அந்தரங்கத்தைப் பேணமுடியாத சூழலுக்குள் எல்லாமே அரங்கத்தில்தான் நடந்தன. அதனைப்பார்க்கவும் அதனுடன் வாழவும் இளைய சமூகம் நிர்ப்பந்திக்கப்பட்டது. இந்தப்பின்னணி முறைகேடான உறவுகளுக்கு வழிவகுத்தது.

கல்விக்கோ, தொழிலுக்கோ வாய்ப்பற்றிருந்த ஆயிரக்கணக்கான இளையவர்களை முழுநேர இலவச சினிமாப்படக் காட்சிகளை ஒழுங்குபடுத்தி அதில் மூழ்கடித்தது இராணுவம். இவைஎல்லாமாக இணைந்து இளையவர்களின் பாலியல் உணர்வைத்தூண்டி, ஒழுக்கக்கோப்பான வாழ்வை சிதைப்பதன் மூலம் இந்தச்சீரழிவின் காவிகளாகவும் இவர்களை உருவாக்குவதில் அரசு வெற்றிபெற்றது.

ஆரம்பத்தில் வர்த்தக நிலையங்களால் நகர மயமாதலுக்கான அடிப்படையைகொண்டிருந்த வவுனியா இவ்வாறு இடம்பெயர்ந்து வந்த மக்கள் திரளால் முழுதாய் இயல்பை மீறி நகரமயப்பட்டது. ஆனால் அந்த நகர மயமாதல் நோய்க்கூறு உள்ளதாய் ஆவதற்கு இந்தப்பின்னணி தவிர்க்கவியலாததாய் இருந்தது.

இயல்பற்ற விகாரத்தனம் கொண்ட இந்த நகர உருவாக்கத்தில் மக்கள் ஒருவருக்கொருவர் அதிகம் அறிமுகமற்றவர்களாக இருந்தனர். சமூக அந்தஸ்தை பேணுவதற்கான வாய்ப்பு அல்லது தேவை இதில் மிகவும் குறைவாக இருந்தது. சமூகத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டும் என்ற நிலையும் இதில் இல்லாதிருந்தது. இவையே ஒழுக்கக்கோப்பற்ற வாழ்வுக்கு மக்களை தள்ளியது.

பெற்றோர் தமது பிள்ளைகளை நல்வழிப்படுத்த முடியாதளவிற்கு அவர்களின் நிலை இருந்தது.

இந்த நிலமை அதன் சூழல்களையும் அயற்கிராமங்களையும் பாதிக்கவல்லதாக மாற்றம்கண்டது. கட்டுப்படுத்தவியலாத நோய்க்கூறாக இது மாறுவதற்கு அரசின் "நலன்புரி நிலையத்திட்டம்" முக்கிய காரணம். அவர்களின் திட்டமிடல் நோக்கில் அது கணிசமான அளவில் வெற்றி கண்டிருக்கின்றது என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இப்பொழுது இறுதியாக நடந்த அந்த இரு சிறுமிகள் விவகாரத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதாக கடிதம் எழுதி வைத்துவிட்டு வருமாறு அவர்களை வழிப் படுத்தியதன் பின்னால் ஓர் அரசியல் தீயசக்தி யின் கையிருப்பதான சந்தேகம் எழுவது இயல்பே.

யுத்தகாலத்தில் நலன்புரி நிலையங்கள் தொடர்பாக இருந்த அரசியல் உள்நோக்கம் அதனால் விடுதலைப்புலிகளுக்கு எதிராக (புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்து தப்பிவரும் மக்கள் என்று) செய்யப்பட்டு வந்த பிரச்சாரம் இப்பொழுது சமாதான காலத்தில் வேறு வடிவில், வேறு வகைமாதிரியில் முன்னெடுக்கப்படுகிறதாக இருக்கிறது.

உயர்பாதுகாப்பு வலயத்துள் சொந்த நிலத்தைக்கொண்ட மக்களும், மீண்டும் யுத்தம் வரும் என்ற இராணுவத்தின் விசமத்தனமான பிரச்சாரத்திற்கு எடுபட்ட மக்களும், உழைப்பதற்கான ஊக்கத்தை இழந்து நிவாரணத்தில் தங்கிவாழ எண்ணும் மக்களும், ஒழுக்கக்கோப்பற்ற அந்த நகர முகாம் வாழ்விற்கு பழக்கப்பட்டுவிட்ட மக்களும் இன்னும் அந்த நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறாத மக்களாக இருக்கிறார்கள்.

சமூக, ஆய்வு, அபிவிருத்தி என்ற சொற்பதங்களை தாங்கிய அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இங்கு பஞ்சமில்லை. பிரபலமான அரசசார்பற்ற நிறுவனங்களில் சமூக, ஆய்வு, அபிவிருத்தி என்ற நாமங்களைத் தாங்கிய திட்டங்களிற்கும் பஞ்சமில்லை.

ஆனால், இந்த நலன்புரி நிலையங்களினது கதியும் அதனால் கலாச்சார நோயுற்று வரும் எம்சமூகத்தின்கதியும் எமது இளையவர்களின் கதியும்தான் பரிதாபத்திற்குரியதாக இருக்கின்றது.

**பிரவீன்**

தனிமனித சுதந்திரத்தை மறுத்து விட்டு, சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியாது. —மகாத்மா காந்தி

# விநாயக் தாமோதர் சவர்க்கார்

## இந்தியாவின் புதிய தேசபிதா

**இவ்வருடம்** (2003) லோக்சபா எனப்படும் இந்திய மக்கள் அவையில் ஒரு பரபரப்பான சம்பவம் நடைபெற்றது. புதுடில்லியை மையம்கொண்டுள்ள இவ்வாட்சி பீடத்தில் அண்ணல் காந்தியின் படத்திற்கு எதிர்ப்புறமாக விநாயக்தாமோதர் சவர்க்கார் என்பாரின் படம் தொங்கவிடப்பட்டது. பிரதமர் வாஜ்பாயின் வேண்டுகோளுக்கிணங்க சனாதிபதி அப்துல்கலாம் படத்தை திரைநீக்கம் செய்துவைத்தார். இந்தியாவின் தேசபிதா என்ற உயர்அந்தஸ்து மகாத்மாகாந்தி ஒருவருக்கே உரியது. சவர்க்காருக்கும் அதே அந்தஸ்து வழங்கும் முயற்சி நடக்கின்றதா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

சுதந்திரப் போராட்டவீரும் காந்தியின் படுகொலையில் நேரடியாகத்தொடர்பு பட்டவருமான சவர்க்கார் இந்தியாவின் நவீன வரலாற்றில் முற்றிலும் வித்தியாசமான மனிதர். இவருடைய தீவிர ஆதரவாளர்கள் "வீர சவர்க்கார்" என்று அழைக்கும் அதேவேளையில் அவரை விமர்சிப்போர். "இந்துமதத் தீவிரவாத வலதுசாரி" என்பர். இந்தியவரலாற்றின் ஒரு முக்கிய அத்தியாயத்தை விளங்கிக்கொள்வதற்கு சவர்க்கார் வாழ்க்கை துணைபுரிகின்றது.

மகாராஷ்திர மாநிலத்தலைநகர் பம்பாயில் 1883ல் சவர்க்கார் பிறந்தார். 1966ல் இறக்கும்போது அவருக்கு வயது 83. காந்தி, நேரு, ஜின்னா ஆகியோரைப்போல் இவரும் இங்கிலாந்து சென்று சட்டம் படித்து பாரீஸ்ரர் பட்டம் பெற்றார். நேரு காஷ்மீரி பண்டிற் கோத்திரப்பிராமணர், சவர்க்கார் மகாராஷ்திராவின் சிற்பவான் பிராமணர். காந்தியோ மகாராஷ்திராவின் தெற்கெல்லை மாநிலமான குஜராத்தில் பனியா எனப்படும் வணிகர் குலத்தைச் சேர்ந்தவர். ஜின்னா ஒரு முஸ்லிம், அதாவது பேரளவில் முஸ்லிம். அவர் மது அருந்துவார், பன்றி இறைச்சி கிடைத்தால் உண்பார். கோரான் படிப்பது கிடையாது, மசூதிக்கு சிலசமயம் சென்ற துண்டு.

காந்தி, நேரு, ஜின்னா ஆகியோர் திருமணமாகி குடும்பம் நடத்தியவர்கள், சவர்க்கார் பிரம்மச்சாரி. ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுபவர். காந்தி 1869இல் பிறந்து 1948இல் படுகொலை செய்யப்பட்டவர். சாத்வீகப் போராட்டத்தை நடைமுறைச் சாத்தியமாக்கிய சிறப்பு காந்திக்கு உண்டு. சத்தியாக்கிரகம், அகிம்சை, சர்வமத சமத்துவம் போன்ற காந்தீய விழுமியங்களில் சவர்க்காருக்கு அறவே நம்பிக்கை கிடையாது. சுதந்திரத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலம் வென்றெடுக்கவேண்டும், அதற்கு முதற்கட்டமாக பிரிட்டிஷ் அதிகாரிகளை கொன்றொழிக்கவேண்டும் என்பது சவர்க்காரின் நிலைப்பாடு.

சவர்க்கார் முஸ்லிம்களை வெறுத்தவர். இந்தியா இந்துக்களுக்கே உரியது என்பது அவருடைய சித்தாந்தம். இந்து - முஸ்லிம் ஒற்றுமை பற்றிய காந்தீயத்தத்துவத்தை சவர்க்கார் முற்றாக நிராகரித்தார். இதற்காக அவர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிமீது வெறுப்பை உமிழ்ந்தார். இந்துக்கள் தலைமையில் இந்திய உபகண்டம் முழுவதும் ஒரு குடையின் கீழ் ஆளப்படவேண்டும்.சிந்துநதி தொடக்கம் பிரமபுத்திரா வரை, இமயமலை தொடக்கம் கன்னியாகுமரி வரை அவர் கனவுகண்ட இந்துமத சாம்ராச்சியம் பரந்துவிரிந்து கிடக்கும். அதாவது பாகிஸ்தான் என்ற நாட்டுக்கே இடமில்லை என்பது சவர்க்காரின் கொள்கை.

மகாராஷ்திரா மாநிலம் இந்து மதத் தீவிரவாதத்தின் பிறப்பிடமாகவும் இன்றுவரை இருப்பிடமாகவும் இடம்பெறுகின்றது. தலைநகர் பம்பாயிலிருந்து (இன்று மும்பாய்) 119மைல் தூரம் கிழக்குத்திசையில் உட்புறமாக பூனே (PUNE) என்ற பெருநகரம் காணப்படுகின்றது. கடந்த மூன்றரை நூற்றாண்டுகளாக பூனே இந்துமதத் தீவிரவாதத்தின் தாய்நிலமாகத் திகழ்கின்றது. பூனேக்கு அப்பாலுள்ள மலைப்பிரதேசத்தில் இந்துமதத் தீவிரவாதத்தின் பிதாமகர் என்று கருதப்படும் சிவாஜிமன்னன் பிறந்தார். இவர் முகலாய சக்கரவர்த்தி அவுரன்செப்பிற்கு எதிராகப்போரிடுவதற்கு பூனேயில் முதன்முதலாக தனது படைகளைத் திரட்டினார்.

பூனேயில் அவர் விட்டுச்சென்ற படைவீரர்கள் பெஸ்வாக்கள் என்று அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் யாவரும் பிராமண குலத்தவர். இவர்கள் சந்ததி சந்ததியாகத் தமக்கு இட்டுள்ளபெயர் "சிற்பவான்கள்". தீயிலிட்டுப் புடம் பண்ணப்பட்டவர்கள் என்பது இதன் பொருள். இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. பிரிட்டிசாருடன் 1817 வரை தொடர்ச்சியாக போரிட்டுக்கொண்டே இருந்தார்கள். 1817இல் பிரிட்டிசார் அவர்களுக்கு போர்க்களத்தில் மரண அடிகொடுத்தபின் அவர்கள் ஓய்ந்து போனார்கள். சவர்க்கார் ஒரு சிற்பவான் பிராமணகுலத்தவர் என்பதை முன்பு குறிப்பிட்டுள்ளோம்.

காந்தி தலைதூக்கமுன் பிரிட்டிசாருக்கு எதிரான விடுதலைப்போரை நடத்திய பாலகங்காதர திலகர் (1856 - 1920) "சுயராச்சியம் எமது பிறப்புரிமை" என்ற கோசத்துடன் ஆயுதப்போர் நடத்தினார். காந்தியின் வருகைக்குப் பின் அது பிசுபிசுத்துப்போய்விட்டது.





உரையாற்றும் காந்தி

இறந்தபின் காந்தி



இப்படியான திலகரும் பூனேயைச் சேர்ந்தவர் தான். சிவாஜி, பெஸ்வாக்க்ள், சிற்பவான்கள், திலகர் போன்றோரின் வழிவந்தவராக மகாராஷ்திரா மக்களால் வீரசவர்க்கார் பார்க்கப் படுகிறார். காந்தி, நேரு ஆகியோருக்கு இந்த மாநிலத்தில் சவர்க்காரின் ஆயுள்காலத்தில் அவரையொத்த செல்வாக்கு இருந்ததில்லை. சவர்க்கார் மேடைப்பேச்சு நடத்தும்போது அங்கு கூடும் மக்களின் எண்ணிக்கை நேருவின் கூட்டத்திற்கு வருவோரின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலானது. இத்தகவலை வரலாற்று நூல்கள் அறியத்தருகின்றன. சவர்க்கார் அபின் உட்கொள்ளும் வழக்கம் உடையவர். அவருடைய கண்கள் புடைத்துக்கொண்டு பிரகாசமாக முகத்திற்கு வெளியே நிற்கும் அவருடைய கண்களுக்கு காந்தசக்தி இருப்பதாக அவருடைய ஆதரவாளர்கள் நம்பினார்கள். புராதனகால இந்திய முனிவர்களின் பார்வை அவருக்கு இருப்பதாக நம்பினர். அவருடைய இருபக்க கன்னங்களும் உள்விழுந்து பெரும் குழியாக இருந்தன. அவருடைய முகத்தில் இது மிகவும் வியப்பூட்டும் அம்சமாக இடம் பெற்றது.

இந்துமகாசபை என்ற உயர்சாதியினரின் நாடுதழுவிய அரசியல் அமைப்பில் சவர்க்கார் அங்கத்துவம் வகித்தவர். இருமுறை அவர் இந்துமகாசபையின் வருடாந்தக் கூட்டங்களுக்கு தலைமை தாங்கினார். இந்துமகாசபையின் இராணுவப்பிரிவான ஆர்.எஸ்.எஸ் (ரஷ்திரியசுயம் சேவக் சங்) சவர்க்காரின் ஆதரவுடன் வளர்ச்சி அடைந்தது. தனக்கு விசுவாசமான பிராமணர்களை இணைத்து இந்துரஸ்திராதல் என்ற அலகை அவர் பூனேயில் மே- 15, 1942இல் உருவாக்கினார். இந்த அமைப்பு மிகவும் இரகசியமாக அவர் தலைமையில் செயற்பட்டது. இதில் அங்கத்துவம் வகித்தோர் அனைவரும் சிற்பவான் பிராமணர்கள் ஆர்.எஸ்.எஸ்., இந்துமகாசபை ஆகியவற்றை இந்திரஷ்ராதல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.காந்தியை எதிர்ப்பதில் இவை முனைப்பாகச் செயற்பட்டன.

நான்கு முக்கிய படுகொலைச்சம்பவங்களுடன் சவர்க்கார் தொடர்புபடுத்தப் படுகிறார். 1910இல் அவர் இங்கிலாந்தில் வதியும் போது தனது ஆதரவாளர்களுக்கு கட்டளையிடுவது மூலம் ஒருபிரிட்டிஷ் அதிகாரியை இந்தியாவில் வைத்துக்கொலை செய்வித்தார். தூரத்தில் இருந்து இயக்கப்பட்ட இப்படுகொலைக்காக சவர்க்கார் கைதுசெய்யப்பட்டாா. கப்பல்மூலம் இந்தியா கொண்டுவரப்படும் வழியில் அவர் பிரான்சு துறைமுகத்தில் காற்றுப் போக்கி வட்டத்துவாரத்தின் ஊடாக கடலில் குதித்து தப்பமுயன்றார். பிரான்சுப் பொலிசார் அவரைக் கைதுசெய்து பிரிட்டிசாரிடம் ஒப்படைத்தனர்.

பிரிட்டிசாரால் இந்தியா கொண்டு வரப்பட்ட சவர்க்கார் நீதிவிசாரணைக்கு உட்பட்டுத் தண்டிக்கப்பட்டார். இரட்டை ஆயுள்தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. அந்தமான் தீவில் சவர்க்கார் அடைக்கப்பட்டார். இத்தீவுக்கு அனுப்பப்படுவோர் திரும்பிவர முடியாது, அதுவும் இரட்டை ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அந்தமான் தீவில் மடிய வேண்டியதே தலைவிதி. இக்கொடிய தீவிலிருந்து ஆறு மாதங்களின் பின் சவர்க்கார் விடுதலை செய்யப்பட்டார். இந்திய தேசியகாங்கிரசுக்கும் காந்திக்கும் எதிராக பிரிட்டிசாருடன் ஒத்துழைப்பதற்கு இணங்கியதால் விடுதலை வழங்கப் பட்டது. அவருடைய வாழ்க்கையின் மிகவும் கேவலமான அத்தியாயமாக இது கருதப் படுகிறது. அவருடைய ஆதரவாளர்கள் இதையொரு தந்திரோபாயமாகச் சித்தரிக்கின்றனர். சவர்க்காரின் சீடரும் தற்போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பிரச்சாரக்குழுவில் அங்கம் வகிப்பவருமான தமிழ் நாட்டுப் பிராமணர், சேசாத்திரி சாறி, "சிறையில் இருப்பதிலும் பார்க்க வெளியிலிருந்து நிறையச்செய்யலாம்" என்று தனக்கு சவர்க்கார் கூறியதாகச் சொல்கிறார். சிறையிலிருந்த ஆறுமாத காலத்தில் "இந்துத்துவ" (Hindutva) என்ற தலைப்பில் ஒருநூலை சவர்க்கார் எழுதினார். இந்திய அரசியலை ஆட்டிப்படைக்கும் இச்சொல்லை முதன்முதலாக உருவாக்கியவர் சவர்க்கார் என்பது ஆய்வாளர் முடிவு.

இதே நூலில் அவர் இருதேசக் கோட்பாட்டையும் (The Two nation Theory) முன்வைத்தார். பாகிஸ்தானை நியாயப்படுத்துவதற்காகப் பிற்காலத்தில் ஜின்னா இக்கோட்பாட்டை தூக்கிப்பிடித்தார். பாகிஸ்தான் உருவாவதை எதிர்த்த சவர்க்கார்தான் இக்கோட்பாட்டை முதன்முதலாக உருவமைத்தவர் என்பது வியப்பான சங்கதி. மேற்கூறிய நூல் மராத்திமொழியில் எழுதப்பட்டது.

அந்தமான் சிறையிலிருந்து இந்தியா திரும்பியபின் ஒருபடுகொலையையும் இன்னுமொரு படுகொலை முயற்சியையும் சவர்க்கார் செய்வித்தார். பஞ்சாப் ஆளுநரான வெள்ளையரை அவருடைய சீடர்கள் கொன்றனர். மிகவும் நுண்ணிய திட்டமிடல் காரணமாக சந்தேகம் நிலவினாலும் சவர்க்கார்மீது குற்றம் சுமத்துவதற்கு அதுபோதுமானதாக இருக்கவில்லை. பம்பாய் ஆளுநர் மீது கொலை முயற்சி செய்யப்பட்டது. இதிலும் சவர்க்கார்மீது குற்றம் சுமத்த இயலவில்லை.

ஆகஸ்து 15, 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. இதன் பின் தேசியக் கொடி தேசிய இலட்சினை போன்றவற்றை உருவாக்கும் குழுக்கள் அமைக்கப்பட்டன. அசோக சக்கரவர்த்தி நிறுத்திய சாரநாத் தூணின் உச்சியில் நிற்கும் மூன்று சிங்கங்களை தேசிய இலச்சினையாக ஏற்கும்படி சவர்க்கார் சிபாரிசு செய்தார், அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதே தூணில் காணப்படும் அசோக சக்கரத்தை தேசியக்கொடியில் பொறிக்கும்படி மீண்டும் சவர்க்கார் சிபார்சு செய்தார், அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஜனவரி 30, 1948இல் ஒரு வெள்ளிக்கிழமை மாலை 5.17இன்போது மகாத்மாகாந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். சுட்டவர் நாதுராம் கொட்சே என்ற சவர்க்காரின் றஷ்திரியதல் உறுப்பினர். சுடுவதற்கு பெறற்ரா (BERETTA) ரகக் கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டது. மூன்று தடவை காந்தி சுடப்பட்டார். மூன்று சூடும் குறிதவறாமல் அவருடைய நெஞ்சில்ப் பாய்ந்தன. சுடமுன் கூப்பிய கைகளுக்குள் கைத் துப்பாக்கியை மறைத்தபடி கொட்சே காந்தியை வணங்கினான். "நமஸ்தே காந்தியீ" என்றான் நாதுராம் கொட்சே. பதிலுக்கு கை கூப்பிய காந்தி அப்படியே வீழ்ந்தார். அவருடைய கதர்வேட்டி ரத்தத்தில் தோய்ந்தது. விழும்போது காந்தியின் வாய் "ஹேராம்" என்று ஒலித்தது. இதை மனித குலத்தின் இரண்டாவது சிலுவை மரணம் என்று வர்ணிக்கிறார்கள். யேசு பிரானும் ஒருவெள்ளி நாளில் கொல்லப்பட்டார் என்பது நினைவு கூரத் தக்கது.

கையில் துப்பாக்கியோடு நாதுராம் கொட்சே உடனடியாக கைது செய்யப்பட்டான். கைதுக்கு அவன் எதிர்ப்புக்காட்டவில்லை. நாராயன் ஆப்தே, விஷ்ணுகார்கரே, நாதுராமின் சகோதரர் கோபால் கொட்சே மதன்லால் பாவா, மருத்துவடாக்டர் தத்தாத் திரேய பார்ச்சுரே, ஆயுத வர்த்தகம் செய்யும் திருட்டுச்சாமியார் திகம்பரர் பட்கே, பட்கேயின் உதவியாளர், வீசவர்க்கார் ஆகியோர் காந்தியைக் கொலை செய்த குற்றத்திற்காகவும் அதற்கான சதியில் ஈடுபட்ட குற்றத்திற்காகவும் மே 27, 1948இல் நீதிமன்றின் முன்நிறுத்தப்பட்டனர்.

தானே தன்னந்தனியாக கொலை முயற்சியில் ஈடுபட்டதாக தொடக்கம்முதல் இறுதிவரை நாதுராம் கொட்சே சாதித்தான். ஒரு வரும் தன்னோடு சதி ஆலோசனையில் ஈடுபடவில்லை என்பது அவனுடையவாதம். கள்ளச்சாமியார் பட்கே அரசுதரப்பு சாட்சியாகமாறி விடுதலை செய்யப்பட்டான். நாதுராம் கொட்சே, நாராயன்ஆப்தே ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டன. போதிய சாட்சியம் இன்மையால் சவர்க்கார் விடுதலை பெற்றார். ஆனால் உண்மையில் கொலையின் சூத்திரதாரி அவர்தான் என்பது நாடறிந்தவிடயம். தூக்கில் இடப்பட்ட இருவரையும் அவர் கொலைக்கு முன் ஆசீர்வதித்து அனுப்பினார் என்பதற்குச் சாட்சியங்கள் உண்டு.

நவம்பர் 15,1949 அதிகாலை, அம்பாலா சிறைச்சாலையில் நாதுராம் கொட்சேயும் நாராயணஆப்தேயும் தூக்கில் இடப்பட்டனர். கோபால் கொட்சே, மதன்லால் பாவா, தத்தாத்திரேய பார்ச்சுரே, விஷ்ணுஹார்கரே ஆகியோருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டன. கோபால்கொட்சே அண்மையில் ஆயுள்தண்டனை குறைக்கப்பட்டு. வெளிவந்துள்ளான். நாதுராம் கொட்சேயின் அஸ்தி கொட்சே குடும்பத்தினரால் பாதுகாத்து வரப்படுகின்றது. இந்தியாவின் ஆட்சியின்கீழ் முழு உபகண்டம் வந்தபின் இந்துநதியில் தனது அஸ்தியை கரைக்கும் படி நாதுராம் கொட்சே கேட்டுள்ளான்.

காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து கொலையின் பின்னணியில் இயங்கிய ஆர்.எஸ்.எஸ். இந்துமதத்தீவிரவாத வலதுசாரி அமைப்பு தடைசெய்யப்பட்டது. சட்டத்திற்குப் புறம்பான அமைப்பு என்று நேரு அரசு பிரகடனம் செய்தது. ஆனால் இத்தடை நீடிக்கவில்லை. வேறுபெயரில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்த இந்த அமைப்பிற்கு விரைவாக விமோசனம் கிடைத்தது. இன்று ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக்கட்சி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவாக இயங்குகின்றது. பிரதமர் வாஜ்பாயும், உதவிப்பிரதமர் அத்வானியும் தீவிர ஆர்.எஸ்.எஸ் ஆதரவாளர்கள். தேசபிதாவின் படத்துக்கு எதிராக அவரைக் கொலை செய்வித்தவரின் படத்தைத் தொங்கவிடும் அளவுக்கு ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் செல்வாக்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

அன்பரசு

# உங்கள் குழந்தைகள் நலமாக வாழ...

**குழந்தைகளின்** ஆரோக்கியத்திற்கும் ஊட்டச்சத்திற்கும் நிறையவே தொடர்பிருக்கிறது. ஒருகுழந்தை பிறக்கும்போதே திடகாத்திரமான குழந்தையாக பிறக்கவேண்டும் என்பதனாலேயே ஒருதாயானவள் கருவுற்ற நாளிலிருந்து அவரது போஷாக்கில் கவனம் செலுத்துகிறோம்.

கருவுற்ற தாயானவள் தனக்காகவும், தனது வயிற்றிலுள்ள குழந்தைக்குமாக உண்ண வேண்டும். அளவில் மாத்திரமன்றி தரமான நிறையுணவை உட்கொள்வது மிகமிக அவசியமாகிறது. குறிப்பாக புரதம், இரும்புச்சத்து, கல்சியம் மற்றும் உயிர்ச்சத்துக்கள் நிறைந்த உணவுகளை உட்கொள்ளவேண்டும். உடல் வளர்ச்சிக்கு புரதமும் எலும்பு வளர்ச்சிக்கு கல்சியமும், இரத்த உற்பத்திக்கு இரும்புச்சத்தும் அவசியமானவை.

புரதச்சத்தை மாமிசங்கள், சோயா, அவரை வகை, பயறு, உழுந்து, பருப்பு, பால் முதலியவற்றிலிருந்து பெரும்பாலும் பெறுகிறோம். கல்சியம் பாலிலும், நெத்தலிக் கருவாட்டிலும், அதிகமாக உண்டு. இரும்புச்சத்தை கீரை வகைகளிலிருந்தும், முட்டை, மாமிசங்களிலிருந்தும் பெறுகிறோம்.

சிகிச்சா நிலையங்களில் தாய்மாருக்கு இரும்பு, கல்சியம், போலிக்கமிலம், உயிர்ச்சத்துக்கள் என்பன மாத்திரைகளாக வழங்கப்படுகின்றன. மேலும் குறைநிரப்பு உணவாக திரிபோஷா போன்ற மாக்கள் வழங்கப்படுகின்றன. தாய்மார் தமது உணவில் தாமே அக்கறை செலுத்திட வேண்டியது கர்ப்பகாலத்தில் கட்டாயமாகும்.

ஒரு குழந்தை பிறக்கும்போது குறைந்த பட்சம் அதன் நிறை இரண்டரைக் கிலோவாவது இருக்க வேண்டும். அதற்குக் குறைந்தால் எடை குறைந்த பிள்ளைகளாகக் கருதப்படுகிறது. இப்பிள்ளைகளில் நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக இருக்கும். இவர்களது உணவில் கூடுதல் கவனமெடுத்து நிறையை விரைவிலேயே அதிகரிக்கச் செய்யவேண்டும்.

குழந்தை பிறந்து முதல் நாலு மாதம் வரை தாய்ப்பாலே சிறந்த உணவு. தாய்ப்பால் மட்டுமே கொடுத்தால் போதுமானது. தாயின் முலைகளிலிருந்து சுரக்கும் முதற்பால் நோயெதிர்ப்புச் சக்திகள் நிறைந்ததும், அதிகளவு முக்கியமான உயிர்ச்சத்துக்களையும் தாதுப் பொருட்களையும் கொண்டது. இதை கொலஸ்ரம் (Collostrum) என்று சொல்வார்கள். இது குழந்தைக்கு கொடுக்கும் முதல் தடுப்பூசியாக அமைகின்றது.

முதலில் தாய்ப்பால் சுரப்பது சிலரில் குறைவாக இருக்கலாம். ஆனால் தொடர்ந்து குழந்தைக்கு பாலூட்டும் போது இரண்டு, மூன்று நாட்களில் தாய்ப்பால் போதியளவு சுரக்க ஆரம்பிக்கிறது. வேலைக்குப்போகும் பெண்கள் கூட தொடர்ந்து பாலூட்ட வேண்டும். மூன்று மாதம் வரை லீவில் நிற்பது விரும்பத்தக்கது. அதற்குப்பின்னரும் பாலைப்பிசுக்கி சுத்தமான பாத்திரத்தில் எடுத்து கொடுத்து விட்டுப்போனால் குழந்தையைப் பார்ப்பவர் ஊட்டலாம். அறை வெப்பநிலையிலேயே சில மணித்தியாலங்கள் பால் பழுதடையாமல் இருக்கக்கூடியது. குளிர்சாதனப்பெட்டியில் வைத்தால் ஒரு நாள் முழுவதும் பழுதடையாமல் இருக்கக்கூடியது.

தாய்ப்பாலூட்டும் தாய் தனது ஊட்டத்தை கவனிக்கவேண்டும். மனிதரில் நிறையுணவு சிறந்த பாலை தரவல்லது. ஆறு மாதத்தில் குழந்தையின் நிறை ஐந்து கிலோவை தாண்ட வேண்டும். அதாவது பிறப்பு நிறையைப்போல் இருமடங்காக இருக்க வேண்டும்.

இக்கால கட்டத்திலிருந்து குழந்தைகளிற்கு தாய்ப்பாலுடன் மேலதிக உணவு கொடுக்கவேண்டும். தாய்ப்பால் பற்றாக் குறையாக இருந்தால் பசுப்பால் அல்லது பவுடர் பால் கொடுக்கலாம். எனினும் தாய்ப்பாலைத்



தொடர்வதே நல்லது.

மேலதிக உணவாக முதலில் நீராகாரங்கள் கொடுக்க ஆரம்பிக்கலாம். சூப், கஞ்சி, முதலானவற்றில் ஆரம்பிக்கலாம். பின்னர் படிப்படியாக மசித்த கிழங்கு வகைகள், மசித்த சோறு என்பவற்றை ஆரம்பிக்கலாம். கீரை பருப்பு வகைகளையும் படிப்படியாக சேர்க்கலாம். பின்னர் முட்டை மஞ்சட்கரு சிறிது சேர்க்கலாம். ஒருவயதை நெருங்கும்போது வெள்ளைக்கருவையும் சேர்க்கலாம்.

ஒருவயதிற்கு பிறகு பெற்றோர்கள் சாப்பிடும் அதே உணவு வகைகளைக் கொடுக்கலாம். ஆனால் உறைப்பு, அதிக எண்ணை என்பனவற்றை சிலகாலம் தவிர்ப்பது நல்லது.

குழந்தைகளின் உடல் வளர்ச்சியும், மூளை வளர்ச்சியும் ஐந்துவயது வரை வேகமாக நடக்கிறது. அதிலும் முதல் இரண்டு வருடங்கள் மிகமுக்கியமானவை. எனவே குழந்தைகளின் போஷாக்கில் நாம் அதிக கவனம் செலுத்திட வேண்டும்.

தாய்பாலில் பல அனுகூலங்கள் உண்டு. குழந்தைகளிற்குத் தேவையான பிரதான ஊட்டல்கள் தேவையான விகிதத்தில் கலந்த நிறையுணவு பாலாகும். மேலும் இது மலிவானதும், தேகவெப்பநிலையிலேயே கிடைக் கக்கூடியதுமாகும். தாய்ப்பாலில் கிருமித்தொற்று குறைவு. கொடுக்கும் போது கைகளையும் முலைகளையும் கழுவிக் கொடுப்பது நல்லது. சுத்தமான ஆடைகள் அணிவதும் அவசியம். மேலும் நான் முன்னர் குறிப்பிட்டது போல தாய்ப்பாலில் நோய் எதிர்ப்பு சக்தி இருக்கிறது. தாய்ப்பால் இலகுவில் சமிபாடடையக்கூடியது. இதை விட முக்கியமான ஒருவிடயம் பாலூட் டல் தாய் சேய் உறவை பலப்படுத்துகிறது.

குழந்தைகளின் நோய் எதிர்ப்புச் சக்திக்கான தடுப்பூசி முறைகள் குறிப்பிட்ட மாதங்களில் பின்பற்றப்பட வேண்டும். அதற்கான அட்டவணை அட்டைகள் சிகிச்சா நிலையங்களில் வழங்கப்படுகின்றன.

தாய் தன் குழந்தை வயிற்றில் இருக்கின்ற போதே ஏற்புத்தடுப்பூசி போடுவதன் மூலம் குழந்தைக்கும் ஏற்பு நோய்க்கான தடுப்பை ஏற்படுத்துகின்றார். குழந்தை பிறந்து 24 மணித்தியாலங்களின் பின் காச நோய்க்கான பி.சீ.ஜீ தடுப்பூசி போடப்படுகிறது. எடை குறைந்த குழந்தைகளுக்கு இவ்வூசி தாமதமாகப் போடப்படுகிறது.

குழந்தைகளை இலகுவாக தாக்கக் கூடிய ஈர்ப்புவலி, குக்கல், தொண்டைக்கரப்பான், நோய்களுக்கு எதிராக முக்கூட்டுசி ஏற்றப்படுகிறது. சின்னமுத்து ஊசி, போலியோ தடை மருந்து என்பனவும் முதலாவது ஆண்டுக்குள்ளேயே கொடுக்கப்படுகின்றது. தொடர்ந்தும் இவற்றிற்கான 'பூஸ்ரர்' மீளவும் அட்டவணையில் குறிப்பிட்ட வண்ணம் கொடுக்கப்படுகிறது.

பெரும்பாலும் குழந்தைகளுக்கு சுவாசத்தொற்று, வயிற்றோட்டம், மலேரியா, மற்றும் காச்சல் நோய்கள் ஏற்படுகின்றன. காச்சல் வரும்போது சில குழந்தைகளுக்கு வலிப்பு ஏற்படலாம். வலிப்பு ஏற்படும் போது உடலை ஈரமான துணி கொண்டு துடைப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். சில வேளைகளில் விடாமல் வலிப்பு ஏற்பட்டால் அது மூளைக்காச்சலுக்கான அறிகுறியாகவும் இருக்கலாம் என்பதால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வலிப்பு ஏற்படும் போது வாயினால் எதுவித மருந்தும் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் பிரக்கடித்து சுவாசப்பைக்குள் சென்று ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். வலிப்பு நின்ற பின் பரசிட்ரமோல் 'சிறப்' கொடுக்கலாம்.

காய்ச்சல் வரும் குழந்தைகள் பாலருந்தாமல் இருந்தாலோ, சுற்றுப்புறங்களை பார்க்காமலிருந்தாலோ, தொடர்ந்து அழுதாலோ, மூச்சுத்திணறல் இருந்தாலோ கட்டாயம் மருத்துவரை நாடவேண்டும்.

வயிற்றோட்டம் ஏற்படும் குழந்தைகளில் நீர்ப்பற்று குறைவத னாலேயே முக்கியமாக ஆபத்து ஏற்படுகிறது. வயிற்றுப் போக்குள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பாலை தொடர்ந்து கொடுப்பதுடன் மேலதிக நீராகாரம் கொடுக்க வேண்டும். ஓ.ஆர்.எஸ் அல்லது ஜீவனி என்று அழைக்கப்படும் மருந்தை குறிப்பிட்டளவை நீரில் கரைத்து அடிக்கடி பருக்குவதன் மூலம் நீரிழப்பை தவிர்க்கலாம். ஒரு லீற்றர் கொதித்தாறிய நீரில் கரைக்கக்கூடிய பைக்கற்றில் இது வருகிறது. குறிப்பிடப்பட்டளவு தண்ணீரில் கரைத்தல் அவசியம். செறிவு மாறினால் குழந்தைகளுக்கு விபரீதமான விளைவுகள் ஏற்படலாம். தீ, சுடுநீர், மண்ணெண்ணை போன்றவற்றை குழந்தை சென்றடையாமல் பாதுகாப்பதும் அவசியம்.

பசுப்பால், மாப்பால் கொடுக்கும் குழந்தைகளுக்கு புட்டி(போச்சி) பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும். கரண்டி மூலம் பருக்குவதே சிறந்தது.

குழந்தைகளின் போஷாக்கில் அதிக கவனம் எடுக்கவேண்டும். அட்டவணைப் பிரகாரம் வளர்கின்றதா என்பதையும், அவர்களின் செயற்பாடுகள் உரிய காலத்தில் எட்டப்படுகின்றதா என்பதையும் அவதானித்து ஆவன செய்திடல் வேண்டும்.

தாய் தந்தையரின் அரவணைப்பு குழந்தைகளின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையளிக்கிறது. மேலும் சுற்றுப்புற சூழ்நிலைகளும் சுகாதாரத்தைப் பேணுவதாக அமைந்திருக்க வேண்டும்.

டாக்டர். ச. முருகானந்தன் (RMO)



# பொலித்தீனும் சூழலும்

**பொலித்தீன்** பாவனை உலகநாடெங்கும் பரவி வியாபித்து நிற்கின்றது. பொலித்தீன் ஒரு 'ஐதரோகாபன்.' ஆகும். பொலித்தீன் பொருட்கள் பல வகைகளில் எமக்கு கிடைக்கின்றன. பைகளாக, குழாய்களாக இன்னும் பல்வேறு வகைகளில் பொலித்தீன் பொருட்கள் எமக்கு பரிச்சயமாகி உள்ளன. பொலித்தீன் பைகள் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட போது ஓரளவு பெரியகற்கள். அம்மிக்குளவி போன்றவற்றை இப்பைகளில் போட்டு அவற்றின் தாங்குதிறன் காட்சிக்கு வைக்கப்பட்டது. இவ்வாறாக அறிமுகமான பொலித்தீன் தற்போது கருவில் இருந்து கல்லறைவரை உபயோகிக்கப்படுகின்றது.

தற்போது இது ஒருதடுக்கப்பட வேண்டிய பொருளாக உணரப்பட்டுள்ளது. உலக நாடுகள் எங்கும் இதனை பாவனையில் இருந்து அகற்ற வேண்டும் என உணர்ந்துள்ளன. அதற்கென திட்டங்களிடப்பட்டு பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. இருப்பினும் இதன் பாவனை கணிசமான அளவிலும் குறையவில்லை. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச மான வன்னியில் பரீட்ச்சாத்தமாக அதிகம் பயன்படுத்தப்படுவதும் மாற்றீடு செய்யக் கூடியதுமான மெல்லிய பொலித்தீன் (லஞ்ச்சீற்) தடை செய்யப்பட்டுள்ளது. எதிர்பார்த்ததைவிட பெரியளவில் வெற்றியும் கண்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் சு.ப தமிழ்ச்செல்வனை சந்தித்த போது இது பற்றி தமது நல்லபிப் பிராயத்தினையும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் யாழ்ப்பாணத்தில் கல்வி யல்கல்லூரியும் கல்லூரி வளாகத்தினுள் பொலித்தீன் பொருட்களின் பாவனையை தடைசெய்துள்ளது. இது ஒரு முன்னோடியான செயலாகும். கல்வியற்கல்லூரியை முன்னோயாகக் கொண்டு சகல ஸ்தாபனங்களும் இவ்வாறு தடைசெய்யின் அது வரவேற்புக்குரியதாகும்.

இவ்வாறாக இந்த தசாப்தத்தில் பொலித்தீன் பைகளின் பாவனை அதிகரிப்பால் கடதாசி பைகளின் பாவனை குறைந்து விட்டன. முன்னொரு காலத்தில் கடதாசிப்பைகளின் உற்பத்தி அபிரிதமாய் நடந்து வந்தன. பலர் இந்த தொழிலில் ஈடுபட்டனர். தற்போது இத்தொழிலில் ஈடுபடுவோர் அருகிவிட்டனர். அது மட்டுமல்ல இத்தொழிலுக்கான வருமானமும் குறைந்துவிட்டது. எனவே இச்சிறு தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்க்கை சிந்திக்கப்படவேண்டிய தொன்றாகி விட்டது.

இது ஒருபுறமிருக்க விவசாயிகளின் பிரச்சினை மிகவும் வித்தியாசமானது. இயற்கை பசளைகளுடன் பொலித்தீனும் விளைநிலங்களை வந்தடைகின்றன. இவை இன்நிலத்தில் பசளையுடன் சேர்த்து மூடப்படும் போது இந் நிலங்களில் காற்று உட்புகும் தன்மை பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக பழமர உற் பத்தியாளர்கள் தமது நாற்றுமேடைக்கு பொலித்தீன் பைகளையே அதிகமாக பாவிக்கின்றனர். இதனால் விரும்பியோ விரும்பாமலோ இப்பைகள் விளைநிலங்களை அடைகின்றன. இவை மண்ணினுள் இருந்து உக்குவதில்லை. எனவே பயிர்களின் வளர்ச்சி வேகம் பாதிக்கப்படுகின்றது. முன்னே பழைய தகரப் பேணிகளில் நாற்றுகள். ஒட்டுக்கிளைகள் போடப்பட்டு பழமரங்களை உற்பத்தி செய்தனர். இப்போது இவ்வாறு உற்பத்தி செய்ய விரும்பினும் தகரப்பேணிகள் கிடைப்பதில்லை. எல்லா கொள்கலன்களும் பிளாஸ்ரிக்கிலேயே கிடைப்பதால் பொலித்தீன் பொருட்கள் ஓர் இன்றியமையாத பொருளாகிவிட்டன.

பொலித்தீனின் அனுகூலங்களும். பிரதிகூலங்களும் இவ்வாறிருக்க இதனை அழிக்க வேண்டியதன் முறைகளினையும் அவசியத்தினையும் சிறிது ஆராய்வோம். இதனை அழிப்பதற்கு ஒரே ஒருமுறை எரித்தழிப்பதே. இவ்வாறு எரிக்கும் போது அதனில் இருந்து ஒரு துர்நாற்றம் எழுகின்றது. இதுவும் வளிமண்டலத்தினை பாதிக்கும் ஒன்றேயாகும். எனவே ஒரேவழி இதன் பாவனையை தடைசெய்தல் ஒன்றே சாத்தியமாகும். இதற்கு பலமான பிரச்சாரம் தேவை. அல்லது அரசின் தடைசெய்யும் உத்தரவு ஒன்று இங்கு எதிர்பாக்கப்படுகின்றது. அதற்கான தற்துணிவு அரசிற்கில்லை. அதனால் பாரியளவில் பிரச்சினைகளை அரசு எதிர்நோக்க வேண்டியிருக்கும். எவ்வாறாயினும் பொலித்தீன் பாவனை தடை செய்யப்படவேண்டியதே!

விதுரர்

## பகுதி — 02

சேகுவாரா என்ற சொல்லையே அந்த சுற்றுவட்டார மக்கள் அப்போதுதான் கேள்விப்பட்டார்கள். வானொலியும் பத்திரிகைகளும் தந்த செய்திகள் அந்த மக்களுக்கு பெரும் அதிர்ச்சியையே ஏற்படுத்தியது. இப்படியெல்லாம் நடக்க எப்படி சாத்தியமானது என்று நம்பமாட்டாமல் நின்றார்கள்.

அதுவும் தேர்தல் நடந்துமுடிந்து சிறிமாவோ அம்மையார் ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தில் இந்த நிகழ்வுகள் நடந்தேறின. தேர்தலின் ஆரவாரம் நேற்றுத்தான் நடந்தது போலிருந்தது தேர்தலில் சிவத்துக்கும் மெலிதான ஆர்வம் இருந்தது. வேலாயுதம் ஆதரித்து பகிரங்கமாக வேலை செய்த வேட்பாளரே தேர்தலில் வென்றதில் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது.

பரந்தன் சந்தியிலிருந்து கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானம்வரை தோரணங்களும் அலங்கரிப்புக்களும் கண்களை பறிக்க, கட்சியின் எல்லாத் தலைவர்களும் வந்து மேடையில் அமர்ந்து அடுக்குத்தமிழில் பேசி கை தட்டல்களும் ரத்தத்திலகமும் பெற்று பெரும்ஆரவாரத்தோடு தேர்தல் நடந்து முடிந்திருந்தது.

அந்த தேர்தல் ஆரவாரம் அடங்கிய நேரம் தான் சேகுவாரா பிரச்சனை வெடித்தது. மின்னாமல் முழங்காமல் ஆரம்பித்த கிளர்ச்சி சில நாட்களிலேயே அடக்கப்பட்டது. இந்திய உதவி பெறப்பட்டு மகாவலிக்கங்கைக்கரையில் சடலங்களை மிதக்க வைத்து ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது.

சிவம் கார்த்திகேசுவைப் பார்க்க என்று அவன் வீட்டுக்கு போனபோது அவன் தான் பல விபரங்களைக் கூறினான். சிங்கள அரசை எதிர்த்து சண்டை செய்தவர் களுக்குத்தோல்விதானாம். அவர்களில் பலபேர் பிடிபட்டுவிட்டார்களாம். அந்தக்கைதிகளை வட பகுதிக்கு கொண்டு வந்து சிறை வைக்கப்போகிறார்களாம்.

"இதென்னடா, இங்க ஏனாம் கொண்டு வருகினம்"

சிவம் புரியாமல் கேட்டான்.

"இது புது இடம்தானே, தப்பி ஓட முயற்சிக்க மாட்டினம்."

"அக்கராயன் பக்கமும் பெரிய சிறைக்கூடம் போட்டு ஆட்களை வைச்சிருக்கினமாம்."

"ஏதோ நடக்கிறது எல்லாம் புதினமாய்த்தான் இருக்கு"

அந்த அதிர்வலைகள் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிய நேரத்தில் ஆச்சிக்கு வருத்தம் என்றும் வந்து பார்த்து விட்டுப்போகும்படியும் அன்னம் செய்தி சொல்லி அனுப்பியிருந்தாள்.போட்டது போட்டபடி விட்டுவிட்டு உடனேயே சிவமும் வேலாயுதமும் காரில் ஊருக்குப் போனார்கள்.

ஆனையிறவில் வாகன வரிசை நீண்டிருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தவர்களுக்கு திகைப்பும் கலவரமும் போட்டி போட்டுக்கொண்டு எழுந்தது. புதிதாய் முளைத்திருந்த சிறுசிறு கட்டடங்கள், தூரத்தூர பச்சை தகரம் போட்ட முகாம்கள் நிறைய இராணுவத்தினர் துவக்குகளுடன் நின்றிருந்தார்கள். இதுவரை ஆனையிறவுக்கு வருவதும் சில நாட்கள் தங்கிவிட்டு போவதுமாக இருந்த இராணுவம் இப்போது முகாம் அமைத்திருப்பதை பார்த்தால் நிரந் தரமாகவே இருக்கப்போகிறதோ என்ற சந்தேகம் எழுந்தது. வனத்துறை அதிகாரிகளையோ கடத்தலைத் தடுக்க இருந்த சுங்க அதிகாரிகளையோ இப்போது காணவில்லை. இராணு வத்தினர் ஒவ்வொரு வாகனங்களையும் பார்த்துப்பார்த்து போக அனுமதித்தார்கள்.

வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தபோது மதியம் தாண்டியிருந்தது. ஆச்சி மிகவும் தளர்ந்து போயிருந்தாள். முதுமை அவள் முகத்தில் ஏராளம் வரிகளைத் தீட்டியிருந்தது. எழுபத்தைந்து வயதை நெருங்கிக்கொண்டிருந்தாள்.


ஆச்சியை தங்களுடன் வந்து இருக்கச்சொல்லி வேலாயுதமும் சிவமும் எவ்வளவோ கேட்டும் ஆச்சி வர மறுத்து விட்டாள். இந்த இடத்தை விட்டு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டாள். அன்னத்துடனேயே இருந்துவிட்டாள்.

ஆச்சியின் மெலிந்த கைகளைப் பிடித்துக்கொண்டபோது சிவம் உடைந்து போனான். "ஆச்சி" குரல் தழும்பியது.

ஆச்சிக்கு ஆட்களை அடையாளம் தெரியவில்லை.

அவர்கள் போவதற்காகவே காத்திருந்தது போல ஆச்சி தன் மூச்சை நிறுத்திக்கொண்டாள். தலை நரைக்கத்தொடங்கவிட்ட சிவம் தனக்கு நாற்பத்திமூன்று வயதாகிறது என்ற எண்ணம் மறந்து ஆச்சியின் கையைப் பிடித்துக்கொண்டு அழுது கொண்டிருந்தான். காரை அனுப்பி கனகம் பராசத்தி பிள்ளைகளை வரவழைத்தார்கள். ஆச்சியின் அலுவல்களை முடித்துக்கொண்டு ஒரு வாரத்தின் பின் வீட்டுக்குத் திரும்பினார்கள். வயல் வேலைகளும் காத்துக்கொண்டிருந்தன.

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு



## அத்தியாயம்-06

முருகானந்தனும் வயல் வேலைகளில் மிகவும் உதவியாக இருந்தான். மெலிதாய் மீசை அரும்பத்தொடங்கும் வயது. பதினாறு வயதுக்கு மிக வளர்த்தியாக இருந்தான். ஐந்து பிள்ளைகளினதும் வளர்ச்சி சிவத்துக்கு மகிழ்ச்சி தருவதாகவே இருந்தது. முருகானந்தனும் அடுத்தவர்களான விக்கினேஸ்வரனும்,மகேந்திரனும் கிளிநொச்சிக்கு பஸ்ஸில் போய் படித்துக்கொண்டிருந்தார்கள். இளையவர்களான சியாமளாவும், சித்திராவும் குமரபுரம் பாடசாலையிலேயே படித்தார்கள். பாடசாலை இப்போது இரண்டு சீமெந்து கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருந்தது.

யாழ்ப்பாணப் பக்கங்களிலிருந்து பல ஆசிரியர்கள் வந்து தங்கி நின்று படிப்பித்துக்கொண்டிருந்தார்கள். கிராமத்து வீடுகளில் ஒவ்வொரு அறைகளில் தங்கியிருந்தார்கள். வெள்ளி மாலை தங்கள் வீடுகளுக்கு போய் திங்கள் காலை திரும்ப வருவார்கள். பத்தாம் வகுப்பு வரை பாடசாலை இயங்கியது.

சியாமளாவும், சித்திராவும் ஆறாம் வகுப்பு வரை இங்கு படித்ததும் அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள பெண்கள் கல்லூரியில் விடுதியில் தங்க வைத்து படிக்க வைக்க வேண்டும் என்ற ஆவல் சிவத்துக்கு இருந்தது. வேலாயுதத்தின் பிள்ளைகளும் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் தான் படித்துக்கொண்டிருந்தார்கள்.

இனிமேல் யாழ்ப்பாணத்துக்கான பிரயாணம் இலகுவாக இருக்கப்போவதில்லை என்றே உள்ளுணர்வு எச்சரித்தது. அவர்கள் பயந்தது போலவே சேகுவாரா பிரச்சனையை காரணமாக வைத்து இராணுவம் ஆனையிறவில் நிரந்தரமாகத் தங்க ஆரம்பித்திருந்தது.

அன்று சனிக்கிழமை. கிளிநொச்சி சந்தை சனிக்கிழமைகளில் வழமையை விட பெரும் ஆரவாரமாகக்கூடும். கிளிநொச்சி வயல்களில் வேலை செய்வோர் வாரக்கூலியை பெற்றுக்கொள்ளும் நாள். ஒவ்வொரு சனிக்கிழமையும் சந்தைக்காசு கணக்குப் பார்த்து ஒவ்வொருவருக்கும் கொடுப்பதால் காலையிலிருந்தே வீடு சத்தமும் சந்தடியுமாக இருக்கும். வேலை செய்ததற்கும் மேலாக இடையிடையே வந்து காசை வாங்கிக்கொண்டு போய் விடுவார்கள்.

அன்றும் கணக்குப் பார்த்து முடிய பத்து மணியாகிவிட்டது. மரியக்கண்டுவும் வந்து தனது ஒரு வாரக்காசை கணக்குப் பார்த்து வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

தயங்கி நின்ற கறுப்பையன்

"இந்த இருபது ரூபாவைக் கொண்டு போய் நான் என்ன முதலாளி செய்யிறது" என்றான்.

"நீ வேலை செய்ததுக்குரிய காசை கணக்குப் பார்த்துத் தந்திட்டன். நீ முதலே கொஞ்சம் கொஞ்சமாய் வாங்கினதுக்கு நான் என்ன செய்யிறது சொல்லு"

"வீட்டில கஷ்ரம் முதலாளி. சேர்த்து அம்பது ரூபாயாத் தாங்கோ. வாற கிழமை வேலைசெய்து கடன அடைச்சிடுறன்"

"நீ இப்படித்தான் ஒவ்வொரு முறையும் சொல்லுறனி. சரி இந்தா. அடுத்த முறை எடுத்திட்டுத்தான் தருவன்"

ஐம்பது ரூபாயை வாங்கிக் கொண்டு கறுப்பையன் போய் விட்டான். பார்த்துக்கொண்டிருந்த பராசத்தியிடம்

"என்ன செய்யிறது. எங்கட காணிக்குள்ள இருந்து விசுவாசமாய் உழைக்கிறவங்கள். கூடக்குறையக்குடுத்து உதவத்தானே வேணும். இறுக்கிப்பிடிச்சு கணக்கு பார்க்க ஏலாது." என்று சொன்னான்.

கணக்குக்கொப்பிகளை எடுத்து வைத்துவிட்டு கிளிநொச்சிக்குப் புறப்பட்டான். கரடிப்போக்குச் சந்தி கடக்கும் போது இடது புறத்தில் வேலாயுதம் கட்டி நடாத்தும் படமாளிகை பார்வையில் தெரிந்தது. சுவரொட்டியில் சரஸ்வதி சபதம் சிவாஜியின் நாரதர் வேடத்துடன் வண்ணமாய்க் காட்சி தந்தது.

இப்போது கிளிநொச்சியின் செல்வாக்கு மிகுந்த மனிதர்களில் ஒரு வனாக வேலாயுதம் தன்னை வளர்த்துக்கொண்டுவிட்டான். நகர மத்தியில் கடைத்தொகுதி கட்டும் யோசனையும் வேலாயுதத்துக்கு இருக்கிறது. இன்னும் சில வருடங்களில் அதுவும் சாத்தியப்படக்கூடும்.

கிளிநொச்சி நகரம் மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்தது. கட்டடங்கள் புதிது புதிதாய் எழுந்தன. சிவம் பொலிஸ் நிலையம் தாண்டிப்போய் கஜநிதி ஸ்டோரில் உரவகை, மருந்து வகை வாங்கியதற்காக கட்டவேண்டிய காசைகட்டிவிட்டு தேவையான மருந்து வகைகளுக்கும் சொல்லி விட்டு வீடு திரும்பியபோது மதியம் தாண்டியிருந்தது. எண்ணெய் வைத்து முழுகி மான் இறைச்சிக் கறியுடன் சாப்பிட்டான். மாதம் ஒரு தடவை என்றாலும் மாரி மான் இறைச்சியோ, பன்றி இறைச்சியோ கொண்டு வந்து தந்துவிடுவான். முழுகி சாப்பிட்டு ஒரு தடவை உறங்கி எழுந்தால் புது உற்சாகம் பிறந்ததுபோல இருக்கும்.

சிறிது நேரம் படுத்திருந்துவிட்டு எழுந்தான். வெய்யில் தாழ்ந்த நேரம் சைக்கிளில் விநாசி வீட்டுக்குப்போனான். இப்போதெல்லாம் விநாசி அதிகம் வீட்டில் இருப்பதில்லை. விநாசியின் நாட்டுக்கூத்துக்கு நல்ல மதிப்பு இருந்தது. அதினால் பல இடங்களுக்கும் தன் குழுவோடு போய்க்கொண்டிருந்தான். அவனை நினைக்கும்போது சிவத்துக்கு வருத்தமாக இருந்தது.

நாடக ஆர்வம் அவனுக்கு எந்த முன்னேற்றத்தையும் தரவில்லை. அதே குடிசை வீடுதான். அதே ஏழ்மைக்கோலம் தான்.

இப்போது விநாசியின் மூத்த மகன் செல்வம் படிப்பை நிறுத்திவிட்டு வயலில் புல் பிடுங்க அரைக்கூலிக்கு போகத் தொடங்கியிருந்தான். பதின்மூன்று வயதுப்பிள்ளை கூலி வேலை செய்யப்போவது மனதுக்கு மிகுந்த கவலையைத் தந்தது.

சிவம் விநாசி வீட்டுக்கு போன போது எதிர்பாராத விதமாக கார்த்திகேசுவும் வந்திருந்தான். இப்போது கார்த்திகேசு நல்ல வசதியாக இருக்கிறான். எத்தனை உயரம் பேரனாலும் அதே நட்பை மறக்காமல் பழகும் அவன் மனம் மட்டும் மாறவில்லை.

சிறிது நேரம் மூவருமாக இருந்து கதைத்த பின் சிவம் சொன்னான்.

"செல்வம் கொஞ்சம் வளர்ந்திட்டால் றக்ரர் பழகச்சொல்லி என்னோட வைச்சிருக்கலாம்"

"அதைத்தான் நானும் நினைச்சனான். சின்னப்பிள்ளை கூலி வேலைக்கு போகுது. விநாசி நீ ஊரூராய் திரிஞ்சுகொண்டிரு"

"நான் என்ன செய்யிறது. என்னால நாட்டுக்கூத்தைவிட ஏலாது. அது எனக்கு மூச்சு மாதிரி. இவ்வளவு காலமும் இப்பிடியே இருந்திட்டன்"

"செல்வத்தை சிவத்தோட விடு. நல்லாய் வந்திடுவான். அவன் பொறுப்பான பிள்ளை. நாலைஞ்சு வருஷம் பொறுத்தால் அவனே உழைச்சு வீட்டைப்பார்ப்பான்"

"சிவத்தோட நிண்டால் எனக்கும் ஆறுதல்தானே. நானும் வயலைக் குத்தகைக்கு குடுக்கப்போறன். என்னால வயல் செய்து நட்டப்பட ஏலாது."

"நீ வயல் செய்யிற விதம் அப்படி"

சிவம் வீட்டுக்கு திரும்பி வந்த போது நன்றாய் இருண்டுவிட்டது. இப்போது வீட்டை பின் பக்கத்தில் விறாந்தை இரண்டு அறை என்று இணைத்துக்கட்டியிருந்தான். பிள்ளைகளும் வளர்ந்து கொண்டு வருகிறார்கள். சில வசதிகளும் வேண்டும். கிராமத்துக்கு மின்சாரம் வரப்போவதாய் கதை அடிபடுகிறது. வந்தால் வீட்டுக்கு எடுக்கவேண்டும். போன மாதம் தான் ஐந்தாம் வாய்க்காலில் ஓவசியர் சந்திக்குப்பக்கத்தில் பத்து ஏக்கர் நீர்ப்பாசனக்காணி வாங்கியிருந்தான். நல்ல விளைச்சலான காணி. இப்போது வீடு, கார், உழவுயந்திரம் என்று வசதியாய்த்தான் இருக்கிறது. பிள்ளைகள் வசதியாய்த்தான் வளர்கிறார்கள். வயலில் வேலை செய்பவர்களும் குறைபட்டுக் கொள்வதில்லை. எனினும் வேலாயுதம் அளவுக்கோ கார்த்திகேசு அளவுக்கோ அவனால் உயர முடியவில்லை. ஆனாலும் அது குறையாக எப்போதுமே சிவத்துக்குத் தோன்றியதில்லை.

(தொடரும்...)

தொடர்கதை

அடுத்தபடியாகச் செய்ய வேண்டியதை அறிவது ஞானம் - அதைச் செய்வது நற்குணம். - டேவிட் ஸ்டார் ஜார்டன்



## சிறுகதை

# உள்ளூற விட்டிடாதையுங்கோ!

**குயில்கள்** தமது இனிய ஓசையால் ஆதவனை ஆராதித்துக் கொண்டிருந்தன. ஆதவன் தன் பொற்கதிர்களை பூமியிலே பரப்பியபடி உலாவரத் தொடங்கியிருந்தான். பகல் முழுவதும் பங்கர் வெட்டிய களைப்பில் விடிந்தும் எழும்பாமல் அந்த மரத்தடியிலேயே படுத்திருந்தாள் சுசி. திடுக்கிட்டு எழுந்தவள் "இந்திராக்கா, ஏழரை ஆகிட்டுது இன்னும் ரீ வைக்கேல்லயே" எனச் சிணுங்கினாள். "நாங்கள் ரீ குடிச்சு எவ்வளவு நேரமாயிற்று, இப்ப ரீ எண்டு நிக்கிறாய்" "அப்ப எனக்கு ரீ வைக்கேல்லையா? இப்ப எனக்கு ரீ தந்தால் சரி" "சுசி, நான் ரீ வைச்சனான், ஆறீற்றெண்டு சுமதி எடுத்திட்டாள்" "எனக்குத் தெரியா, இப்ப ரீ வேணும், ஆறினாலும் குடிப்பன் தானே, ஏன் ஊத்தினவையல்" சுசி முணு முணுத்தாள்.

"இந்திராக்கா, என்ர ரீ எங்கயெண்டு கேளுங்கோ" சுசி சுவருக்கு மேலால் கிச்சினை எட்டிப் பார்த்தாள். சுமதி ரீ வச்சுக் கொண் டிருந்தாள். "சுமதி, சுசி ரீ எங்க" இந்திரா கேட்டாள். "அது ஆறிற்றக்கா, ஊத்திப் போட்டன்" இல்லையக்கா, சுமதியக்கா சுட வைச்சிருக்கிறா, சுசியோட கோபம் எண்டாலும் பாசந்தான்" கௌதமி கிண்டல் செய்தாள்.

"என்னில ஒருதரும் பாசம் வைக்கத் தேவையில்லை. நான் வீட்டிலயும் அநாதைதான். இஞ்சயும் அநாதைதான்" என்றவளின் கண்ணில் நீர் கசிய, பக்கத்திலயிருந்த கௌதமி அவளை ஆறுதல் படுத்தினாள். முகம் கழுவிவிட்டு வந்து கொண்டிருந்த இந்திரா, "ஏன் கௌதமி, சுசி அழுகிறாள்" "தான் வீட்டிலையும் அநாதையாம், இஞ்சையும் அநாதையாம் எண்டுசொல்லுறாள்."

"இஞ்ச வா சுசி, அண்ணை இருக்கும் வரை இயக்கத்தில யாருமே அநாதைகள் இல்லை. இயக்கத்தில மட்டுமில்ல தமிழீழத்திலேயே அநாதைகள் எண்டு ஆருமே இல்லை. சும்மா இந்த விசர்க்கதையை விட்டிட்டு ரீயைக்குடி" இந்திரா சுசியை ஆறுதல் படுத்தினாள். சுசி ரீயைக் குடிக்கத்தொடங்கினாள்.

"சுசி, ஒரு நாளும் இல்லாம இண்டைக்கு ஏன் ஊத்திப்போட்டுக் குடிக்கிறாய் முதல் எண்டால் கப்பில தேயிலைக் கட்டை கூட மிஞ்சாது. இண்டைக்கு மழை பெய்யப் போகுது. நாங்கள் பங்கர் வெட்டினபாடும் இல்லை. லயினில நிக்கிற பிள்ளையள் பாவம்,மழையில நனையப் போகுதுகள்" கௌதமி அவளைக் கேலி செய்தாள். "உனக்கு எல்லாம் நக்கலாத்தான் இருக்கும். தலையிடியும் காச்சலும் தனக்குத் தனக்கு வந்தால் தான் தெரியும்" பதிலளித்தாள் சுசி. "அப்ப என்ன நடந்தது எண்டு எங்களுக்கு சொன்னால்த் தானே தெரியும் உன்ர மனசுக்குள்ள வைச்சு அழுதால் எங்களுக்குத் தெரியுமே? எனக்காவது சொல்லன். இவ்வளவு காலமும் என்னோட இருக்கிறாய் அவ்வளவுக்கு என்னில நம்பிக்கை இல்லையே?" மௌனமாக இருந்த சுசி சொல்லத் தொடங்கினாள்.

"இண்டைக்கு என்ர அப்பா அம்மான்ர நினைவுநாள். வீட்டை என்றால் இப்ப அரிச்சினைத் தட்டோட கோயில்ல தான் நிப்பன். இதே நாள் விடியக் காலம எங்கட கடையில நிண்டவையள். எங்கட கடை ஒரு சந்தியில தான் இருக்குது. நிறைய ஆக்கள் வருவினம். நல்ல வியாபாரம் போகும். அதுவும் காலம, பின்நேரம் எண்டால் விலத்தேலாத ஆக்கள். எங்கட கடைக்கு ஒரு இயக்க அண்ண ஒவ்வொரு நாளும் வருவார். ஆமின்ர சென்றி எங்கட கடையில இருந்து நூறு மீற்றர் தூரத்தில தான் இருந்தது. அண்டைக்குக் காலம அவர் வந்ததைக் கண்டிட்டானோ என்னவோ? யாரும் போய் சொல்லிப் போட்டினமோ தெரியாது? அவர் வந்து பத்து நிமிசம் கூட இல்லை அவங்கள் வந்திட்டாங்கள்.

அந்த அண்ணையை நாங்கள் அரிசி அடுக்கின பரணுக்குள்ள மேல ஏத்தி விட்டிட்டம். வந்தவங்கள் கடைக்கு முன்னுக்கு நிண்ட ஆலமரத்துக்குக் கீழ ஜீப்ப விட்டிட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில இருந்திட்டாங்கள். இதமாதிரி ஒரே வாறவங்கள் உடன போயிடுவாங்கள். அண்டைக்கு அரை மணித்தியாலம் ஆகியும் போகேல்ல. அப்பா அந்த அண்ணையை பின் வாசலால அனுப்பிட்டார். அவர் போய் கொஞ்ச நேரத்தால வந்து. "கொட்டியா நிக்கிறது" என்று கொச்சைத் தமிழில் கேட்டான். "இஞ்ச வரேல்ல" அப்பா சொல்ல "ஐயே பொய் சொல்ல வேணாம், கொட்டியா உள்ள தானே நிக்கிறது" எண்டு சிங்களத்தில சொல்லி அப்பாவ விரட்டினான். "இஞ்ச கொட்டியா வரேல்ல, உள்ளயும் இல்ல" அப்பா நடுங்கி நடுங்கி சொன்னார். வாசலில நிண்ட ஆமி, "யண்ட யண்ட" எண்டு வெளியில கையைக் காட்டினான். அது அப்பாவுக்கு விளங்கேல்ல நாங்கள் மூண்டு பேரும் கடைக்குள்ள தான் நிண்டனாங்கள். அவன் கடேக்குள்ள வந்து அம்மாவையும் அப்பாவையும் பிடிச்சு வெளியில தள்ளிவிட்டுட்டு, என்னைக் கையில பிடிச்சு "பாப்பா,புலி மாமா எங்க நிக்கிறார் வாங்கோ பாப்பம்" எண்டு உள்ள கூட்டிக்கொண்டு போனவங்கள் கடையெல்லாம் தேடிப்போட்டு வெளியில வந்து

"அம்மே சிம வேரண்ட" எண்டு அம்மாவைக் கையைக் காட்டிக் கூப்பிட்டான்.அம்மா நடுங்கி நடுங்கி வந்து பக்கத்தில நிண்டவ, "அம்மே கொட்டியா வந்தால் எங்களுக்குச் சொல்லுறது, நாங்க கொட்டியாவ பிடிக்கிறது, சரி தானே" அம்மாவும் 'ஆம்' எனத் தலையாட்டினா. நிண்டவங்கள் எல்லாம் ஜீப்பில ஏறிப் போயிட்டாங்கள்.

தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் எண்டு அம்மா சொல்லிக் கொண்டு சிரித்த முகத்தோடு அப்பா இருந்த மரத்தடிக்குப் போனா.

"ஏதோ நல்லவங்கள் போல கிடக்கு. ஒண்டும் பேசாம போட்டா ங்கள்." எண்டு இரண்டு பேரும் கதைச்சுக் கொண்டு இருக்கேக்க கடைக்கு ஆக்கள் வந்திட்டினம். கடையில நல்ல வியாபாரம் போய்கொண்டிருந்தது. எனக்கு பள்ளிக்கூடம் போறதுக்கு நேரமாயிட்டு. மாமா என்னைப் பள்ளிக்கூடம் ஏத்திக்கொண்டு போயிட்டார். அதுக்குப்பிறகு என்ன நடந்ததெண்டு எனக்குத் தெரியாது.

நான் பள்ளிக்கூடம் விட்டு வரேக்க எங்கட கடை எரிஞ்சு சாம்பலாகக் கிடந்தது. அப்பாவையும் அம்மாவையும் காணேல்ல. அவயள் எங்க எண்டு கேக்க, அம்மம்மா வீட்டை போட்டினமாம். அம்மம்மாவுக்கு வருத்தம் சீரியஸ்சாம் கொழும்புக்கு கொண்டு போகப் போயினமாம், ஒரு கிழமையால வருவினமாம். எண்டு மாமா விடாமல் கதை சொல்லிக் கொண்டிருந்தார். அப்ப ஏன் கடை எரிஞ்சது என்று கேட்க...

"அது காத்துக்கு நெருப்பு பறந்து கூரையில பிடிச்சிட்டுதாம், தாங்கள் நெருப்ப அணைக்க எவ்வளவு முயற்சி செய்தும் அது சரிவரேல்லையாம்" எண்டு சொன்னார். இப்படியே நான் கேக்கிற கேள்விகளுக்கெல்லாம் அடுக்கடுக்காகப் பதில் சொல்லிக்கொண்டிருந்தார். நானும் உண்மை எண்டு நம்பிட்டன்.

ஒரு கிழமைக்குப்பிறகும் அவையள் வரேல்ல. அதுக்குப்பிறகு நான் அம்மாவை அப்பாவை நினைச்சு அழத்தொடங்கினன். சின்னனில இருந்து ஒரு நாள் கூட அம்மா, அப்பாவைப்பிரிஞ்சு இருந்ததே இல்ல. நான் கொஞ்சம் பெரிசா வளந்திட்டன் தான் எண்டாலும் ஒரு கிழமைக்கு மேல என்னால பிரிஞ்சு இருக்க முடியேல்ல.

நான் ஒரு நாள் பின்னேரம் அம்மம்மா வீட்ட போவம் எண்டு மாமா கூட்டிக்கொண்டு வந்து சாவகச்சேரியில எங்கட சொந்தக்காறர் வீடொன்றில விட்டிட்டு நாளைக்குப்பின்னேரம் வருவினம் எண்டு மாமா போயிட்டார்.

அடுத்த நாள் காலையிலை இருந்து முகம் கூடக்கழுவாமல் வாசலிலேயே பார்த்துக்கொண் டிருந்தன். எட்டு மணியாகியும் அவையளக் காணேல்ல. நான் அதிலயே இருந்திட்டன் என்ர எண்ணமெல்லாம் இண்டைக்கு எப்பிடியும் அம்மா அப்பா வருவினம் எண்டு இருந்தனான்.

"பிள்ள எழும்பி வாங்கோ சாப்பிடுவம்" எண்டு அன்ரி கையைப்பிடிச்சவா.

"எனக்குப்பசிக்கேல்ல, சாப்பாடு வேண்டாம்"

"அம்மா நாளைக்கு வருவா, இப்ப முகம் கழுவீட்டு சாப்பிடுங்கோ" எண்டு என்ன கிணத்தடிக்கு கூட்டிக்கொண்டு போய் கால் முகம் கழுவி விட்டு சாப்பாடு தந்திச்சினம். "எனக்குப்பசிக்கேல்ல, அம்மா வந்தால்தான் சாப்பிடுவன் " நான் அழுது அடம் பிடிச்சன். "அழாதேங்கோ, பிள்ளேன்ர அம்மா நாளைக்கு வருவா இப்ப சாப்பிட்டுட்டு வாங்கோ. நாங்கள் கோயிலுக்குப்போவம்" என்னை ஆறுதல் படுத்தினா.

அன்ரிக்குப்பிள்ளையள் ஒருத்தரும் இல்லை. அதால என்னில நல்ல பாசம் தன்ர பிள்ள மாதிரியே என்ன வைச்சுப்பாப்பா. நான் எப்ப அழுதாலும் இண்டைக்கு வருவினம், நாளைக்கு வருவினம் எண்டு சாட்டுச்சொல்லிக்கொண்டே இருந்தா. ஒரு மாதமாகியும் அம்மா அப்பா வரேல்ல. நான் அழுதுகொண்டு திரியிறதப்பாத்திட்டு அன்ரி, மாமாவுக்கு கடிதம் போட்டா. மாமா வந்தவுடன நான் மாமாவோட போகப்போறன் எண்டு ஒரே பிடியா நிண்டன். அதற்குப்பிறகு தான் என்ன அம்மம்மா வீட்ட கூட்டிக்கொண்டு போக வந்தவர். அங்கேயும் அம்மா, அப்பாவைக்காணேல்ல. அம்மம்மாவுக்கு வருத்தம் எண்டு சொன்னவயள். ஆனா, அவ அங்க நல்லாத்தான் இருந்தவா.

போன உடன " அம்மா எங்க மாமா?" எண்டு கேக்க, சின்னமாமாவோட ரெலிபோன் கதைக்க கொழும்புக்கு போட்டினமாம் எண்டு சொன்னார். இப்படியே ஒவ்வொரு சாட்டாச் சொல்லிச் சொல்லிக் காலம் கடத்திச்சினம்.

ஒரு நாள், அதுவும் பௌர்ணமி நிலவில நானும் பக்கத்து வீட்டு அன்ரியின்ர சசியும் விளையாடிக்கொண்டிருந்தனாங்கள். அம்மம்மாவும் அன்ரியும் எங்கட அம்மான்ர பெயரைச்சொல்லி நாளைக்கு ஏதோநினைவு நாளாம் எண்டு கதைச்சது எனக்கு அரையும் குறையுமாக விளங்கினது. இந்தக்கதையை அம்மம்மாட்ட கேக்கோணும் எண்டு ஞாபகமா இருந்தன்.

அடுத்த நாள் வெள்ளன எழும்பி அதுக்குரிய ஏற்பாடுகளெல்லாம் செய்ய அப்பதான் எனக்கு விளங்கினது. செத்த ஆக்களுக்குத்தான் படம் வைச்சு படைக்கிறவையள். அப்ப என்ர அப்பா அம்மா செத்திட்டினம் எண்டு எனக்கு வடிவாத் தெரிஞ்சிட்டிது. அதுக்குப்பிறகு என்ர மனதுக்குள்ள அழுது போட்டு இருப்பன். இப்பிடியே காலம் கடந்தது.

ஒரு நாள் இரவு நானும் அம்மம்மாவும் நிலவில இருந்து கதைச்சுக்கொண்டு இருக்கேக்க திடீர் எண்டு என்ர அம்மான்ர நினைவு வந்திட்டுது. சின்னனில அம்மா எனக்கு இரவில சாப்பாடு தீத்திறதெண்டால் நிலவைக்காட்டித்தான் தீத்துவா. இதையெல்லாம் நினைக்க எனக்கு அழுகை வந்திட்டுது. நான் அழுது போட்டு இனியெண்டாலும் அம்மா அப்பா எங்க எண்டு உண்மையைச் சொல்லுங்கோ எண்டு அம்மம்மாட்ட கெஞ்சிக் கேட்டன். அப்ப தான் அம்மம்மா சொன்னவ.

அண்டைக்கு பகல் வந்து போனவர்கள் 10 மணிபோல ஜீப்பில வந்து அம்மாவையும் அப்பாவையும் கடைக்குள்ள விட்டுப்பூட்டி போட்டு பெற்றோல் ஊத்தி நெருப்புவைச்சவங்களாம்.

அப்பாவும் அம்மாவும், "காப்பாற்றுங்கோ, காப்பாற்றுங்கோ" எண்டு கத்தினவையளாம்" என்றவளின் கண்களில் நீர் கசிய, கசிந்த நீரைத்துடைத்து விட்டு "அவயள் கத்த எங்கட மாமாவும் சித்தப்பாவும் பக்கத்து வீட்டுக்காரர்களும் ஓடி வந்து மறிச்சவையளாம். அவையளையும் பிடிச்சு நெருப்பில போட்டிட்டாங்களாம், ஒருத்தற்ற பொடியும் எடுக்கேல்லையாம் என்றவள், மௌனமாக இருக்க அவளின் கண்களில் நீர் வடிந்து கொண்டிருந்தது.

**காரிகை**

"அழாத சுசி, உன்னை மாதிரி எத்தனையோ பேர் மனதுக்குள்ள பூட்டி வைச்சிருக்கினமோ? ஆருக்குத்தெரி யப்போகுது? அழாத வா, நேரமாச்சு முகத்தைக்கழுவிட்டு சாப்பிடு, குழைச்சுத்தாறன்" என்றவள், சுசியை கிணற்றடிக்கு கூட்டிச்சென்றாள். இருவரும் முகம் கழுவி விட்டு சாப்பிடத் தயாரானார்கள். "கௌதமி இண்டைக்கு எனக்கு ஒரு மாதிரி இருக்கு, இண்டைக்குத்தான் உன்ர கையால கடைசிச்சாப்பாடோ தெரியாது.?"



# எவ்வளவிற்கு சுதந்திரத்தை அனுபவிக்க நினைக்கிறோமோ...

மழைக்கு முளைக்கும் காளான்கள்போல புதுக்குடியிருப்பு பிரதேசம் எங்கணும் புதுவீடுகள், புதுமுகங்கள், புதுக்குடிமிருப்புப் பிரதேசம் ஒரு குறியீடு.

நெல்லுக்கிறைப்பது புல்லுக்கும் பொசிவது போல புல்லுக்கு இறைக்க எடுக்கும் இடைவெளிக் காலம் நெல்லுக்கும் பொசிவதாய் ஒரு உணர்தல்.

புது வீடுகள், புதுமுகங்கள் மரணத்துள் வாழ்ந்த மனங்களுக்கு மகிழ்ச்சி புத்துயிர்ப்பு. நெருப்புக்குள் நீந்தியும் நிமிர்ந்துகொள்ளும் நிமிர்வு நிம்மதியாய்; நிறைவாய் புத்துயிர்ப்பில் புத்துயிர்ப்பு பிறக்கிறதுதான். புற்று இருந்து விடக்கூடாது என் பதில் தான் கவனம் வேண்டியிருக்கிறது. நீடிப்பு, நிலைப்பு இருப்பில் இருப்பது நெருடுகிறது.

வீடாய் விரியும் விசாலம் நாடாயும் மேலும் மேலும் விரிய வேண்டுகிறது. அத்தி வாரங்கள் ஆழம் தான். ஆழத்தையும ஆழம் முழுங்க முடியுமே.

முடியாமல் போக ஆழம் ஆழமாக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேணும். தூர்வுகள், துழைப்புக்கள், நுழைப்புக்கள் துர்நாற்றமாய்ப் போய்விடும். தூர நோக்கோடு தூண்கள் போட வேண்டும். இறால் போட்டு சுறாப்பிடிக்க இடம் கொடுத்துவிடக்கூடாது.

புதுவரவுகள் இருந்த வெள்ளத்தையும் வந்த வெள்ளம் அடித்துக்கொண்டு போறமாதிரி அடித்துக் கொண்டு போய்விடக்கூடாது.

வெளியார் விலாசத்தில், விசாலத்தில் விசாலம், விலாசம் தேடி வீரியம் பெறவேண்டும். வேண்டாத வருகைகளை விழிப்போடு விழுத்தவேணும். 'விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி' தேசியத் தலைவரது வரிகள் தேசாந்திரமற்றது அல்ல. விலாசம்! விசாலம்.... நிதானம்.

விசாலம், விரிப்பு! இருப்பில், நிலைப்பில், கடந்து கொண்ட காலப்பட்டறிவில், நிகழ்ந்து கொண்டிருக்கும் யதார்த்த நிலைப்பாடுகளில், யாவற்றுக்குமே தீர்க்கதரிசன பார்வைவேண்டும்.எல்லோருமாய் கண்ணைத் திறந்து எல்லாவற்றை யும் பார்க்கவேண்டும். ஏடாகூடங்களை ஏட்டிக்குப் போட்டியாய் அல்லாமல் தெளிந்து பயணப்பட வேண்டும்.

'எம் தேசத்திற்காய் எங் கெங்கும்' சிதறிப் போனவர்கள் பாடமாய் பட்டறிவாய் இருக் கிறார்கள்.

பன்னாட்டு விலாசம், விசாலம் கொண்டு நம்நாட்டு விசாலம் விலாவாரியாய்ப் புரிந்திருக்கும். புரியாதவர்களும் புரியும்காலமிது.

வரியென்றால் வாயடைத்துப் போகும், வார்த்தையாடும் விபரமில்லா – விளக்கம் உணரமுடியா உறவுகளுக்கு வந்துகுவியும் உறவுகள் தரும் விளக்கம் வார்த்தைகளை வடியவைக்கிறது.

தேச இருப்பும் விரிப்பும் நிலைபெற, விதிக்கும் வரிவிதிப்பு தேய்மானமோ தேய்பிறையோ அல்ல! தேட்டமே. தேசத்திற்கான தேட்ட மாக்கலிலே வாழ்வு வளப்படுகிறது.

"எவ்வளவு சுதந்திரத்தை அனுபவிக்க நினைக்கிறோமோ அவ்வளவிற்கு சுய கட்டுப்பாட்டுடன், கடப்பாடுகளையும் அனுசரித்துக் கொள்ளுதல்வேண்டும்."

புலம்பெயர் உறவுகளின் பட்டறிதல் புரிதலை வேண்டுகிறது.

இரவு பகல் பாராத நீடித்த உழைப்பில் அரைப் பாகம் தேசகட்டு மானத்திற்காய் தேட்டக்கணக் கில்வைப்பாகிறது. அவரவர் அறியவும் அறியப்படாமலும் (அறிவு நிலைசார்ந்து) அந்தந்த நாடுகளில். அந்தந்த நாடுகளில் செழிப்பின் செல்வாக்கின் இரகசியம் இதிலேதான். நிரந்தரக் குடியானாலும் நிலைபெறாத குடியானாலும் நியதியே.

தேசிய பாதுகாப்பு பதினெட்டானதும் வாசல் வந்து வரவேற்கிறது. தயங்குபவனுக்கும் வலுவற்றவனுக்கும் பொதுச்சேவை காத்திருக்கின்றது. மூன்று வருடங்கள் எந்த மூலை முடுக்கில் இருந்தாலும் வசப்பட வேண்டியவரே.

வசந்தம் வாசல் வர வரைதல்களே; வரையறைகளே வாய்ப்பாய் அமைந்திருப்பதாய் அந்நாட்டவர்கள் அனு பவஸ்த்தர்கள், அறிந்தவர்கள் பகிர்கிறார்கள்.

வசந்தம் வாசல்வர அனுபவங் கள் அறியப்படல், ஆராயப்படல் வேண்டும். ஆலமரமாய் விழுதெறிய அனைத்திலும் அனைத்தையும் துல்லி யமாய் கூறு போட்டறிதல் வேண்டும். கூடிக்கொடிபிடிக்க வேண்டும். கோபுரங்கள் சமைக்க வேண்டும். கோலா கலமாய் குதூகலிக்கவேண்டும். கூட்டுறவாய் நாட்டுற விலும்.

விடுத்தால் வினைதான். மக்கள் வாழும் வாழ்க்கையைப் பொறுத்தே உலகத்தின் நிலைமையும் காலத்தின் நிலைமையும் மாறிமாறி அமைகின்றன.

ஔவைப்பெரும் புலவரும் இதனைக் குறிப்பிட்டிருக்கின்றார். நாடு அல்லது காடு, மேடு அல்லது பள்ளம் என்னும் இந்த வெளித்தோற்றத்தைக் கண்டு யாராவது நல்ல நிலம் கெட்ட நிலம் என்று பிரிக்கிறார்களா? பிரிப்பதுதான் பொருத்தமாகுமா? என வினவிப் பதிலிறுத்திருப்பது, எந்தப் பகுதியில் மக்கள் நல்லவர்களாக விளங்கி சிறந்த வாழ்வு வாழ்கிறார்களோ அந்த நிலப்பகுதியை நல்ல நிலம் என்று கூறவேண்டும் என்றிருக்கிறார். காலப்பொருத்தமாய் நல்லவர்கள் என்ற ஔவை மொழியோடு இன்று வல்லவர் களாகவும் என்று இணைத்துக் கொள்ளுதல்வேண்டும்.

ஔவையின் செப்பல்,

நாடா கொன்றோ காடாகொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

(புறநானூறு–187)

— ஆதித்தநிலா

---

"சும்மா வாய வச்சுக்கொண்டு இரு. உனக்கு நெடுக ஒரு மாதிரித்தானே இருக்கிறது. இப்ப சாப்பிடு, பிறகு கதைக்கலாம்" "இண்டைக்கு நான் செத்தால் எவ்வளவு சான்ஸ். அம்மா அப்பாவோட ஒண்டாபோயிடுவன்" என்றவாறே சாப்பிடத்தொடங்கியதும்,

"கலோ....கலோ.... இந்திரா றோமியோ, பப்பா லீமா" என வோக்கி அலறத்தொடங்கியது.

"இந்திராக்கா வோக்கி கூப்பிடுது" என்றவள் சாப்பிட்ட குறையில் வோக்கியை எடுத்தாள். வோக்கியில், "உங்களுக்குரிய ஒழுங்கைச் செய்து கொண்டு லீமாசேரான்ர இடத்துக்குப் போங்கோ" "வேறு ஏதாவது இருக்கா" என ஆவலுடன் வினாவினாள். "வேறு ஒன்றும் இல்லை நன்றி" என்றதும் வோக்கியை அவுட் செய்து விட்டு, "அக்கா, எங்கட ஆக்களைக் கூட்டிக்கொண்டு லீமா சேரான்ர இடத்துக்கு போகட்டாம் எண்டு இப்ப பப்பா லீமா அறிவிச்சிருக்கு" என்றவள் தன்னைத் தயார் செய்தாள்.

"பிள்ளையள் கெதியா வெளிக்கிடுங்கோ, கௌதமியும் சுசியும் மெயினில உடுப்பு பாக்கை வைச்சிட்டு வரட்டும்! எல்லோரையும் தயார் படுத்தி விட்டு இந்திரா தன்னைத் தயார் படுத்திக்கொண்டாள். எல்லோரும் தயாரானார்கள் அணி செல்ல வேண்டிய இடத்தை நோக்கி நகரத் தொடங்கியது. இடத்தைச் சென்றடைந்ததும் பொறுப்பாளரால் தாக்குதலுக்குரிய இடமும் நேரமும் கொடுக்கப்பட்டது.

இந்திராவின் அணி இலக்கை எதிர்பார்த்துக் காத்திருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் சண்டை ஆரம்பமானது. அரைமணி நேரம் உக்கிர சண்டை. "பிள்ளையள், ஆமி முன்னேறுகிறான். உடைக்க விடாதேங்கோ. அடியுங்கோ" இந்திரா கத்தினாள்.

"என்ர பக்கத்தால அவன்வாறதெண்டால் என்ர பொடியைக் கடந்துதான்..." என்றவள் தனது காவலரணின் முன் வரும் எதிரியை, ஒவ்வொன்றாகக் குறிபார்த்து விழுத்திக்கொண்டிருந்தாள். இடைக்கிடையே எதிரியின் எறிகணையும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ வந்த எறிகணைச் சிதறல் ஒன்று சுசியின் மார்பைப்பதம் பார்த்தது. ஒரு கணம் தாமதித்தவள், நிலமையைப் புரிந்து கொண்டாள். அணையப்போகும் சுடரின் பிரகாசமாய், அவளது துப்பாக்கி ஆக்ரோசமாய் கக்கிக் கொண்டிருந்தது. துப்பாக்கிக் குழல் சிவந்து போனது. சுசி துப்பாக்கி நழுவுவதை உணர்ந்திருக்க வேணும். இறுகப் பற்ற முயன்றாள். கௌதமி புரிந்து கொண்டாள். "கௌதமி உள்ள வர விட்டிடாதையுங்கோ..." மண்ணை முத்தமிடுகையில் அவள் சொன்ன வார்த்தைகள்.... கௌதமி அவளது கனரகத் துப்பாக்கியைப் பற்றி இயக்கத் தொடங்கினாள். ●

---

# ரத்தபந்தம்



என்னை மட்டுமல்ல
என் தேசத்தையும்
வாழவைக்க வேண்டும்

ஈமோக்குளோபின் தான்
அதற்கு சிகப்பு நிறத்தைக்
கொடுத்ததென்று
விஞ்ஞானம் சொன்னாலும்
தேசியக்கொடியின்
விழிகளை நினைத்தே
அது சிகப்பாய் ஓடுகிறது.

களத்தில் தசை அறுந்து
துளித்துளியாய் ரத்தம்
ஒழுகும் போதும்
மண்ணின் மடியில் அவை
புதிதாய் பூக்குமென்பதால்
சிரிப்பேன் சிலிர்ப்பேன்

இத்தனை நாளும்
என் தேசத்தை நேசித்த
அத்தனை நேசிப்புகளையும்
அள்ளி வெளிக்காட்டக்கூடிய
அரியதொரு பொருள்.

மருத்துவ அறிக்கை மட்டும்
என் இரத்தத்தை O+ என்கிறது
இதோ....
கொதிக்கிறதே என் ரத்தம்
அது
உண்மையிலேயே தமிழ் ரத்தம்

எனக்கும் தமிழீழத்திற்கும்
ரத்த பந்தம்....
அது தான்
உரிமையோடு உதிர்க்கிறேன்
உதிரப் பூ ....

தே.ஈரத்தீ



# வேண்டுதல்



நீ என்னவோ,
நானென் வாழ்நாளின்
சுவாசமும் விழிகளும்
நீயென்றேயிருந்தேன்
உனது மௌனம்
எனக்கும்,
எனது தவிப்பு
உனக்குமிடையே,
எவ்வாறு இடைவெளிகளை
ஏற்படுத்தியது.?
என் மாபெரும் கனவுகளின்
மூலவேர்களையும் சிதைத்து
நாளை நீ
இன்னொருவனின் கைப்பிடிக்கலாம்
இன்னொரு உயிரை நீ
சுமப்பதற்கு முன்
நிச்சயமாய்
நானிறந்து போய்விட வேண்டும்.
உன் மடிக்கு
குழந்தையாகவாவது
பிறப்பதற்கு.
அல்லது
அடுத்த பிறப்பிருப்பதுண்மையெனில்
ஈரானின்
இரட்டைச் சகோதரிகள் போல...
நீயும், நானும்
(ஆணும்,பெண்ணுமாய்)
ஒட்டிப்பிறக்க வேண்டும்
பிரிக்க முடியாதவர்களாக
பிரித்தாலும்.....?
இறந்து போகக் கூடியவர்களாய்.

ஆவரங்கால் சுதன்



# குழந்தைநாதம்

## சிறுவர்கதை

# பொறுத்தார் பூமி ஆள்வார்

ஓர் ஊரிலே சுதன், சுமன் என இரு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் மிகவும் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்களுக்கு சொந்தம் என்று சொல்ல யாருமே இல்லை. இருவரும் தமக்கு தெரிந்த வேலைகள் செய்து அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு பாடசாலை சென்று படித்து வந்தார்கள். எனினும் அவர்களுக்கு மேற்கொண்டு படிப்பதற்கு பணம் போதாமல் இருந்தது. மிகவும் சிரமப்பட்டார்கள்.



இவ்வாறு அவர்கள் சிரமப்பட்டு படித்துக்கொண்டு இருக்கும் போது அவர்களின் தூரத்து உறவான அண்ணா ஒருவர் இருப்பதாகவும் அவர்கள் மிகவும் வசதியாக இருப்பதாகவும் அறிந்தார்கள். எனவே தாம் மேற்கொண்டு படிக்க விரும்புவதாகவும் தமக்கு 500/= பணம் தந்து உதவுமாறும் அவர்கள் அண்ணாவிற்கு கடிதம் எழுதி அனுப்பினார்கள்.

சில நாட்கள் கழிந்து அவர்களுக்கு 100/= பணம் கடிதம் மூலம் கிடைத்தது. அதை கண்ட சுதன் என்ன தம்பி நாம் 500/= பணம் கேட்டு எழுதியிருந்தோம் அவரோ 100/= அனுப்பியிருக்கிறார். எமக்கு இந்தப் பணம் வேண்டாம் திருப்பி அனுப்பி விடுவோம் எனக் கூறினான். அதைக் கேட்ட சுமன் கோபப்படாதீர்கள் அண்ணா, எம்மை முன்பின் தெரியாதவர் எங்களுக்கு அனுப்பியிருக்கும் போது நாம் அந்தப்பணத்தை வைத்தே கல்விக்காக செலவு செய்வோம் என அறிவுரை கூறினான்.

அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் நன்கு படித்து பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றனர். தாம் பெற்ற பெறுபேற்று அறிக்கையும் அவர்கள் அனுப்பிய 100/= பணத்திற்கும் நன்றி தெரிவித்து கடிதம் எழுதி அனுப்பினான் சுமன்.

சுமன் அனுப்பிய கடிதம் அவருக்கு கிடைத்ததும் அவர் மிக்க சந்தோசம் அடைந்தார். நான் எவ்வளவு பேருக்கு பணம் கொடுத்து உதவியிருப்பேன் ஒருவரும் நன்றி சொல்லி கடிதம் அனுப்பியதில்லை. ஆனால் நீ விபரமாக கடிதம் எழுதி யிருக்கிறாய். உன் நல்ல பண்பை வெளிப்படுத் தியிருக்கிறாய் நான் உனக்கு 500/= பணம் அனுப்பி வைக்கிறேன் - மேற்கொண்டு படிப்பதற்கும் உதவி செய்வதாக அவர் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். அவர் 100/= அனுப்பியபோது பொறுமையாக இருந்த படியால் இன்று அவர்கள் உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

**இ.நிஷா**

## வாரம் ஒரு குறள்



*வாய்மை என்பது தீய சொற்களை உச்சரிக்காமை என்று கூறினாலும், உண்மையில் அடுத்தவர் துன்பப்படும் செய்கையிலும் நடந்து கொள்ளாமை என்றுதான் கூற வேண்டும். தீயவை என்பதனுள் பொய்யுரைத்தலும் அடங்குகின்றது. ஆனால் காரிய மொன்று. ஒரு பொய்யினால் தான் நன்மையளிக்குமெனில் அந்தப் பொய் சொல்வதில் தவறில்லை. அது வாய்மை தவறியதாகவும் கொள்ளப்படுவதில்லை. கொள்ளவும் கூடாது என்பதை தான் இந்தத் திருக்குறள் எடுத்தியம்புகின்றது.*

*"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்"*

## சொற்சிலம்பம் - 06

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ட் | க | டி | வி | சி | ல் | க் |
| து | ன | பு | ள | க் | கு | ளை |
| க் | க | அ | வு | ட் | வா | ழ் |
| பா | அ | ழ | க | ய் | க | ம் |
| சி | ன் | கி | பெ | மை | னா | ன |
| கு | கு | ர் | மா | சா | மி | ம் |
| ண் | த | ய | கு | க | ன் | ளா |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

## சொற்சிலம்பம் - 04 இன் விடைகள்

01. மான்.
02. கரடி.
03. நரி.

01. கிளி.
02. காகம்.

### சொற்சிலம்பம் - 04 இன் பரிசுக்குரியவர்

**பா.தனுசா,**
**யாழ்/ஏழாலை மகா வித்தியாலயம்,**
**ஏழாலை**

### சொற்சிலம்பம் - 04 இன் பாராட்டுக்குரியவர்கள்

01) இ.சர்மிலன்,
மு/அனிஞ்சியன்குளம்,
அ.த.க.வித்தியாலயம்.

02) ப.பிரசன்னா,தரம்-5A,
விபுலானந்தாக் கல்லூரி,
வவுனியா.

03) சாம்சன்,
தரம் -01,
முக்கொம்பன்,பூநகரி.

ஓலையால் செய்யப்பட்ட பொருட்கள்?

01) ......................................
02) ......................................
03) ......................................

பழங்கள் இரண்டு?

01) ......................................
02) ......................................

*சொற்சிலம்பம் -06*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

பெயர்

முகவரி :-......................................................

## பெற்றோர்கள்



அன்பை வளர்த்து
அறிவைப் பெருக் கெடுத்து
பண்பின் சிகரமாய்
வளர்பவர்கள் பெற்றோர்கள்.

தம்மை மறந்து உழைத்து பிள்ளையை
வளர்க்கப்படும் பாடுகள் எத்தனை
பத்துமாதம் சுமந்து பெற்றவள் அன்னை
பலூட்டி சீராட்டியவள் அன்னை.

தோளில் எம்மைத் தாங்கி நிலா காட்டியவர் தந்தை
உடலை வருத்தி உழைத்து எம்மை வளர்த்தவர் தந்தை
பள்ளியில் சேர்த்துவிட்டு பார்த்த விழிபூத்திருப்பாள்
அன்னை
வைத்தியராக வந்தால் வைத்தியம் பார்ப்போம்
ஆசானாக வந்தால் அறிவூட்டிடுவோம்
எங்களை வளர்த்த பெற்றவர்கள் மனம் நோகும்
வண்ணம் செய்வது தவறு.
பெற்றவர்கள் எம்மை எண்ணி ஏங்குவார்கள்
நாம் அவர்கள் மனம் நோகா வண்ணம் வாழ்வோம்

**S.லயாசினி, கிளிநொச்சி ம.வி**

## நகைச்சுவை



**முதலாளி** :-
நேற்றுத்தான் மழைவந்த தால குடை இல்லை என்று நேரம் செல்ல வந்தாய் இண்டைக்குத்தான் குடைவைச்சு இருக்கிறாய் பேந்து ஏன் லேட்?


**வேலைக்காரன்** :-
மழைக்காகவே காத் திருந்தனான் சேர்.

**நிறஞ்சன்**

## வேண்டும்

**ஆயிரம் உறவுகள்**
**இருந்தாலென்ன அம்மா உங்கள்**
**அன்பு வேண்டும் சொந்தங்கள்**
**ஏராளம் வந்தா லென்ன - அம்மா**
**உங்கள் பாசம் வேண்டும், உங்கள்**
**பரிவும் எனக்கு வேண்டும்.**

யே. அமலதாஸ், தரம்-7
C.C.T.M.S, வவுனியா










# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா-

அவரைவிதை அரைக்கும் ஆட்டுக்கல்லையும் இரும்பன் தன் தாயாருக்கு நிறுவிக்கொடுத்தான். அன்று காலையிலே எட்டாவது வழி இராணுவத்தினர் வருகிறார்கள் என்று கேள்விப்பட்ட உடனேயே, அவள் ஒரு கொத்து சோயா போஞ்சி விதைகளை ஊறப் போட்டிருந்தாள். இப்போ அவற்றை அரைத்து, மக்கள் இராணுவ வீரர்களுக்கு சோயாத்தயிரையும் தாளித்த கூட்டையும் தயார் செய்யத்தொடங்கினாள்.

பதிவான முக்காலி ஒன்றில் அமர்ந்து, ஒருகையால் ஆட்டுக்கல்லை ஆட்டியபடி, மறுகையால் போஞ்சி விதைகளை அள்ளி ஆட்டுக்கல்லுக்குள் போட்டுக்கொண்டிருந்தாள்.

ஆட்டுக்கல்லைச் சுழற்றுவதற்கென முன்னாலும் பின்னாலும் குனிந்து நிமிர்ந்த பொழுது தலையிலிருந்து ஒரு கற்றைமயிர்கள் அவள் கண்களுள் விழுந்து தொல்லை கொடுத்தன. அவள் தன் தலையை மீண்டும் ஒரு முறை குலுக்கி மயிர்க்கற்றையை பின்னால் எத்திவிட்டு, "இரும்பா, எனக்காக ஆட்டுக்கல்லுக்குள் விதைகளை அள்ளிப்போடு" என்று கூவி அழைத்தாள்.

ஆனால் இரும்பனுக்கு அதற்கு நேரம் இருக்கவில்லை. வீதியிலே மக்கள் ஓடும் சத்தத்தையும் அவர்களின் குரல்களையும் கேட்ட அவன், "எட்டாவது வழி அணியினர் வந்து விட்டார்கள்" என்று உரத்துக்கூறிக்கொண்டே வெளியே ஓடிவிட்டான்.

"அவன் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறான். எட்டாவது வழி இராணுவத்தினர் வந்தால், அவன் பள்ளிக்குப் போகலாம்'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்ட அந்தத்தாயின் முகத்தில் புன்னகை படர்ந்தது.

சிறிது நேரத்துக்குப்பின் "இரும்பன், கடதாசியில் செய்த வெளிச்சக் கூடு ஒன்றுடன் ஓடிவந்தான். "எட்டாவது வழி இராணுவத்தை வரவேற்கிறோம்" என்ற வார்த்தைகள் சிவப்பு நிறத்தில் அதில் ஒட்டப்பட்டிருந்தன. தன் தாய் பார்ப்பதற்காக அதனை உயரே தூக்கிப்பிடித்தவன் முகத்தில் புன்னகை பெரிதாக விரிந்திருந்தது. "எங்களிடம் மெழுகுதிரிகள் ஏதாவது இருக்கின்றனவா? மானவோ அன்ரி எனக்கு இதைத் தந்தார்" என்றான்.

" எங்களிடம் எப்போ மெழுகுதிரி இருந்தது? முட்டாள் பையனே!, என்று மாவை அரைத்துக்கொண்டே கேட்ட அவன் தாயார், " அதுசரி இவ்வளவு பிரகாசமான நிலவு எறித்துக்கொண்டிருக்கும் பொழுது வெளிச்சக்கூட்டை ஏன் கொழுத்த வேண்டும்?'' என்று கேட்டாள்.

இரும்பன் ஆற்றாமையால் காலை தூக்கி நிலத்தில் குத்தினான். தனது உற்சாகம் என்ற நெருப்பின் மீது நீரை ஊற்றி அணைப்பது போல் தாய் பேசியது அவனுக்குச் சிறிது ஏமாற்றமாகவும் இருந்தது. அவன் அயல் வீட்டுக்கு ஓடிப்போய் அங்கிருந்த ஆச்சியிடம் மெழுகுதிரித்துண்டு ஒன்றைக் கேட்டுப் பெற்றுக்கொண்டான். தனது வெளிச்சக்கூட்டைக் கொழுத்திக்கொண்டு வீதிக்கு இறங்கிய அவன், சிவப்பு, அல்லது பச்சை வெளிச்சக்கூடுகளை வைத்திருந்த பிள்ளைகளோடு சேர்ந்து கொண்டான்.

அவர்கள் எல்லோரும் பெரியவர்களோடு சேர்ந்து கிராமத்தின் விளிம்புக்கு ஓடிப் போனார்கள்.

இரும்பனின் பேரன் பிள்ளைகளைக்கண்டதும், "வீரர்கள் வரப் போவதை இரகசியமாக வைத்திருக்கும்படி



முன்னோடி பிரிவினர். சொன்னார்கள் அல்லவா? அப்படியானால் ஏன் இந்த ஆரவாரங்கள்" என்று உற்சாகத்துடன் குரல் கொடுத்தார். எனவே இரும்பனும் ஏனைய பிள்ளைகளும் தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போனார்கள். அவனது வெளிச்சக்கூடு வளையொன்றிலிருந்து தொங்க விடப்பட்டது. அதனுடைய உற்சாகமூட்டும் வெளிச்சம் அந்த அறைக்கு ஒரு திருவிழா நாள் தோற்றத்தை கொடுத்துக்கொண்டிருந்தது.

கிராமத்து எல்லையிலே பெரும் தொகையில் மக்கள் திரண்டிருந்தார்கள். அவர்களுடைய பார்வைகள் சியாங்சுண் நதி மீதான பாலத்தின் மீது நிலைத்துக் கொண்டிருந்தன. அந்த பாலத்தின் வழியாகத்தான் படைவீரர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

இரும்பன் அந்தச்சனக்கூட்டத்திடையே அங்குமிங்கும் ஓடித்திரிந்தான். "அவர்கள் வருகின்றார்களா? அவர்கள் வருகின்றார்களா? என்று அடிக்கடி கேட்டபடியிருந்தான்.

ஒரு வயது முதிர்ந்தவர் நன்றாகப் பார்க்கும் படி தனது கண்களை தேய்த்து விட்டுக்கொண்டிருந்தார். அவருடன் யாரோ வந்து மோதிக்கொண்டார்கள். "யார் அது" ஏன் என்னை இடித்துத் தள்ளுகிறாய்" என்று உரத்துக்கேட்டார் இரும்பன்தான் அது. மகிழ்ச்சியாக சிரித்தபடி "நான் இனி பள்ளிக்கு போகலாம்!" என்று உரத்துச்சொல்லிக் கொண்டிருந்தான். அந்த வேளையிலே அவனுக்கு அண்மையிலே பண்ணையார் ராயின் மகனும் நின்று கொண்டிருந்தான். அங்குமிங்கும் முழுசி முழுசிப்பார்த்தபடி நின்று கொண்டிருந்த அவனுக்கு இதைக்கேட்டதும் நடுக்கம் ஏற்பட்டது. அவன் ஆட்களுக்கு இடையே புகுந்து நழுவிச்செல்ல ஆரம்பித்தான். அவனுக்குக் கேட்கட்டும் என்று இரும்பன் "நான் இனி பள்ளிக்குப்போகலாம்!" என்று மீண்டும் கத்தினான்.

நிலவை மறைத்து மூடுபனி சூழ்ந்திருந்தது. தங்கள் கண்கள் களைத்துப் போகும்வரை அவர்கள் தொலை தூரத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

"நாங்கள் அவர்களுக்காக நீண்ட நேரம் காத்திருக்கிறோம். இந்தளவுக்குள் அவர்கள் வந்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக விருக்கும்." என்று அங்கிருந்த ஒருவர் சொன்னார்.

(தொடரும்...)

தமிழில்
வி.பி.யோசப்

# 50 கோடி ரூபா செலவில் பாய்ஸ் சாதிப்பதென்ன?

இலங்கையிலும் இந்தியாவிலும் அரங்கம் நிறைந்த காட்சிகளாக சங்கரின் பாய்ஸ் (**BOYS**) திரைப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது. கொழும்பில் இரண்டு பெரிய திரையரங்குகளில் முன்கூட்டியே பதிவு செய்யாமல் அனுமதிச் சீட்டுக்கள் பெறமுடியாது. அந்தளவு சனத்திரள்.

தென்னிலங்கையில் - குறிப்பாக கொழும்பு போன்ற நகரங்களில் சாதாரண தமிழ் திரைப்படங்களுக்கு மக்கள் செல்வது மிகக் குறைவு. வி.சி.டிகள் மூலம் வீட்டிலேயே புதுப்படங்களை பார்த்து விடுவார்கள். மலையாளத்திலிருந்து தமிழில் 'டப்' செய்யப்பட்டு வெளியிடப்படும் ஆபாசத்திரைப் படங்களை பார்ப்பதற்கே திரையரங்குகளில் கூட்டம் அதிகம். (இன, மொழி, பேதமின்றி பார்க்கக்கூடிய படங்கள் அவை!)

'பாய்ஸ்' திரைப் படத்திற்கு கூட்டம் அதிகமாகவிருப்பதற்கு காரணம் ஒன்று, வி.சி.டிகள் கடைகளில் இல்லை. வி.சி.டிகளில் பதிவு செய்ய முடியாதபடி புதிய தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளதாம். இரண்டாவது ஆபாசம்!.

பொறுப்பற்றுத்திரியும் விடலைப்பருவத்து இளைஞர்கள் பின்னர் திருந்தி வாழ்வில் வெற்றி பெறுவதே 'பாய்ஸ்' படத்தின் கதை. இடைவேளை வரையும் இளைஞர்களின் குறும்புகளை மிகஆபாசமாகவே காட்டியிருக்கின்றார் இயக்குநர். காட்சிகளுக்கு போட்டியிடுவதுபோல் ஆபாசவசனங்களை எழுதித்தள்ளியிருக்கிறார் பிரபல எழுத்தாளர் சுஜாதா. குடும்பத்தினரோடு இருந்து படம் பார்க்க முடியவில்லை என தமிழக இரசிகர்களே கூச்சப்படுகின்றனராம்.



இயக்குநர் சங்கர் இப்படத்தை திரையுலக பிரமுகர்களுக்கு போட்டுக் காட்டிய போது அவர்களே அசடு வழிந்தனராம். தனது மகள்களுடன் படம் பார்த்த நடிகர் ரஜனிகாந் இடையில் மகள்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்று விட்டாராம். 'குமுதம்' போன்ற சஞ்சிகைகளே ஆபாசம் ஆபாசம் என்கின்றன. 'இந்தியா ருடே' இப்படத்தை கண்டித்து காட்டமாக விமர்சனம் எழுதியிருக்கிறது.

யாழ்ப்பாண திரையரங்கொன்றில் இருநாட் கள் மட்டுமே படம் ஓடியது. நண்பர் ஒருவர் கூறினார் ஒரு தந்தையும் மகனும் படம் பார்த்து விட்டு பலநாட்கள் ஒருவரையொருவர் முகம் பார்க்க முடியாமல் இருந்தனராம்.

''வெற்றி பெற்ற இளைஞர்களின் வாழ்க்கையை பாசாங்கில்லாமல், நேர்மையாகச் சொல்லியிருக்கின்றேன். பொறுப்பின்றித் திரியும்போது பொறுப்பற்றவர்களாகவும் பொறுப்பு வந்தவுடன் பொறுப்புள்ளவர்களாகவும் காட்டியிருக்கின்றேன். அந்தவயதிற்குள்ளான தெரிந்து கொள்ளும் ஆர்வங்களை - அத்துமீறல்களை - குழப்பங்களை கற்பனையாகச் செய்யாமல் நிஜவாழ்க்கையில் நடக்கின்ற - நடந்த சம்பவங்களை வைத்தே சொல்லி யிருக்கின்றேன்.''

இது இயக்குநர் சங்கரின் வாக்கு மூலம்.

இடைவேளைக்குப் பின்னர் அந்த இளைஞர்களை பொறுப்புள்ளவர்களாவும் கடினஉழைப்பாளிகளாகவும், தியாகம் புரிபவர்களாகவும் சித்தரித்து, முதற்பாதி ஆபாசங்களை 'பலன்ஸ்' செய்வதில் இயக்குநர் தோற்றுப்போகிறார். படத்தைப்பார்த்து விட்டு வெளியே வருபவர்களின் மனங்களில் முதற்பாதி ஆபாசங்களே நிறைந்து வழிகிறது.

இயக்குநர் சங்கர் தற்கால இளைஞர்களுக்கு புதிய வழிமுறையொன்றை போதித்துள்ளார். அதாவது பஸ்ஸிலும், கடைத்தெருவிலும் பெண்களோடு உரசலாம்., அங்கசேட்டைகள் புரியலாம், விலைமாதை ஒருவருமில்லாத வேளையில் வீட்டுக்கழைத்து வரலாம். இம்மாதிரியான செயல்கள் இளமைப் பருவத்து குறும்புகளேயன்றி குற்றச்செயல்கள் அல்ல என்பது தான் அது.

ரவுடிகளை கதாநாயகர்களாக சித்தரித்து வெளிவந்த திரைப்படங்களினால் அப்படங்களின் பெயர்களிலேயே குழுக்களாக காடைத்தனம் புரியும் இளைஞர்கள் சிலர் எமது யாழ்.மண்ணிலேயே முளைத்து விட்டமை தெரிந்த விடயமே.'பாய்ஸ்' போன்ற திரைப்படங்கள் இவ்விளைவுகளை இன்னொரு சீரழிவுக்கு இட்டுச்செல்லும் என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

எனவே இவ்வாறான திரைப்படங்களை எமது மண்ணில் தடை செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

**வேனிலன்**




## விழிப்பாயிருப்போம்

எம் வீடு பற்றி எரிந்த
போது
தம் வீடு பெருமை பற்றி
புகழ்ந்து பேசி
பூரித்து நின்றவர்
எரிந்ததின்
எச்சங்களுக்காய்
அனுதாபம் ஏந்தி - இன்று
இடம் பிடிக்கப்பாப்பர்
இன்னோர் எரிப்பிற்கான
அத்திவாரமிடலாய்.
விழிப்பாய் இருப்போம்
வரும் வினை தவிர்ப்போம்.

கு.தவசீலன்

## ஒருமுறை

உன்னைக் கேட்கிறேன்
தயவு செய்து
என் கேள்வியையாவது
திருப்பிக்கேள்
மௌனத்தின் மறைவில்
நீ நிற்கும் போதெல்லாம்
நிறைய தேடவேண்டியுள்ளது
எனது தனிமை
உன்னை விலங்கிடுவதற்கான
சான்றல்ல
முயற்சித்துப்பார்
என்னை விடுவிக்க
இயலுமோ?

த.தனசீலன்

## அகிலத்திற்கு...

ஒவ்வொரு பொங்கலுக்கும்
ஒவ்வொரு பானையுண்டு
ஒவ்வொரு நிகழ்வுண்டு
அது தைப்பொங்கல்.
தமிழர் பொங்கல் - ஆனால்
ஈழத்தமிழருக்கு மட்டும்
ஓர் பொங்கலுண்டு - அது
உணர்வின் பொங்கல்
பொங்கு கடலாய்
பிரவகிக்கும் பொங்குதமிழ்
விடுதலையை வீச்சமாக
விருந்து படைக்கும் பொங்கல்
ஆசான்களே அரங்குவந்து
விடலைகளைக்கொண்டு
பொங்கும் பொங்கலில்
சுபீட்சத்தை நேசிக்கும்
சுதந்திர பிரியர்களே!
அணி அணியாய் திரண்டு
அமுதினை அருந்தி
அகிலத்திற்கு செய்தி
சொல்லுங்கள்.

உமா

## ஆசிரியன்

தூசு துடைத்தழகு
தூய்மை பேணி
மலரும் மொட்டுக்களின்
மலர்வான எதிர்காலத்தை
வளமாக்குபவன் ஆசிரியன்.

உண்மையை ஊட்டி
பொய்மையை கறந்து
நன்மையை செய்ய
தீமையை அழிக்க
வழிகாட்டுபவன் ஆசிரியன்.

உலகத்தின் ஒளி விளக்கு
உன்னாலே ஏற்றமுறும்
உன் உழைப்பின் உன்னதம்
உலகை ஏற்றி நல்மனிதனை
உருவாக்குபவனே ஆசிரியன்.

அன்பு என்ற பிணைப்பையும்
பண்பு என்ற மதிப்பையும்
உணர்த்தி கல்வி கற்று
உலகை அடக்கி வைக்க
செயற்படுத்துபவன்
ஆசிரியன்.

ந.இந்துஜா

## சொல்லவேண்டிவந்த பொய்கள்

இது நடந்தது யாழ்ப்பாண இடப்பெயர்வு நடந்து இரண்டு வருடங்களின் பின். வன்னிக்காடு சனக்காடாக மாறியிருந்த காலம். நான் க.பொ.த.உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் பரீட்சை எடுத்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுவதற்கு சில புள்ளிகள் போதாத நிலை.

எனக்கு அப்போது தேவை நாளுக்கு நூறு ரூபா சம்பளம். இதுவே எனது தவிர்க்க முடியாத உடனடித்தேவை. பத்திரிகை தவறவிடாமல் பார்ப்பேன் "பதவி வெற்றிடம்" அல்லது "தேவை" என்று ஏதாவது தலைப்பில் வேலை வாய்ப்புத் செய்தி இருக்கிறதா என்று.

குறிப்பிட்ட அந்த வேலை வாய்ப்பு "சிற்றூழியர் தேவை" ஆகக் குறைந்த கல்வித்தகைமை எட்டாம் வகுப்பு சித்தி. எனக்குத் தேவை நாள் ஒன்றிற்கு நூறுரூபா தானே விண்ணப்பித்தேன் நேர்முகத்தேர்வுக்கு. என்னிடம் இருந்த கல்விச் சான்றிதழ்களுடன் சென்றேன். அங்கும் பலர் வரிசையாக காத்திருந்தனர். குறிப்பிட்ட அந்நிறுவனத்தின் வேலை செய்பவர் ஒருவர் ஏற்கனவே எனக்குப் பழக்கமானவர். "நீரும் இன்ரவிக்கா" "ஆம்" என்றேன். "இந்த வேலைக்கு உம்மைப் போல நல்ல 'றிசல்ற்' வைச்சிருக்கின்றவையை எடுக்கமாட்டினம். ஏன் எண்டால் அவை வேற நல்ல வேலை கிடைச்சவுடனே இந்த வேலையை விட்டிட்டுப் போயிருவினம்" இதைக் கூறியவர் மாற்றுத்திட்டம் ஒன்றும் தந்தார்.

எனது முறை வந்தது.
"என்ன படிச்சிருக்கிறீர்?"
பத்தாம் வகுப்பு
"ஏன் மேல படிக்கேல்லை"
"வீட்டில கஸ்ரம்"
இப்படி பல கேள்விகளுக்கு பதில் சொல்லியும் அவ்வேலை எனக்குக் கிடைக்கவில்லை. ஏனெனில் என்னைப் போல் பல புத்திசாலிகள் பதில் கூறியதால்.!

சசி

## உற்சாக வாழ்க்கைக்கு...

நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நல்ல நண்பர்களை உருவாக்கி உள்ளீர்களா? அல்லது உருவாக் கவே இல்லையா? அல்லது இனிமேல்தான் உருவாக்கப் போகிறீர்களா? அல்லது உருவாக்கப்போவதே இல்லையா?இவ்வாறான வினாக்களை நீங்கள் யாராவது இதுவரையும் கேட்காமல் இருந்தால் இனிமேல் கேட்க தவறவிட்டு விடாதீர்கள். ஏனெனில் சாதாரண மனிதனாக வாழ்க்கையை தொடங்கி போர் வீரனாக புகழ்பெற்று இராணுவத்தளபதியாக உயர்ந்து ஐரோப்பாக்கண்டத்தின் பெரும் பகுதியை வென்று மாபெரும் சக்கரவர்த்தியாக வரலாற்றில் நிலையான இடத்தினை பிடித்துக்கொண்ட நெப்போலியன் "ஒரு நல்ல நண்பனை உருவாக்கிக்கொள்ளத் தவறிவிட்டேன்" என்றார்.

இவர் கூறிய சந்தர்ப்பமும் காலமும் குறிப்பிடத்தக்கது. செயின்ட் கொலினாத்வில் தனிமைக் கைதியாக கடைசிக்காலத்தை கழிக்க நேர்ந்த போது கூறியுள்ளார். படை நடத்துவதிலும், பாராளுமன்றத்திலும் தனக்கென்று தனி இடத்தை பிடித்துக்கொண்டவர். உலகில் விரல்விட்டு எண்ணத்தக்க தளபதிகளுள் ஒருவராக போற்றப்படுகின்றார். போர் வீரனாக வாழ்ந்தவர் திறமை மிக்க நிர்வாகியாகவும் திகழ்ந்தார். இவர் மேற்கொண்ட நிர்வாக சீர்திருத்த நடவடிக்கைகள் இன்றும் உன்னதமான நடவடிக்கைகளாக வரலாற்றுப் போராசிரியர்களால் மதிக்கப்படுகின்றன.

இவருடைய கடைசிக்காலத்தில் இவர் வளர்த்த படை எதுவும் உதவியாக இருக்கவில்லை. பரிசுகளும், பதவிகளும் அவர் அதிகாரத்தில் இருந்த போது கொடையாளியாக அள்ளி இறைத்தார். இவரிடம் பலன் பெற்ற எவரும் இறுதிக்காலத்தில் உதவிக்கு நிற்கவில்லை. தன்னுடைய கடந்த கால வாழ்க்கையை எண்ணிப்பார்த்த நெப்போலியன் நான் வாழ்க்கையில் செய்த மகத்தான தவறு எது என்பதை புரிந்து கொண்டார்.

விலை கொடுத்து யாரும் யாரையும் வேண்டிவிடாதீர்கள். ஏன்னென்றால் எப்போதும் விலை கொடுக்க உங்களால் முடியாது. அப்பொழுது மனிதர்களும் இல்லாமல் போய்விடுவார்கள். மற்றவர்கள் உங்களை நேசிக்க வேண்டுமானால் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய முதல் விதி நீங்கள் மற்றவர்களிடம் உண்மையான அக்கறையைகாட்ட ஆரம்பிப்பதுதான்.

நண்பர்கள் இல்லாத வாழ்க்கை மலர்கள் இல்லாத பூந்தோட்டம் போன்றது. நல்ல இனிய நண்பர்களை பெறுவதுஓர் எளிமையான கலை. இந்தக்கலையில் தேர்ச்சிபெற்ற மனிதர்களே! வாழ்க்கையில் வெற்றிபெற்ற சிறந்த மனிதர்களாக போற்றப்படுகின்றனர்.

நல்லஇனிய தோழர்கள் எமக்குத் தேவை அப்படிப்பட்ட தோழர்களை எப்படி பெறுவது என்று நினைப்பீர்கள். இது சிரமமான காரியம் அல்ல. இதற்கு என்ன வழி என்று அமெரிக்காவின் மிகப்பெரிய சிந்தனையாளர்களில் ஒருவரும் தத்துவ ஞானியுமான எமர்யன் தெளிவாக ல சொல்கிறார். "ஒரு நல்ல நண்பனை பெற வேண்டும் என விரும்பினால் நீயே நல்ல நண்பனாக இருக்கப்பழகிக்கொள்" எமர்யன்னுடைய வாசகத்தை மீண்டும் ஒரு முறை படியுங்கள். நட்பு என்பது ஒரு வழிப் பாதையல்ல, இருவழிப்பாதை. நீ எதை பிறரிடம் இருந்து எதிர்பார்க்கிறாயோ? அதை உன்னிடமிருந்து எதிர்பார்க்க ஏனையோருக்கும் உரிமை இருக்கிறது என்பதை எள்ளளவும் மறுக்க இயலாது.

உங்களை நேசிக்கின்றவர்களின் நல்லதொரு கருத்தை அறிந்துவைத்துக் கொண்டு நினைவாக எழுத்து வடிவில் வாழ்த்துச்செய்தி எழுதி அந்தக்கணத்தில் அவருக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிப் பாருங்கள். இது எப்படிப்பட்ட நல்ல எண்ணத்தை உங்களைப்பற்றி அவர்களிடையே ஏற்படுத்துகிறது என்பதை புரிந்து கொள்வீர்கள். இன்றைய உலகில் வெற்றி பெற்ற மனிதர்களாக வாழவேண்டுமானால் நம்முடைய செல்வாக்கை பெருக்கிக் கொள்வது அவசியமாகிறது. எந்த அளவுக்கு நண்பர்கள் அதிகமாக இருக்கின்றார்களோ? அந்த அளவுக்கு நம்முடைய செல்வாக்கும், வளமும் பெருகும்.

நமது வாழ்க்கையில் வெற்றியை மனித நேயங்கள் நிர்ணயிக்கின்றன. மனித நேயத்தை பெருக்குவதும், மக்களிடையே அதிகமாக செல்வாக்கை பெற்றுக் கொள்வதும் அவசியம். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் அடைய இருக்கும் இலக்கிற்கு செய்ய வேண்டிய காரியங்களில் முதலாவதாக ஏராளமான நண்பர்களை பெருக்கிக்கொள்ளவேண்டும். அடுத்து மற்றவர்களிடம் உங்களுடைய செல்வாக்கை பெருக்க வேண்டும். இவ்விரண்டும் அமைந்து விடுமானால் திறக்காத கதவும் திறக்கும். செய்ய முற்படும் காரியம். செய்ய இயலாது என்று நினைக்கும் விடயம் எல்லாம் இலகுவாக இருக்கும். அப்போது வெற்றி உங்களை நெருங்கிக்கொள்ளும் போது வாழ்க்கையை நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும் எதிர்கொள்வீர்கள்.



பானுமதி

## குறுக்கெழுத்துப் போட்டி .இல-41

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | 07 |
| 08 | | | | | | |
| 15 | 16 | | | | 20 | |
| | | | 25 | | | |
| | 30 | 31 | 32 | 33 | | |
| | | | | | 41 | 42 |
| | | | | | | |

### இடமிருந்து வலம்

01. பொறுப்பு.
08. மூவேந்தரில் ஒருவர்.
15. கீரி.
20. தொடக்கம்.
25. எல்லை தலைகீழாக உள்ளது.
30. தன்னலமற்ற கொடை
41. வாய்பேசாமை.

### மேலிருந்து கீழ்

01. பூ நூல் சடங்கு.
07. சிரார்த்தம் குழம்பி உள்ளது.
16. இரத்தம்.
31. வேள்வி.
32. கை.
33. வருவாய் தலைகீழாக உள்ளது.
41. கிராமம்.
42. நன்மைக்கு எதிரானவை, தலைகீழாக உள்ளது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.39 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அகங்காரம்.
08. தித்திப்பு.
16. பரி.
19. விறகு.
26. நஞ்சு.
34. சிலை.
43. பூ.

**மேலிருந்து கீழ்**

01. அதியமான்.
02. பகவத்கீதை.
14. குறிஞ்சி.
24. முத்திரை.
25. கறையான்.
34. மிதிலை.
41. மலை.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.41
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.39 இன் பரிசுக்குரியவர்**

**ம.எழிலரசி,**
**8ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு,**
**முல்லைத்தீவு.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.39 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

ஜீவராசா மிதுர்ஷா,
பொன்நகர்,
நட்டாங்கண்டல்.

அசாம்.அரசன்,
இல.78/A,பசார்வீதி,
வவுனியா

கருணாகரன் செல்வன்
கொக்குவில்.

தியாகராஜா கிருபாகரன்
யாஹ்ராட்லிக்கல்லூரி,
பருத்தித்துறை.

# சிறுகதைப்படைப்பாளிக்கு:

சிறுகதையாளராக இருந்தால் என்ன? எந்தப்படைப் பாளியாக இருந்தாலும் அடிப் படையில் அவன் ஒரு ரசிகத் தன்மை உள்ளவனாகவே இருக்க முடியும். நெகிழ்ச்சித் தன்மை உடைய ஒருவனே சிறந்த படைப்பாளியாக சிறக் கக்கூடும் நெகிழமுடியா இறுகி தடித்துப்போன ஒருவன் படைப்பு என்றால் கிலோ என்ன விலை என்று தான் கேட்கலாம்.

புறக் ' ண் ணின் முன்னே விரியும் காட்சிகளின் அடிப்படையில் அகக்கண்ணில் காட்சிகளை உருவாக்கி தன் படைப்பாற்றலை செழிக்க வைக்க அவனாலே தான் முடியும்.

இந்தச்சிறப்பு வெளிப் பாட்டுக்கு படைப்பாளிக்கு தோன்றாத்துணையாக இருப் பது அவனது கற்பனை ஆற்றலே. ஆனால் கற்பனை யில் அவன் வெற்றி கொள்ள முன்வரிசை அங்கத்தவராக தலை நிமிர்ந்து நிற்க ரசிகத்தன்மையே அடிப்படை யாக முடியும்.

கற்பனை ஆற்றலின் தலைவன். ரசிகத்தன்மை தான் என்பதை இங்கு மீண்டும் அறுதியிட்டு கூறவேண்டிய தேவை யில்லை. காரணம் படைப்பாளிகளில் அநேகம் பேர் உணர்ச் சிக் குவியல்களாகவே இருப்பர். அழுகையும், சிரிப்பும், வேதனை யும், சலிப்பும் அவர் களை விரைவில் பற்றிக்கொள்வதும் இதன் அடிப்படையில் தான்.

படைப்பும் படைப்பாளியும் இத் தகைய செந்நெறியில் தான் தனித்தன்மை பெறுகின்றன. கண்டதை கண்ட படியே எழுதுவதற்கு ஒரு படைப்பாளி தேவை யில்லை.ஒரு நிருபரோ ஒரு அறிக்கை யாளனோ போது மானது.

நிருபராகவோ அறி க்கையாளனாகவோ இல் லாமல் படைப்பாளியாக தனித்தன்மை பெறுவதற்கு மேலே சொல்லப்பட்ட ரசிகத் தன்மையும், கற்பனை வள முமே அவசியமானது.

இந்தக்கற்பனை ஆற் றல் என்பது மாயக் குதிரையில் ஏறி மந்திர உலகம் போவது போன்ற விடயம் அல்ல. பொய்களையும், புரட்டுக் களையும் சேர்த்து பிரட்டி எடுக்கும் பிரட்டலும் அல்ல.

படைப்பாளி தன் புற உலக அனுபவங்களையும் அதன் ரசனை அனுபவங் களையும் சேர்த்து தன் அகத் தின் உள்ளுணர்வுகளையும் சேர்த்தே படைப்புக்களை படைக்கின்றான். இதில் அவன் கற்பனையாற்றலை வெளிப் படையாக கண்டு கொள்ள முடியாது. (அப்படிக்கண்டு கொண்டால் அதனை நல்ல படைப்பாகக்கருதிக்கொள்ள முடியாது) ஆனால் அவனது கற்பனையாற்றல் உரிய விகிதத்தில் அந்தப்படைப்பில் கலந்திருக்கும், சுவையைச்



சேர்த்திருக்கும்.

மற்றப்படி 30வீத புற உலக அனுபவம், 30வீத அக உலக அனுபவம், 40வீத கற் பனை கலந்து செய்யப்பட்ட படைப்பு இது என்று கூற முடியாது.

இதன் அடிப்படையில் சில விடயங்களை நாம் மிக முக்கியமான விடயங்களாகக் கொள்ள முடியும். அமெரிக்கா வில் மழைபெய்யும் போது இங்கு குடை பிடிக்கும் இரவல் மன உணர்வுகள் படைப் பாளிக்கு உதவமாட்டாது.

படைப்பாளிக்கு தன் படைப்பின் ஊடாக வெளிப் படுத்தப்படும் வாழ்க்கை அனுபவம் சொந்த அனுபவ மாக அமைய வேண்டும். (இரவல் அனுபவத்தை படைப் பாக்க முடியாதா என இங்கு கேள்வி எழுப்பப்படலாம். அவ்வாறு படைப்பாக்குவது தேர்ந்த படைப்பாளியின் வெற்றிகரமான செயற்பாடாக அமையும்தான்)

அவ்வாறான வாழ்க்கை அனுபவத்தின் நன்மை தீமைகளை, நுட்பங்களை தெளிவாகவும், கீலம் கீல மாக புரிந்து கொள்ளவும் அவனுக்கு அந்த அனுபவங்களை நுணுகிப்பார்க்கும் திறமையும், செயற்பாடும் இருத்தல் வேண்டும்.

நுணுகிப்பார்க்கும் திறமையுள்ள ஒருவனே படைப் பில் வெற்றி பெற முடியும். ஏனெனில் சமூகத்தில் பல்வேறு மட்ட அனுபவங்களையும் (அதாவது தனது சூழலில்) படைப்பாளி தனியே அனுப விக்க முடியாது. ஏனையவர் களின் அனுபவங்களை வெளிப்பாடுகளை நுணுகிப் பார்ப்பதன் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறு பெற்றுக் கொள்வதன் ஊடாகவே அவற் றினை உச்சமாக, உன்னதமாக சித்தரிக்க முடியும்.

படைப்பாளியின் அனுபவங்கள் சூழலோடு அவன் இயைந்து போகும் தன்மை அல்லது முரண் பட்டுக்கொள்ளும் தன்மை, யாருடைய நிலையில் இருந்து அவன் வெளி உலகத்தை நோக்குகின்றான், படைப்பாக்கு கின்றான் என்பதெல்லாம் முக்கியமானவை.

சமகாலத்தில் - சம காலப்பிரச்சினைகளைத் தொட்டுக்கொள்ளாமல் பட்டும் படாமல் மதில் மேல் பூனை களாக படைப்பாளிகள் இருக்க முடியாது. பிரச்சினைகளோடு தொடர்புபட்டவனாக, தூங்கும் பங்குதாரராக,போலிப்பங்கு தாரராக இல்லாமல் இயங்கும் பங்குதாரராக இருக்க வேண் டும். அதுவே படைப்பின் உயர்வுக்கு வழி கோலும்.

படைப்பை உயிர் உள்ள தாக்கும்.

ஆகமொத்தத்தில் ஒரு படைப்பாளிக்கு தேவை யான அடிப்படை யான சில விடயங்களை

## இலக்கியப்பகிர்வு

சிதம்பரன்

தெரிந்து கொண்டோம்.

இந்த அடிப்படை களின் சார்பில் எழுதப்படுகின்ற எல்லாம் படைப்புகளாகி விடுமா? அதுவும் வெற்றிகர மான படைப்பாகிவிடுமா? என்பதும் அர்த்தமுள்ள ஒரு கேள்வியே.

எனவே இங்கே இன்னு மொரு முக்கிய விடயத்தையும் இங்கு கவனிக்கவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளா கின்றோம்.

படைப்பில் என்ன எழுதப்படுகின்றது. அதுவும் எத்தகைய முறையில் எழுதப் படுகின்றது என்பதுவே அது.

என்ன எழுதப்படு கின்றது என்பது கதையின் கருவாகவும் எப்படி எழுதப் படுகின்றது என்பது அந்தக்கரு எப்படியாக உயிர் கொள் கின்றது என்பதையும் வெளிப் படுத்துகின்றது.

உண்மையில் என்ன எழுதப்படுகின்றது என்பது எப்படி எழுதப்படுகின்றது என்ப தால் தான் முதன்மை பெறு கின்றது. எழுதப்படுகின்ற முறைமை யாகத்தான் படைப்பு சுவைக்கப்படக் கூடிய படைப் பாகின்றது.

---

ஏரிக்கரைப்பத்திரிகை நிறுவனத்தின் 'சரசவிய' சினிமாப் பத்திரிகையினால் வருடாவருடம் 'சரசவிய விருது விழா' ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொருவருடமும் சிங்களத்திரையு லகில் திரையிடப்படும் சிங்களத்திரைப்படங்களுக்கும் அதனோடு சம்பந் தப்பட்ட கலைஞர்களுக்கும் விருதும் பணப்பரிசிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

சரசவிய பத்திரிகை நிறுவனத்தினால் நடத்தப்பட்ட 28ஆவது சினிமா விருது விழா 2002, 05.09.2003 அன்று கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச ம ாநாட்டு மண்டபத் தில் இடம் பெற்றது.



சென்ற ஆண்டு (2002) திரை யிடப்பட்ட 26 சிங்களப் படங்களில் இருந்து சிறந்த திரைப் படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நெறியாள்கை என 26 துறைகளில் சிறந் தவைகளைத் தெரிவு செய்து விருதுகளும், பணப்பரி சில்களும் வழங்கப்பட்டன.

சென்ற ஆண்டின் சிறந்த நடிகைக்கான தேர்வு முடிவுகளை அறி வதற்காக மண்டபத்தில் நிரம்பி வழிந்த அனை வருமே ஆவலோடு காத் திருந்தனர். காரணம் இறுதித்தேர்வில் மூவர் தெரிவு செய்யப்பட்டிருந் தார்கள். 'அது செவளை' திரைப்படத்தில் நடித்த

## 'சரசவிய' விருதுவிழாவில் தமிழ்ச்சிறுமிக்குக்கிடைத்த கௌரவம்!

வசந்தி சத்துராணி 'சளெலுவரம' திரைப்படத்தில் நடித்த சங்கீதா வீரரத்தின, 'புஞ்சி சுறங்கனாவி' திரைப்படத்தில் நடித்த தமிழ்ச்சிறுமி நித்யவாணி கந்தசாமி ஆகிய மூவருமே அவர்கள்.


அறிவிப்பாளர்களின் குரல் ஒலிக்கிறது.

விதந்துரைக்கப்பட்டுள்ள மூவரில் இம்முறை சிறந்த நடிகையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்..... பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எள்ளிருக்கும் இடமின்றி மக்கள் நிரம்பியிருந்தும் அந்த சந்தர்ப்பத்தில் மூச்சினை வெளிவிடுகின்ற சப்தம் கூட இன்றி நிசப்தமாக இருந்த வேளையில்....

'புஞ்சிசுரங்கனாவி' திரைப் படத்தில் 'சத்யா' பாத்திரமேற்று நடித்த நித்யவாணி கந்தசாமி சிறந்த நடிகையாக தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளார் என அறிவிக்கப்பட்ட போது நித்யாவின் அந்தப்பெயர் சாலை பூராவும் எதிரொலித்த போது அந்தச்சின்னஞ்சிறுமி தாயார் சாந்தியின் கரங்களை இறுகப்பற்றிக்கொண்டாளாம். மண்டபம் பூராவும் நிரம்பி வழிந்திருந்த ரசிகர்களின் பலத்த கரவொலிகளின் மத்தியில் மேடையை நோக்கி அம்பினைப்போல் விரைந்து சென்றாள் நித்யா.

விழாவின் சிறப்பு அதிதியாக வருகை தந்திருந்த ஆசியாவின் தலைசிறந்த சினிமா நெறியாளரான மணிரத்னம் அவர்களிடம் நித்யா சிறந்த நடிகைக்கான விருதினைப் பெற்ற போது மீண்டுமொரு முறை கரவொலியால் மண்டபம் அதிர்ந்தது.

நித்யவாணி சினிமா நெறியாளர்களான சோமரத்தின திசா நாயக்கா மற்றும் ரேணுகா பாலசூரிய ஆகியோரினால் கண்டெடுக் கப்பட்ட அரிய மாணிக்கமாகும். 'சரோஜா' திரைப்படம் நித்யாவின் முதலாவது பங்கேற்பாகும். இரண்டாவது திரைப்படம் 'புஞ்சி சுரங்கனாவி'



நெறியாளரான மணிரத்னம் அவர்களிடமிருந்து விருதினைப் பெறும் நித்யவாணி கந்தசாமி.

சரோஜா படத்தில் நடித்தமைக்காக அவளது நடிப் பாற்றலுக்காக வெளிநாட்டில் விருது கிடைத்தது. அது மாத்திரமன்றி 'சரோஜா' வில் நடித்தமைக்காக சனாதிபதி விருதினையும் அவள் தனதாக்கிக்கொண்டுள்ளாள். ஈரானில் 17ஆவது சினிமா விருது வழங்கும் விழாவில் 'GOLDEN BUTTER FLY' விருதினை 'புஞ்சி சுரங்கனாவி' யில் நடித்தமைக்காக பெற்றுக்கொண்டாள்.

சிறந்த நடிகைக்கான போட்டியொன்றில் சிறுமியொருத்தி சிறந்த நடிகையாகத்தேர்வு செய்யப்பட்டது இதுவே முதல் தடவை யாகும்.

வல்வையூரான்

# தற்கொலைகள்

இங்கிலாந்தைச் சேர்ந்த ஆயுதப்பரிசோதனை விற்பன்னர். டாக்டர் டேவிட் கெல்லி என்பவரின் திடீர் மரணம் தற்கொலையா அல்லது பிறரால் தூண்டப்பட்ட தற்கொலையா அல்லது அரசியல் கலந்த கொலையா என்பது அண்மையில் இங்கிலாந்தில் மட்டுல்ல உலகத்திலேயே பலரின் மனதில் தோன்றிய கேள்வியாகும். இதே போன்று சதாமின் மகன் உதெய் அமெரிக்கப் படையினரால் கொல்லப் பட்டாரா அல்லது தான் அவர்களிடம் உயிருடன் கைதாகி சித்திரவதைக்கு உட்பட முன் தற்கொலை செய்து கொண்டாரா என்ற சந்தேகமும் எழும்பியுள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் சர்வாதிகாரி ஹிட்லர் தான் உயிருடன் எதிரிகளிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக மனைவியுடன்(காதலியுடன்) தற்கொலை செய்து கொண்டான். தமிழ் நாட்டில் ஒரு பிரபல சினிமா தயாரிப்பாளரான வெங்கடேசன் கடன்காரர்கள் தொல்லை தாங்காமல் தற்கொலை செய்து கொண்டார். இப்படி தற்கொலை என்ற செயல் ஏழை, பணக்காரன், சர்வாதிகாரி, கலைஞர், அரசியல்வாதி, பொது மனிதன் என்ற பேதமின்றி எல்லோரினதும் மனதில் தோன்றக்கூடிய எண்ணமாகும். மனதில் தோன்றும் பயம், வலி, பாதுகாப்பின்மை, காரணமாக சிலரால் எடுக்கப்படும் முடிவே தற்கொலை. "நான் ஏன் வாழவேண்டும் எதைச் சாதிக்கப்போகிறேன், மற்றவர்களின் ஏளனத்துக்கு இலக்காகக் கூடாது" என்ற எண்ணம் அவர்கள் மனதில் தற்கொலைக்கு வித்திடுகிறது.. தாமே தமது உயிரை போக்கிக் கொள்பவர்கள் விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்படுபவர்கள். தற்கொலை புரிய வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வருவது அவ்வளவு இலகுவானதில்லை. ''என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்ற தீர்மானமே அவர்களை அந்த நிலைக்கு எடுத்துச்செல்கிறது. தற்கொலை புரிவதற்கு பல காரணங்கள் உண்டு அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன

- கடன் தொல்லையும் பொருளாதாரக் காரணங்களும்.
- சமூகத்தில் அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை புரிதல். திருமணமாகாமல் கருத்தரித்தல். ஒழுக்கமின்மையால் உருவாகும் வருத்தம் போன்றவையுடன் இணைந்தது.
- எதிரிகளின் கைதுக்குப்பயந்து தம்முயிரை மாய்த்துக்கொள்ளல்.
- காதலில் தோல்வி. காதலன் அல்லது காதலிமேல் அளவு கடந்த காதலால் ஏற்படும் விரக்தி.
- பரீட்சையில் தோல்வியைத் தாங்கிக் கொள்ளமுடியாத நிலை. இது வீட்டில் பெற்றோரினதும். இனத்தவரினதும் வசையில் இருந்து தப்புவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் முடிவு. வீட்டின் பொருளாதார நிலையும் இதற்கு ஒரு காரணமாகலாம்.
- பகிடிவதையினால் ஏற்பட்ட மனத் தாக்கம். இது பொதுவாக பல்கலைக் கழகங்களில் -
- மனோவியாதி அல்லது வருத்தம் காரணமாக தம்முயிரை மாய்த்துக் கொள்ளல்.
- பிறரின் பயமுறுத்தலினால் அல்லது தூண்டுதலால் தற்கொலை புரிதல்.
- காப்புறுதி பணம் பெறத்தற்கொலை செய்தல்
- மரபு வழி வந்த சமூக வழக்கத்தினால். உடன்கட்டை ஏறுதல். மதவழிபாட்டு முறை ஆகியவற்றினால் தற்கொலை புரிதல்
- கற்புக்கு காமுகனால் பங்கம் வராதவாறு தம்முயிரை மாய்த்துக் கொள்ளல்.
- ஒருவர் மேல் அளவு கடந்த பாசம் வைத்து அவர் பிரிந்த பின்னர் அவருடன் தனது ஆத்மா மறுபிறவியில் ஒன்றுசேரும் என்ற நம்பிக்கையில் தற்கொலைபுரிதல்.


கிட்லர்

## மற்றைய ஜீவராசிகளும் தற்கொலையும்.

மனிதன் மட்டும் தற்கொலை புரிவதில்லை. இயற்கையில் பறவைகளும், மிருகங்களும், புழுபூச்சிகளும் தற்கொலை செய்துகொள்கின்றன. நிலப்புழுவானது மழை பெய்ததும் நிலத்துக்கடியில் இருந்து வெளியே வந்து ஊர்ந்து பாதையை அடைகிறது. பின்னர் வெய்யிலாலும் போக்குவரத்து வாகனங்களாலும் அவற்றின் உயிர்கள் நசிக்கப் படுகின்றன. பாம்புகள் தனது துணையை இழந்தவுடன் தற்கொலை செய்து கொள்வதாக கதைகளில் வாசித்தறிந்துள்ளோம். ஒக்டொபஸ் எனப்படும் எண்காலிஜந்துதற் கொலையில் ஈடுபடுகிறதா என்பதை விலங்கியலாளர் ஆராச்சி செய்துள்ளார்கள். முட்டையிட்டவுடன் தாயானது சாப்பிடாது தன்னுயிரை மாய்த்துக்கொள்கின்றது. திமிங்கலங்கள் கூட சிலசமயம் தற்கொலை காரணமாக கடலோரங்களில் ஒதுங்குவதை அறிந்துள்ளோம். சுவிற்சர்லாந்தில் வாழும் லெமிங்ஸ் என்னும் எலி போன்ற மிருகம் தங்கள் தொகை அளவுக் கதிகம் பெருகும்போது வெள்ளத்துள் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்கிறது.

## தற்கொலை முறைகள்

தற்கொலை செய்வதற்கு நாள் நேரம் இடம் குறித்து செயல்படுவது கிடையாது. மிக முக்கியமாக மற்றவர்கள் இல்லாத இடத்தையும் நேரத்தையும் தேர்ந்தெடுப்பார்கள். உதாரணத்திற்கு குடிகாரக் கணவன் மேல் உள்ள வெறுப்பு காரணமாக மூன்று பிள்ளைகளுக்கு தாயான ஒருபெண் பகல் இரண்டு மணியளவில் சனப் போக்குவரத்து குறைந்த நேரம் பார்த்து கடற்கரை ஓரம் உள்ள ரயில் பாதை அருகே கடல் காற்றை சுவாசிப்பதுபோல நின்று ரயில் வரும் சமயம் அதன்முன் குதித்து தன் உயிரை மாய்த்துக் கொண்டாள். இத்தகைய முறையில் தற்கொலை செய்வதற்கு மனத்தைரியம் வேண்டும். வீட்டில் அதை செய்யக்கூடிய சூழ்நிலை இல்லாத படியால் ரயில் முன் தற்கொலை புரிவதை தேர்ந்தெடுத்திருக்கிறாள் அப்பெண். அந்த முறையைப்பாவித்து தற்கொலை செய்ய முனைவதினால் சாவு நிச்சயம் என்பதல்ல. சிலசமயம் ரயிலினால் தூக்கி எறியப் பட்டு உயிர் பிழைத்து முடமாகும் துர்ப்பாக்கிய நிலையையும் அடையலாம். தற்கொலை செய்வதற்கு பல முறைகளை நாடுகிறார்கள் :

- அளவுக்கு அதிகமான தூக்கமாத்திரை எடுத்தல்.
- பொட்டாசியம் சயனைட், பொலிடோல் போன்ற நஞ்சு அருந்துவது.
- கட்டடத்தின் உச்சியில் இருந்து குதித்து உயிரை மாய்ப்பது. இது உத்திரவாதமான முறையல்ல. சில சமயம் உயிர் தப்பி முடமாகலாம்
- ரயில் முன்குதித்து மரணத்தை தழுவுவது.
- கழுத்தில் கயிற்றினால் அல்லது சேலையினால் சுருக்கு போட்டு இறப்பது.
- உடலில் பெற்றோல் அல்லது மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு பற்றவைத்து எரிவது. இது தமிழ் நாட்டில் அரசியல் கட்சிக்காக தமது உயிரை போக்கி மக்களின் அனுதாபத்தை பெறும் வழிகளில் ஒன்று.
- கிணறு,ஆறு, குளம் அல்லது கட லில் குதித்து உயிரை மாய்த்தல்.
- துப்பாக்கியைப் பாவித்து சுட்டு தற்கொலை புரிதல்.
- கைகளில் உள்ள நரம்பு களை வெட்டி குருதி பெருக்கத்தால் உயிரை போக்குதல்.


மார்லின் மொன்றோ

தற்கொலை செய்யமுன்னர் அநேகர் தாம் தற்கொலை செய்யும் காரணத்தை விளக்கி ஒரு கடிதம் எழுதி வைத்து இறப்பார்கள். மற்றவர்களுக்குத் தனது மரணத்தால் பிரச்சினைகள்வராமல் இருப்பதற்காகவே இந்த வழியைக்கையாளுவார்கள்.

## சரித்திரத்தில் தற்கொலைகள்

சரித்திர வரலாற்றில் தற்கொலை என்று வரும்போது நமது நினைவில் நிற்பது ஹிட்லரும், ஜப்பானின் இரண்டாம் உலக யுத்த கால பிரதமர் டோஜோவும், கி.பி முதலாம் நூற்றாண்டில் ஆண்ட கிரேக்க மன்னன் நீரோவும், கி.மு 69ம் ஆண்டு முதல் 30ம் ஆண்டு வரை எகிப்து நாட்டின் இராணியாக இருந்து பேரழகி எனப் பெயர் எடுத்த கிளி யோபத்திராவும், முஸ்லீம் மன்னன் அலாவுதீனிடமிருந்து தங்கள் கற்பை காப்பாற்றிக் கொள்ள தனது தோழிகளுடன் அரண்மனையில் தீயை மூட்டி தற்கொலை புரிந்து கொண்ட ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த சித்தூர் ராணி பத்மினிதான் எமது நினைவுக்கு வருகிறது. இது போன்று பல மன்னர்கள் போரில் தோல்வியடைந்து தற்கொலை செய்து கொண்டதாக வரலாறு கூறுகிறது. எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், வர்த்தகர்கள், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்து தமது ஒழுக்கமின்மை காரணமாக அவமானப்பட்டவர்கள் தற்கொலையை நாடினார்கள். இதில் நீரோ மன்னனும் ஒருவன்.


## சினிமா உலகமும் தற்கொலையும்

நடிகர்கள், தயாரிப்பாளர்கள், மற்றும் சினிமாவுடன் தொடர்புள்ளவர்கள் தற்கொலைசெய்து கொள்வதை நாம் ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம். ஹாலிவுட் முதற்கொண்டு; தமிழ் சினிமா உலகம்வரை தற்கொலை வியாதி இருந்துவருகிறது. பிரபல நடிகை மர்லின் மொன்றோ தூக்க மாத்திரை உண்டு தற்கொலை புரிந்ததற்கு பல அரசியல்வாதிகளுடன் உள்ள தொடர்பே காரணம் எனச் சொல்லப்பட்டது. தமிழ் சினிமாவில் சில்க்சுமிதா, படா பட் ஜெயலக்சுமி , ஷோபா, விஜி, கல்பனா, பிரதூஷா, மோனல் போன்ற சினிமா நடிகைகள் தற்கொலை செய்து கொண்டார்கள். மிக பிரபல தயாரிப்பாளர் ஜி. வெங்கடேசன், கடன் தொல்லை காரணமாக தற்கொலை செய்துகொண்டார். ஒருகாலத்தில் கொடிகட்டிப் பறந்த பிரபல பாடகர் டி.எம் சௌந்தரராஜன் கூட ஸ்பிரிட் அருந்தி தன் உயிரைப் போக்கிக்கொள்ள முயன்றுள்ளார். தனக்கு முன்பு இருந்த மதிப்பு, மரியாதை, புகழ் எல்லாம் மங்கி, தன்னை பாடுவதற்கு ஒருவரும் அழைப்பதில்லையே என்பது ஒரு முக்கியகாரணமாக இருந்திருக்கலாம். இது அவரின் மனநிலையைப் பொறுத்தது.

21வயதுடைய மோனல் பிரபல நடிகை சிம்ரானின் சகோதரி. திரையுலகுக்கு அறிமுகமாகி மூன்று படங்களில் நடித்தபின்னர் தற்கொலை செய்து கொண்டார். அதற்கு காதலே காரணம் எனபலரால் பேசப்பட்டது. அவர்தானே தன்உயிரை மாய்த்து கொள்வதற்கு மனநிலை பெரிதும் பாதிக்கப்பட்டதே காரணமாகலாம். காதல் கை கூடாதது பெரிதளவுக்கு மனநிலையை பாதித்திருக்குமென நம்பக்கூடியதாயில்லை.

பல நடிகைகளின் பெற்றோர்கள் . இனத்தவர்கள், கூடப்பிறந்தவர்கள், அவர்களை சினிமாவுலகுக்கு அறிமுகம்செய்தவர்கள், நடிகைகள் உழைக்கும் வருமானத்தில் தங்கி வாழ்பவர்கள். அதுவுமன்றி அவர்களது வாழ்க்கை, திருமணம், தீர்மானங்கள் போன்றவற்றில் முக்கியமாக ஆதிக்கம் செலுத்துபவர்கள். இதுவே சில்க் சுமிதாவின் மரணத்துக்கு காரணம் என்று ஊடகங்கள் விளக்கம் கொடுத்தன. நடிகைகள் திருமணமாகி சிலகாலம் கணவனுடன் வாழ்ந்தபின் விவாகரத்து செய்வது ஹாலிவுட் உலகுக்கு மட்டுமல்ல, தமிழ் சினிமாவுலகுக்கும் பொதுவானதொன்று. இதுவே அவர்கள் மனநிலை எவ்வளவுக்கு. சிந்தித்து செயலாற்றும் திறமையை இழந்து விடுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. ரோஜா, மும்தாஜ், சிறீப்ரியா போன்ற நடிகைகள் கூட தம்உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார்கள். அதற்கு பலகாரணங்கள் சொல்லப்பட்டது.

குவியத்திலிருந்து விஸ்வா


நடிகை மோனல்

துணிவுக்கு அடிக்கடி எழும் சோதனை சாகாமல் இருந்து வாழ்ந்து காட்டுவதேயாகும். -அல்பியாறி

# லெப். கேணல் நிரோஜன் நினைவு மண்டபத்திறப்பு குறித்த உணர்வலைகள்

உலகில்உள்ள கடற்படைகளில் வித்தியாசமானவர்கள் என எல்லோரும் ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள் கடற்புலிகள். ஒரு நாடாக எமது தேசம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னரே கடற்புலிகளின் ஆற்றல் உலகுக்கு புரியவைக்கப் பட்டுள்ளது. இன்று உலகில் தற்கொடையாளர்களைக்கொண்ட ஒரே கடற்படையும் இதுவே. வரலாற்றுப் பெருமை மிக்க தரையிறக்கம் உட்பட எல்லாமே வித்தியாசமான நடவடிக்கைகளே.

அதுபோலவே தமிழீழப்பரப்பினுள்ளும் இவர்களது நடவடிக்கைகள் புதுமையாகவும், வித்தியாசமானதாகவும அமைந்திருந்ததை கடந்த 07.10.2003 (செவ்வாய்) நடைபெற்ற லெப்.கேணல் நிரோஜன் நினைவு மண்டபத்திறப்பு விழாவில் உணரமுடிந்தது. பொதுவாக நடைபெறும் மாவீரர் நினைவு நிகழ்விலிருந்து இது முற்றிலும் வேறுபட்டிருந்தது.

நான்கு வருடங்களுக்கு முன்னர் மன்னார் கடற்பரப்பில் டோராப் படகுகளுடனான சமரில் வீரச்சாவெய்திய லெப்.கேணல் நிரோஜன் மற்றும் அவருடன் வீரச்சாவெய்திய 15 போராளிகளுக்கும் ஒவ்வொருவராக ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை செலுத்தும்போது அவர்களின் ஆற்றல்களையும், தனித்துவங்களையும் சிறுகவிதை வடிவில் ஒரு ஆண்போராளியும் ஒரு பெண் போராளியும் எடுத்துரைத்துக்கொண்டிருந்தனர். மிகவும் உணர்வுபூர்வமான கவிதை வரிகள் அவை.

மேலும், நினைவு மண்டபத்தை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை நாடாவை வெட்டித்திறக்க சமகாலத்தில் திரை அகன்று நடன நிகழ்வு ஆரம்பமானது. நடனம் நடைபெறும் போதே ஏனையோர் மண்டபத்தினுள் பிரவேசித்தனர். பொதுவாக இவ்வாறு நிகழ்வுகள் நடைபெறுவது அரிது. ஏன் இதுதான் முதல் தடவை என்றும் கூறலாம்.

சிறப்பாகக் கூறுவதானால் தளபதி நிரோஜனின் புகழை எடுத்தியம்பும் கரகத்தை பற்றிக்குறிப்பிட்டேயாக வேண்டும். காத்தவராயன் கூத்து மெட்டு, மாரியம்மன் பாடல்மெட்டு போன்ற பல்வேறு மெட்டுகளில் கவிவடிவில் நிரோஜனின் ஆற்றல் உணர்வு பூர்வமாக

## பழைமையான கலைகளினூடாக






## புதுமையாக சேதிசொல்லும் கடற்புலிகள்!

உரைக்கப்பட்ட அதேவேளை அந்தக் கடற்கரை மணலில் கால்கள் புதைய கரகம் ஆடிய அழகு அற்புதமானது. கவி வடிவத்துடன் தவில், உடுக்கு, தாளம் போன்றவை இணைந்து பழைமையோடிணைந்த புதுக் கோலத்தை தரிசிக்க முடிந்தது.

"அன்றொருநாள் திருமலையில்
தாயே தாயே
வாசல் அழித்த டோராவில்
தாயே தாயே
நின்று இருவ தெம்மெம்
தாயே தாயே
பறல் நிலை குலையா கழற்றி
வந்தான் தாயே தாயே
கரும்புலி துணையில்லாது
தாயே தாயே
டோரா தடுத்து செயல் இழக்க
வைத்து தாயே தாயே
பெருங்கைதி போலதனை
தாயே தாயே
அன்று பிணைத்து கரை இழுத்து
வந்தான் தாயே தாயே
குறைந்த தொகை படகுடனே தாயே
தாயே
தொகை கூடி நிற்கும் எதிரிதனை
தாயே தாயே
விரைந்து சென்று முட்டுவதில்
தாயே தாயே
பெரும் வித்தகனே எம் நிரோஜன்
தாயே தாயே"

என்பது போன்ற வரிகள் நிரோஜனின் ஆற்றலை அழகாக எடுத்தியம்பின. அதுபோலவே

"...... உந்தன் படகுதனில் -
வேங்கையனே அன்று
சேர்ந்து வந்த கருணா அம்மானை
தீது செயலன்று புரிய வந்த -
டோராவினை நீயும்
துணிந்தெதிர்த்து
கரையடைந்தாய்
புளுகுணாவை போர்க்களத்தில் -
வேங்கையனே புலி
புகுந்தெடுத்த அந்த ஆட்டிதனை
படகிலேற்றி முல்லை வரும் வழியில்
- வேங்கையனே வண்டி பற்றிய
தீயினை அழித்துக்காத்தாய்"

என்ற வரிகள் நிரோஜனின் பொறுப்புணர்வினை எடுத்துக் காட்டுவதாக அமைந்தன. அதேவேளை அவனது இன்னொரு பக்கத்தை காட்டும்வகையில் சிலவரிகள் அமைந்துள்ளன."போராளிகளின் மனது மென்மையானது. ஏனெனில் தனது இனத்துக்கு நிகழும் கொடுமைகளைக்கண்டு மனம் பொறுக்காதவனே போராளியாகிறான். அதைக்கண்டும் தாங்கிக்கொள்ளும் வல்லமை படைத்தவர்களே போராட்டத்துக்கு வெளியில் இருக்கிறார்கள" என்ற லெப். சீலனின் (சாள்ஸ்அன்ரனி) வார்த்தைகளை மெய்ப்பிக்கும் வகையில் நிரோஜனைப்பற்றிய இவ்வரிகள் அமைந்திருந்தன.

"எந்தப்பெரும் வீரனாக -
வேங்கையனே நீயும்
இருந்த போதும் துவண்டெழுவாய்
சொந்த முந்தன் படையணியின் -
வேங்கையனே நீயும்
தோழர் களம் மாழும் போ்து"

இதேசமயம் கடற்புலிகளின் வாழ்வின் நகைச்சுவைப்பகுதிகளும் வெளிவந்தன.

"அடித்த பிறின்சஸ் கப்பல்
தாயே தாயே
தன்னில் குடித்த ஸ்பெசல்
சோடாவால் தாயே தாயே
குத்தித் தலையோடு டெக்கில்
தாயே தாயே
நிரோஜன் மெத்தக்களை போல்
கிடக்க தாயே தாயே
அறிந்த பெரும்தளபதியும்
தாயே தாயே
சிரித்து தூக்கி கடல்போடச்சொல்லி
தாயே தாயே
தப்பிக்கரை சேர்ந்தால் புலி
தாயே தாயே
இல்லை செத்தாலோ
மாவீரனென்றார் தாயே தாயே"

மேற்படி வரிகள் கடலோரக் காற்று படத்தில் வரும் கடற்புலிப் போராளிகளின் வாழ்வின் நகைச்சுவைப் பகுதிகளை ஞாபகமூட்டின.

இதேவேளை தங்களது துயரை காத்தவராயன் மெட்டில் பின் வரும் வரிகளால் எமக்குணர்த்தினர் இக்கலைஞர்கள்.

"ஆண்டு நாலு ஆகியதோ-
ஆகியதோ எங்கள்
அரும்பெரும் தளபதி மறைந்து
சென்று
மீண்டும் எமைச்சேர்ந்திடாயோ-
மாவேங்கையனே உந்தன் முகம்
பார்த்து நாம் மகிழ"


மொத்தத்தில் எத்தனை இன்ர நெற்யுகம் தோன்றினாலும் மனதைத் தொடுவதில் எமது பாரம்பரிய கலைகளுக்கு நிகர் எதுவுமில்லை. அவை என்றுமே மார்க்கண்டேயக் கலைகளே என்ற செய்தியை இந்நிகழ்வு ஓங்கி உரைத்தது.

— சங்கர்



### கண்ணை மறைக்கும்...

நவநாகரீக ஆடை அலங்காரம் இவளின் கண்ணையே மறைத்துவிட்டதென்றால் பாருங்களேன். இத்தாலிய ஆடை வடிவமைப்பாளர் அன்ரனியோ மார்ஸ் அவர்களின் புதிய அலங்கார முறை ஒன்றை காட்சிப்படுத்தும் மங்கை இவள்.




### பயிற்சியா?

மனிதன் தன்னுடன் சேர்த்து நாயையும்கூட பழுதாக்குகிறான். இல்லை பழக்குகிறான். குற்றவாளிகளை இனங்காண்பதற்கும் போதைவஸ்துக்களைக் கண்டுபிடிப்பதற்கும் தங்களுடன் கூட்டிச் செல்லும் நாய்களுக்கு பயிற்சி வழங்கும் பொழுது உக்ரேனிய பொலிஸ் வீரர் நாயுடன் தடைதாண்டுவதை படத்தில் காணலாம்.

### இப்படித்தான்

காட்சியளிக்கும் இரண்டு புகைப்படங்களும் சுட்டிநிற்பது ஒன்றைத்தான். உயிருடன் இருக்கும்பொழுது, அதிகாரத்தில் இருக்கும்பொழுது இடதுபுறம் இருப்பது போலும் அவற்றை இழக்கும் கட்டத்தில் வலதுபுறம் போலவும் மாறுவோம் என்கிறது முன்னால் பிலிப்பைன்சின் சர்வதிகாரி பேர்டினற் மார்க்கோஸ் அவர்களுடைய பிரமாண்டமான உருவச்சிலை.





### பக்தி

பக்தி முத்திப்போனதால் வந்த விபரீதமோ?! பார்க்கவே சகிக்க முடியாதமாதிரியாக நாக்கைப்பிளந்து கத்தியைப் பாய்ச்சியிருக்கும் இந்த பக்தன் வேண்டி நிற்பது புலாலுண்ணாமையையே. தாய்லாந்தில் இடம்பெற்ற வருடாந்த ஊர்வலநிகழ்வொன்றில் காட்சிதரும் சீனர் ஒருவரே இவர்.



### மரியாதை

வெகு விமரிசையாக காவிச்செல்லப்பட்டுக்கொண்டிருப்பவர் பதினேழுஅடி நீளமான மலைப்பாம்பு ஒன்றே. சூழல் பாதுகாப்பு பற்றி கவனமெடுக்கும் சிலரினால் இப்படியான அரிதான இனங்கள் பாதுகாக்கப்பட பலர் இவற்றை இலகுவாக வேட்டையாடிச் செல்கின்றனர்.

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

எமது மண்ணில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட சிறிலங்காவின் இராணுவ வெறியாட்டங்களின் காரணமாக எமது பெருஞ்செல்வமான இயற்கைவளங்கள் காவுகொள்ளப்பட்டன.

இதன் எதிர்விளைவுகளை நாம் தற்போது ஓரளவுக்குத் தான் உணரமுடிந்தாலும் முழுமையான பாதிப்புக்களை எதிர்காலத்தில்தான் கண்டு கொள்ளமுடியும்.

காட்டு மரங்கள், பழமரக்கன்றுகள், பனை, தென்னை வளங்கள் என பன்முகப்பிரயோசனம் கொண்ட ஏராளமான வளங்கள் அழிக்கப் பட்டுள்ளன.

இவற்றின் அழிவுகள் தனியே எமது சுற்றுப்புறச்சூழலை மாத்திரம் பாதிப்பனவாக அமையாது. எமது தனித்துவமான பொருண்மிய செயற்பாடு களையும் பாதித்துள்ளன.

ஒரேநேரத்தில் சூழல்பாதிப்புகளையும், பொருண் மிய தீமைகளையும் நாம் எதிர்கொள்ளமுடியாது. முடிந்தாலும் நீண்டகாலத்திற்கு சமாளிக்கமுடியாது.

ஆகவேதான் எங்களுக்கு ஏற்பட்ட இழப் புகளை சீர்செய்ய நாங்கள் திட்டமிட்ட முறையில் செயற்படவேண்டியது அவசியமாகிறது.

தென்னை மீள் நடுகை, பனம் விதை நாட்டல், இன்னும் பயன்தருமரங்கள் நடுகை என அந்தச் செயற்பாடுகள் விரிவும், விரைவும் கொள்ளவேண்டும்.

இந்த விரைவு என்பது மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு பனை தொடர்பாக எமக்கு ஏற்பட்ட இழப்புக்களை பட்டியல் இட்டு பார்ப்பதன் ஊடாகப்புரிந்து கொள்ளமுடியும். முழுமையான பட்டியலை இங்கு தரமுடியாவிடினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்ட இழப்பினைக்கொண்டு அதனை மதிப்பிடமுடியும்.

| | பனைகளின் எண்ணிக்கை | அழிக்கப்பட்ட பனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 3500000 | 2500000 |

## கால்நடை நடமாடும் சேவையும் – அதன் பயன்பாடும்

சிவகமலா

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஒழுங்குசெய்துநடாத்தப்பட்ட கால்நடைகளுக்கான நடமாடும் வைத்தியசேவை முல்லை மாவட்டத்தில் நடைபெற்றது. முல்லைமாவட்டச்செயலகமும் மாவட்டக்கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களமும் இணைந்துசெய்த இச்சேவையைச் விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாங்குளம், துணுக்காய், பாண்டியன்குளம் ஆகியபிரதேசங் கள் பயன் அடைந்தன.

புதுக்குடியிருப்புப்பகுதி யில் தொண்டை அடைப்பான், தடுப்பூசி 1890, மாடுகளுக்கும், கோழிக்கொள்ளை நோய்த்தடை மருந்து 200 கோழிகளுக்கும் வழங் கப்பட்டன. அத்தோடு 4 மாடுகளுக்கு நலமடித்தல், 3 மாடுகளுக்கும், 8 கோழிகளுக் கும், 2 ஆடு களுக்கும் இதர நோய்ச்சிகிச்சை அளிக்கப்பட்டன. 15 மாடுகளுக்கு கர்ப்பப்பரிசோ தனையும் செய்யப்பட்டன.

மேலும் பாண்டியன்குளம் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான தடுப்பூசி போடுதலில் , 2204 மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன். 10 நாய்



களுக்கும், கோழிகளுக்குமான தடுப் பூசி என்பனவும் போடப்பட்டன. இதை விட 3 நாய்களுக்கு நலமடித்தல் மாடுகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல், குட்டை நாய்களுக் கான ஊசிபோடுதல் போன்ற நடவடிக் கைகளை மேற்கொண்டது.

ஒட்டுசுட்டான் பிரதேசத் தில் 3250கால் நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன் 4500 மாடுகளுக்கும் 30 ஆடுகளுக்கும் செயற்கை முறைச் சினைப்படுத்தல் செய்யப்பட்டன.

விசுவமடுப்பிரதேசத்தில் 2130 மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் தடுப்பூசி ஏற்றப் பட்டதுடன், தடிமனால் பாதிக் கப்பட்ட 7 மாடுகளுக்கும் 4 ஆடு களுக்கும் நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டன. 600 கோழிகளுக்கு கோழிக்கொள்ளை தடைமருந்து வழங் கப்பட்டன. 12 மாடு, 14 ஆடு, 6 கோழிகளுக்கும் இதர சிகிச்சை வழங்கப்பட்டன. கால்நடை களுக்கான தொண்டை அடைப்பான் நோய் சம்பந்தமான பயிற்சி வகுப்பும் இடம்பெற்றது.

முத்தையன்கட்டுப்பிரதே சத்திலும் கால்நடைப்பண்ணை களிற்கு பயிற்சி வகுப்புக்கள் இடம் பெற்றன.

மாங்குளம் பிரதேசத்தில் 380 கால்நடைகளிற்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன், மேலும் 8 மாடுகளுக்கு நலமடிக்கப்பட்டன. அத்தோடு பசு ஒன்றிற்கு செயற்கை முறைச்சினைப்படுத்தல் செய்யப்பட்டன.

● ● ●

வவுனியா மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சிவகுப்பு நடைபெற்றது. அதன்போது கால்நடை நோய்களும் அதைத்தடுக்கும் வழிமுறைகளும் கூறப்பட்டன. இப்பயிற்சி வகுப்பில் 30 பேர் வரை கலந்துகொண்டனர்.

இதேபோல் பால மோட்டை பிரதேசத்திலும் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தேவிபுரம் என்ற இடத்தில் 10 பயனாளி களுக்கு தலா 10 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

பொருண்மிய வாசல்
(சி-8290)

## எழுத்தாளர்களுக்கு...

வெள்ளிநாதத்துக்கு ஆக்ககர்த்தாக்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம். கவிதை,கட்டுரை, சிறுகதை, பயண அனுபவங்கள், களப்பதிவுகள்என உங்கள் உணர்வின் வடிவங்களை எமக்கு நீங்கள் எழுதி அனுப்பி வைக்கலாம்.

அத்தோடு நூல் விமர்சனப்பகுதியில் நூல் விமர் சனம் வெளிவர விரும்புகிறவர்கள் எமக்குஇரண்டு பிரதிகளை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

உங்களுக்கான எங்கள் முகவரி: ஆசிரியர்,வெள்ளிநாதம்,
ஈழநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று – கிளிநொச்சி

வ.இல - 60/2003
தன்மை :- மணநீக்கம்.

வழக்காளி
உதயகுமார், சுபாஜினி,
இல:– 183, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

எதிர்
கந்தசாமி, உதயகுமார்,
இல:– 2/2,கணேசபுரம்,
கிளிநொச்சி.
– எதிராளி –

### பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த வழக்கின் எதிராளியாகிய உமக்கு அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க முயன்றும், நீர் தலைமறை வாகத்திரிவதின் காரணமாக, உமக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கமுடியாமல் இத்தால் விளம்பரப்ப டுத்தப்படும் பகிரங்க அறிவித்தலுக்கு ஏதாவது ஆட்சேபனை இருப்பின், இவ் அறிவித்தல் பகிரங்கப்படுத்திய நாளில் இருந்து. 14 நாட்களுக்குள் மன்றில் தோன்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில், குறித்த வழக்கு ஒரு முகவிளக்கத்திற்கு எடுத்து தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

இந்த 2003ம் ஆண்டு, புரட்டாதி மாதம, 30ம் திகதி.

வரைவு
வழக்காளி சட்டவாளர்,
தா.இ.குலசங்கர்,
டிப்போச்சந்தி,
இரத்தினபுரம் வீதி,கிளிநொச்சி.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி

(சி - 8640)

## வெள்ளிநாதம் விளம்பரக் கட்டணம்

● 1பக்கம்
▲ அரைப்பக்கம்
✦ கால் பக்கம்
➡ ஒரு கொலம் 1cm

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| ● | 12000/= | 20000/= |
| ▲ | 6000/= | 10000/= |
| ✦ | 3000/= | 5000/= |
| ➡ | 60/= | 100/= |

## பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

வந்து விட்டது "திவான்" வியாபாரக் குறியீடு கொண்ட கணக்குக் குற்றிகள். இன்றே விஜயம் செய்யுங்கள். பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங் கள், பேப்பர் வகைகள், பெயின்ற்வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருள்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப்பொருள்கள், அலுவலகஅலுமாரி, அலுவலகமேசைகள், பயில் அலுமாரி, கம்பியுட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசா யனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், **O.H.P.** புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', அந்தி வானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

குறிப்பு -

எம்மிடம் டீன் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2225542 (சி-8537)



# அனுமார் பதில்கள்

● அனுமாரே! வாசகர் அனுப்பும் கேள்விகளுக்கு யதார்த்த பூர்வமாகவும் நன்றாகவும் பதிலளிக்கின்றீகளே! யாரிடம் படித்தீர்கள்.

எஸ்.ராஜ்மோகன்,
சம்பூர் - 05

என் வாழ்க்கையிடம் தான் கேட்டுப்படித்தேன்.

● அன்பின் அனுமாரே! ஒரு சில பத்திரிகைகளையோ சஞ்சிகைகளையோ படித்துவிட்டு தாங்களும் அறிவாளிகள் என்று பெருமை அடையும் நபர்களைப் பற்றி என்ன நினைக்கிறீ?

ச.சதுர்சிகன்,
மூங்கிலாறு.

ஒரு பொன்மொழி; கோழி ஒரு முட்டை இட்டுவிட்டு கொக்கரித்துத் திரியும். ஆமை ஆயிரம் முட்டை இட்டுவிட்டு அமைதியாய்ப் போகும்.

● அனுமாரே! அமெரிக்கா புலிகளை மீண்டும் சேர்த்து பயங்கரவாதப் பட்டியலை வெளியிட்டிருக்கிறதே!

சிவனேஸ்வரன்,
கிளிநொச்சி.

புலிகள் இன்னும் தமது பட்டியலை வெளியிடவில்லையே.

● தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தமக்கு எது இல்லை என்று கவலைப்படுவார்கள்?

அ.றஞ்சீத்,
திருகோணமலை.

வால் இல்லையே என்று. விசுவாசத்தைக் காட்ட அது வசதியானது இல்லையா!

● அன்பின் அனுமாரே! யாழ்ப்பாணத்தில் தற்பொழுது இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

கே.ராகவன்.
மல்லாகம்.

நினைத்த நேரம் நினைத்தவர்களை அடித்து விட்டுப்போகலாம். கொன்றுவிட்டுப் போகலாம். என்று நினைத்தவர்களுக்கு ''நாங்கள் இப்பொழுது எடுப்பார் கைப்பிள்ளை இல்லை" என்பதனை காட்டியிருக் கிறார்கள்.

● அனுமாரே!இரவு விளக்கு வைத்த பின்பு வீட்டு முற்றம் கூட்டக் கூடாது என்பார்கள். இதன் காரணத்தை குறிப்பிடுங்களேன்.

இ.கேசவன்,
வட்டக்கச்சி.

இடைக்கால அரசு கொடுக்கலாம் என்பார்கள் ஆனால் இப்பொழுது கொடுக்க முடியாது என்பார்கள். எல்லாம் கூடக்குறைய போய்விடக் கூடாது என்பதற்காகத் தான்.

● அனுமாரே! அண்மையில் வெளியான ஒரு பாடலில் "கற்க கசடறக் கற்றவை கற்றபின் மறக்கச் செய்வது லவ்வாகும்.'' இது உண்மையா?

க.சத்தியா,
கிளிநொச்சி.

கற்கும் பொழுதினில் லவ்வினுள் மூழ்கினால் கசடறக் கற்பது பொய்யாகும்.

● ஒரு ஆண் ஒரு பெண்ணால் ஏமாற்றமடையும் போது அவ் ஆண் பிறபெண்களை வெறுப்பது ஏன்?

தேவகி,
வட்டக்கச்சி.

''கண்கெட்டபின்பே சூரிய உதயம் எந்தப்பக்கம் இருந்தால் எனக்கென்ன போடி" என்று அவர் நினைத்தால் அதில் பிழை இல்லையே.

● டக்கிளஸ் தேவானந்தா தன்னை பனங்காட்டு நரி என்கிறாரே?

குணம்,
உரும்பிராய்.

அது சரி. அந்தாள் சலசலப்புக்கு அஞ்சாது. புலி உறுமினால் தான் குலை நடுங்கி கொழும்பில சந்திரிகா வீட்டுக் கோடிக்க பதுங்கும். இல்லாட்டி 'பனங்காட்டுக்க' தான் ஊளையிடும்.

● அனுமாரே! பெண்களின் மகிமை எது?

சுரேஸ்,
வவுனியா.

தாய்மைதான். ஒரு மேற்கத்தேய சிந்தனாவாதி சொன்னது ''கடவுள், தான் எல்லா இடத்திலும் எல்லா நேரங்களிலும் இருக்க முடியாது என்பதால்தான் அம்மா என்றொரு பாத்திரத்தைப் படைத் தான்.

● இடைக்கால நிர்வாகசபை என்னவாகும்?

சிவந்தன்,
கந்தர்மடம்.

அடுப்பில்வைக்காமலே கொதிக்கும்.

● அனுமாரே! திருமணத்தின்போது பெண்கள் ஆண்களுக்குத் தாலிகட்டினால் என்ன சொல்வார்கள்.

பிரியன்,
தர்மபுரம்.

ஆண்களுக்குத் தாலிகட்டுவது பெண் ஒடுக்குமுறை என்பார்கள் சிலகாலத்தில்.

● அறிவுடைய அனுமாரே! எமது வகுப்பாசிரியர் எனது நண்பனுக்கு சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்த மாதிரி இருக்கிறாய் எனத் திட்டிவிட்டார். அது என்ன சிதம்பர சக்கரத்தை பேய்பார்த்த மாதிரி என்றால்?

செ.கானப்பிரியா,
மல்லாவி.

உங்கள் வகுப்பாசிரியர் நண்பனை திட்டுவதற்கு ஒருகணம் முன்பு உங்கள் நண்பன் இருந்தகோலம். சரிதானே.

● அன்பின் அனுமாரே! மொழி மனிதரைச் சேர்த்துவைப்பதற்கும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும் பெரிதும் உதவியாக உள்ளது என நான் நினைக்கிறேன். அதுவும் குறிப்பாக ஆங்கில மொழி. ஆனால் ஆங்கிலம் கதைப்பவர்களைப் பார்த்து ஏளனம் செய்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ரதி,
வவுனியா.

புரிந்து கொள்பவருடன் எவ்வளவும் கதைக்கலாம். என்னமொழியிலும் கதைக்கலாம். ஏன் புரியாதவர்களுடன் கதைத்து கழுத்தறுக்கிறீர்கள். அதைத்தான் ஏளனம் செய்கிறார்கள்.

● வாழ்க்கையில் வேதனை சோதனை வருவது சகஜம் ஆனால் வாழ்க்கையே வேதனையாகவும் சோதனையாகவும் இருந்தால் என்னசெய்யலாம்.

த.சேம்,
உடையார்கட்டு.

வாழ்க்கையில் இடையிடையே வருவது உங்களுடன் நிரந்தரமாக வந்துவிட்டதா? இலகுவான வழி உங்கள் வாழ்க்கையை விட்டு நீங்கள் புறப்பட்டால் என்ன.

● உச்சத்துப் பல்லி சொன்னால் எல்லாம் உண்மை என்பார்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

அ.நிலக்ஷி,
வட்டக்கச்சி.

பலிக்குதோ பலிக்கவில்லையோ. பல்லி என்னசொல்லுகிறதென்றாவது தெரியவேண்டுமே.

● அனுமாரே! சில ஆண்கள் காதலிக்கும் போது சீதனம் வேண்டாம் என்கிறார்கள் கல்யாணம் என்று வந்தவுடன் சீதனம் வேண்டும் என்கிறார்கள். ஏன்?

சர்மா.
வட்டக்கச்சி.

காதலிக்கும் போதே சீதனம் கேட்டால் கல்யாணம் வரைக்கும் வராது என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவ்வளவுதான்.

● அன்பின் அனுமாரே! புனிதமான காதலை பிசாசு பேய் என்றெல்லாம் கவிஞர்கள் வர்ணிப்பது ஏன்?

எஸ். வசந்தி,
வட்டக்கச்சி.

பிசாசு பேய்களிலும் புனிதமானவை இருக்கலாம் தானே; புனிதமான காதலே இருக்கும்போது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –38



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –38

..............................
..............................
..............................
..............................

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –37



த.க.லிங்கராஜா,
127,இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

நாமறிவோம் நீ கொடிய விஷப்பருந்து – நேற்று
எச்சமிட்டாய் எம் தலையில் விண்ணில் இருந்து
ஆனாலும் தருகின்றோம் இன்றுனக்கு விருந்து
தருவாயா நீயெமக்கு சமாதான மருந்து?

### பாராட்டுக்குரிய வரிகள்

அகன்ற வானின் மீது வந்து எம்மை
அழிந்து போ என்று கொட்டினர் குண்டை - அன்று
எரிந்த சூரியனாய் எழுந்தான் எம்தலைவன்
விரிந்த கைகளோடு எம் காலடி தேடி வருகிறார் இன்று.

செந்தூரன்,
கிளிநொச்சி.

எம்மண்ணில் தினம் வந்திறங்கி
எம்மவரை ஏற்றிச்சென்றாலும்
அந்நாளில் செய் கொடுமை
எந்நாளும் நாம் மறவோம்.

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

புலிக்கொடியின் தலைவன் படை - அன்று
பல ஹெலியை அழித்த சாதனைக்கு
சிங்கக்கொடியுடையோர் சிந்தித்து - இன்று
சிறப்புப்பரிசாக எமக்களித்த ஹெலி இதுவோ!

ப.கிருஷ்ணபிள்ளை,
முத்துஐயன் கட்டு.

ஊரோடு எம் உறவுகளை உருகுலைத்தாய்
உலகமெல்லாம் புலி உயிர் எடுத்தேன் என்றாய்
எம்தலைவன் கொண்ட யுக்தியால்.
உலகறிய வரிப்புலிகளை காவிச்செல்கிறாய்.

த.செல்வி,
புதுக்குடியிருப்பு.

புலிகளை அழிப்பதென்று ஹெலி எடுத்த வான் படையே!
புலிகள் படை பல ஹெலி வீழ்த்த கிலி அடைந்தீர்!
வலிய எம்தலைவன் போர் நிறுத்த! பேச்சுவார்த்தை-என்று
ஹெலி அனுப்பும் உமது நிலை புரிகிறதா? -இன்று.

கி.சரிதா,
புதுக்குடியிருப்பு.

அன்று ஊர்களில் குண்டு பொழிந்தாய்
இன்று அமைதிப்புறாவாக வருகிறாய்
நாளை எதற்கும் தயார் நிலையில்
தலைவன் வழியில் அணி திரள்வோம்.

T.ரவ்பிக்,
மன்னார்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம்
புதுக்குடியிருப்பு வழங்குகின்றது. கிளிநொச்சி.

☞ சிறந்த சிந்தனைகள், இதயத்திலிருந்து வருபவை. –வொவனார்க்







# அறிமுகம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதல் படையணியான சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் பத்தாண்டு கால போர் வரலாற்றையும் அதில் வீரகாவியமான வீரர்களின் பெயர்கள் மற்றும் பலவிடையங்களைத் தாங்கியவாறு நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் எனும் நூல் வெளிவந்துள்ளது. இதன் அறிமுகவிழா அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றபொழுது முதல்பிரதியை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு.இளங்குமரன் அவர்கள் பெற்றுக்கொள்வதையும் தொடர்ந்து நூல் அறிமுக உரையை தளபதி கேணல். பால்ராஜ் அவர்கள் நிகழ்ந்துவதையும் படங்களில்காணலாம்.










'இப்'பத்திரிகை' கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.